
ஹலோ,
போலீஸ்
ஸ்டேஷனா?
LIFCO
துப்பறியும் நவீனம்
ஆர். எஸ். மணி

# ஹலோ, போலீஸ் ஸ்டேஷனா?

A/561
351

எழுதியவர்

**ஆர். எஸ். மணி**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

LIFCO

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி**

தியாகராயநகர் :: சென்னை-17

FIRST EDITION : FEBRUARY 1957

ALL RIGHTS RESERVED
BY THE PUBLISHERS

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 728
நன்கொடை எண்: 728

விலை ரூ. 1-0-0

மதுரை காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் நூல...
தமிழியல் துறை

இது ஆர். எஸ். மணி எழுதிய 41-வது நாவல்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27-1-1979

எங்கள் பிரசுராலயத்தின் மூலம் வெளிவந்திருக்கும்

**ஆசிரியர் ஆர். எஸ். மணி எழுதிய**
**துப்பறியும் நவீனங்கள்**

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| அந்தக் குரல் | ... | 1 | 0 |
| சின்னமலைச் சாமியார் | ... | 1 | 4 |
| கடைசிக் கடிதம் | ... | 1 | 0 |
| காதில் விழுந்தது | ... | 1 | 0 |
| ஹலோ, போலீஸ் ஸ்டேஷனா? | ... | 1 | 0 |
| பார்க்காதே, பயப்படுவாய்! | ... | 1 | 0 |
| மறையும் மாயாவி | ... | 1 | 0 |
| கதவைத் தட்டிய கை! | ... | 1 | 0 |

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை—17.**

---

ஆசிரியர் ஆர். எஸ். மணி எழுதிய இதர துப்பறியும் நவீனங்களும் எங்களிடம் கிடைக்கும்.

**இப்புத்தகத்தைப்பற்றி...............**

சென்னையில் இருக்கும் இரண்டு பிரபல ஆராய்ச்சியாளர்களின் உடல் நிலை திடீரென்று பாதிக்கப்படுகிறது. ஒருவர் பிழைத்துக் கொள்கிறார். மற்றொருவர் மரணமடைகிறார். அது பார்ப்பதற்குச் சாதாரண மரணம்போல் தோற்றமளித்தபோதிலும் தந்திரமாகச் செய்யப்பட்ட கொலை என்று தீர்மானித்துப் போலீசார் புலன் விசாரிக்கிறார்கள். இறந்து போனவரின் வீட்டில் இருக்கும் வேலைக்காரி, அவரைப் பயமுறுத்தி வந்த அவருடைய மனைவி, அவருடைய பிடிவாதத்தைப் போக்க முயன்ற அவர் சகோதரியின் மகன், அவர் தன் வாரிசாக நியமித்திருந்த வக்கீல் ஆகிய அனைவரின்மீதும் சந்தேகம் எழுகிறது. துப்பறியும் துளசிங்கம் ஒவ்வொருவரையும் விசாரிக்கிறார். ஒவ்வொருவரின் வாக்குமூலமும் ஒவ்வொரு புதிய உண்மையை வெளிப்படுத்துகின்றது. கடைசியில் துப்பறிபவரே குற்றவாளியின் சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொண்டு விடுகிறார். முடிவு? படித்துப் பாருங்கள்!

தி.க.சண்முகம் நூலகம்

# ஹலோ, போலீஸ் ஸ்டேஷனா?

இரவு ஒன்பது மணிக்குமேலிருக்கும். குளிர்காலமாகையினால் எங்கும் மூடுபனி கவிந்துகொண்டிருந்தது. ஜன நடமாட்டம் வெகுவாய்க் குறைந்திருந்த போதிலும், வீதிகளில் நடமாடுவோரின் முகத்தைச் சரியாகப் பார்க்க முடியாதபடி செய்துகொண்டிருந்தது பரவிக் கிடந்த பனிப்படலம். அந்த மூடுபனியைக் கிழித்துக்கொண்டு வெகு வேகமாக ஒரு கார், மாம்பலத்தில் இருக்கும் உஸ்மான் ரோட்டில் வந்துகொண்டிருந்தது. அந்தக் காரின் முன்னாலிருந்த இரண்டு பிரகாசமான விளக்குகளும் ஒரு பூதத்தின் பயங்கரக் கண்களைப்போல் காட்சியளித்தன. பனிப்படலத்தை விலக்கிய வண்ணம் விரைந்து வந்து கொண்டிருந்த அந்த மோட்டார் வண்டி உஸ்மான் ரோட்டில் பனகல் பார்க்குக்கு எதிரில் இருக்கும் இரண்டடுக்கு பங்களாவின் முன்னால் வந்து குலுங்கி நின்றது. குளிரிலிருந்து பாதுகாத்துக்கொள்ளக் கம்பளிக் கோட்டு, நிஜார் முதலியவைகளை அணிந்துகொண்டிருந்த துப்பறியும் துளசிங்கம் அந்த வண்டியிலிருந்து வெளியே இறங்கினார். மறுகணம் வண்டி சென்றுவிட்டது. கோட்டுப் பையிலிருந்து டைரியை எடுத்து அதில் எழுதியிருந்த வீட்டின் நெம்பரைப் பார்த்துக் கவனப்படுத்திக்கொண்டார். பிறகு டார்ச் விளக்கொளியினால் அந்தப் பங்களாவின் முகப்பிலிருந்த நெம்பரைக் கவனித்தார். தான் தேடி வந்திருக்கும் வீடு அதுதான் என்று அவருக்கு விளங்கி விட்டது! அந்தப் பங்களாவின்மீது ஒருமுறை கண்ணோட்டம் செலுத்திவிட்டு முன்னாலிருந்த இரும்பு கேட்டைத் திறந்துகொண்டு பங்களாவினுள் பிரவேசித்தார் துளசிங்கம்.

பங்களாவின் முன் வராந்தாவில் பொறுமையின்றி முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான் ஒரு கான்ஸ்டேபிள். துளசிங்கத்தைப் பார்த்தவுடன் அவனுடைய பரபரப்பு அதிகமாகியது. வராந்தாவில் வந்து நின்ற அவருக்கு ஸல்யூட் அடித்துவிட்டு ஒதுங்கி நின்றான் அவன்.

“என்ன கந்தசாமி! என்ன சமாச்சாரம்? இன்ஸ்பெக்டர் சங்கரன் இந்த வீட்டு விலாசத்தைக் கொடுத்து என்னை இங்கு அனுப்பினார். உன்னை அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்தார்...” என்றார் துளசிங்கம்.

“ஆமாம் ஸார்! எவனோ இந்த வீட்டினுள் புகுந்து கொள்ளையடித்துவிட்டதாக ஆதிகேசவன்

என்பவர் டெலிபோன் செய்தார். அதனால்தான் இன்ஸ்பெக்டர் என்னை இங்கு அனுப்பினார்!"

"அப்படியா? அந்த ஆசாமி எங்கே?"

"உடம்பு சரியாக இல்லை என்று மாடியில் படுத்துக்கொண்டிருக்கிறார்".

"அவருக்குத் திடீரென்று அப்படி என்ன உடம்பு?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் துளசிங்கம்.

"நான் வந்தபோது நன்றாகத்தான் இருந்தார். என்னை வரவேற்று என்னிடம் பேச முயன்ற போது திடீரென்று வயிற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டார். உடம்பு ஆடியது; முகம் விகாரமாகியது. அவர் உண்ட ஆகாரத்தில் ஏதோ கோளாறு இருக்க வேண்டும் என்றும், அதனால் தான் அவருடைய உடல் நிலை அப்படி மாறி விட்டது என்றும் நான் புரிந்துகொண்டேன். 'டாக்டரை வரவழைக்கட்டுமா' என்று கேட்டேன். ஓய்வு எடுத்துக் கொண்டால் உடம்பு சரியாகி விடும் என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்று விட்டார். நீங்கள் விரைவில் வந்து விடுவீர்கள் என்று எனக்குத் தெரியுமாகையினால் மேற்கொண்டு நான் ஒன்றும் அவரை விசாரிக்கவில்லை" என்றான் கான்ஸ்டேபிள் கந்தசாமி.

அவனை அங்கேயே இருக்கும்படி கூறிவிட்டு மாடிக்குச் சென்றார் துப்பறியும் துளசிங்கம். படிக்கட்டுகளில் நடந்து செல்லும்போதே சுற்று முற்றும் இருக்கும் பொருள்களை அவருடைய விழிகள் கவனித்துக் கொண்டே வந்தன.

கந்தசாமி குறிப்பிட்ட அறை அரைகுறையாகத் திறந்திருந்தது. துளசிங்கம் கதவை நன்றாய்த் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தார், அது ஒரு ரகசியப் பரிசோதனைச் சாலையைப் போல் காட்சி அளித்தது. சுவரை ஒட்டினாற் போல் இருந்த பெஞ்சுகளில் கண்ணாடிப் புட்டிகளும் குழாய்களும் வைக்கப்பட்டிருந்தன, அவைகளில் வலது பக்கமாக நீண்ட கண்ணாடிக் குழாய் ஒன்று சிதறித் தரையில் கண்ணாடித் துண்டுகளாகக் கிடந்தது. அவ்வறையின் ஒரு பக்கமாகக் கிடந்த ஆடும் பிரம்பு நாற்காலியில் வலது கரத்தினால் நெற்றியை அழுத்திப் பிடித்த வண்ணம் சாய்ந்து லேசாக ஆடிக் கொண்டிருந்தார் ஒருவர், அவருடைய விழிகள் இடுங்கிப் போயிருந்தன. தலைமயிர் கலைந்து கிடந்தது. முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள் அரும்பி நின்றிருந்தன, உடம்பு ஒடுங்கிப் போய் இருந்தது. அவைகளிலிருந்து தான் தேடிக்கொண்டு வந்திருக்கும் ஆசாமி அவராகத்

தான் இருக்கவேண்டும் என்று புரிந்து கொண்டு பேச ஆரம்பித்தார் துளசிங்கம்.

"நீங்கள் தானே மிஸ்டர் ஆதிகேசவன்?" என்று விசாரித்தார் துளசிங்கம்.

அவர் தலையைச் சற்று உயர்த்தி விழிகளை உருட்டித் தன் முன்னால் நின்று கொண்டிருக்கும் துளசிங்கத்தைப் பார்த்தது, 'நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டது போல் இருந்தது.

"என் பெயர் துளசிங்கம், ஒரு துப்பறிபவன். போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வந்திருக்கிறேன்" என்று துளசிங்கம் கூறிய பிறகுதான் தலையை அசைத்து அவரை வரவேற்றார் அவர்.

"ஓ! துப்பறியும் துளசிங்கமா? வணக்கம் சார். நான்தான் ஆதிகேசவன். உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நேரில் பார்த்தது இல்லை. ஒவ்வொரு நிமிடமும் என் உடல் நிலை மோசமாகிக் கொண்டு வருகிறது. நான் உண்ட உணவில் ஏதாவது கோளாறு இருந்ததோ என்னவோ? சாப்பிட்டதிலிருந்து என் உடம்பு ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது! இருந்தாலும் என்னால் முடிந்தவரை நடந்த விஷயங்களைச் சொல்லி விடுகிறேன்" என்று கூறினார் தயக்கமும் தடுமாற்றமும் கலந்த குரலில் அவர். ஆதிகேசவனின் உடல் நிலை மோசமாய் இருப்பது தெரிந்தும் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காக அவரை விசாரித்தார் துளசிங்கம்.

"நான் இந்த அறையினுள் பிரவேசித்தவுடனேயே நீங்கள் குறிப்பிட்டதுபோல யாரோ இவ்வறையினுள் பலவந்தமாக நுழைந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். ஏதாவது பொருள்கள் காணமல் போய் விட்டனவா?"

"எனக்குத் தெரிந்த வரையில் எந்தப் பொருளும் களவாடப் படவில்லை. ரசாயனப் பரிசோதனைப் பொருள்கள் தான் பாழாகி விட்டன. அதுவும் நல்ல சமயத்தில் உடைக்கப்பட்டு இருக்கின்றன!"

"அப்படியானால் இங்கு நடக்கும் ஆராய்ச்சியைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் குற்றவாளி அவ்வாறு செய்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்களா?"

"அப்படி நான் சொல்லவில்லை. எல்லா விஷயங்களும் தெரிந்தால்தான் உங்களுக்கு உண்மை விளங்கும். நானும் என்னுடைய நண்பர் தில்லைநாயகமும் இங்கு ஒரு முக்கிய ரசாயன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தோம். நாங்கள் இருவரும் விஞ்ஞான

அறிவு பெற்றிருந்தபடியால்தான் அந்த ஆராய்ச்சியில் இறங்கினோம். கொஞ்ச காலத்திற்கு முன்பு ஒரு மரப்பட்டையிலிருந்து போலிப் பஞ்சைத் தயாரிக்கும் வழியைக் கண்டு பிடித்தோம். அதைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். ரோஜா மலர் இல்லாமலேயே ரோஜா மணத்தை உண்டாக்குவது எப்படி? பருத்திச் செடிகளிலேயே பலவித கலர் பஞ்சுகள் உண்டாகச் செய்வது எப்படி? என்பது போன்ற ஆராய்ச்சிகளைச் செய்து அதில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம். சில நாட்களுக்கு முன்பு, குறிப்பிட்ட பழம் ஒன்றைச் சாப்பிட்டால் பசியே எடுக்காது என்ற செய்தி வெளியாகியிருந்தது! அந்த அதிசயக் கனியைப்பற்றி ஆராய்ச்சி செய்வது என்று தீர்மானித்திருந்தோம். நாங்கள் இருவரும் ஒரே விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த போதிலும் தனித்தனியாகத் தான் வேலை செய்து வந்தோம். நான் இந்த அறையில் என் பரிசோதனைகளைச் செய்து வந்தேன். தில்லைநாயகம் மற்ெருரு பகுதியில் இருக்கும் ஆராய்ச்சி அறையில் பரிசோதனைகளைச் செய்து வந்தார்.

"நாங்கள் கொஞ்ச நாட்களாக மும்முரமாய் வேலை செய்து வந்தோம். எங்கள் ஆராய்ச்சி அநேகமாக வெற்றி பெறும் தருவாயில் இருந்தது. விரைவில் வெற்றி காண வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இருவரும் அவ்வாறு தனித்தனியாக வேலை செய்து வந்தோம். நான் வழக்கம்போல் இன்று காலை எட்டு மணிக்கு இந்த அறைக்கு வந்து சேர்ந்தேன். அப்பொழுது இந்த அறை ஒழுங்காகத்தான் இருந்தது. தில்லைநாயகம் வெளியூருக்கு சென்றிருந்தபடியால் ஒரு மணி நேரம் கழித்துத்தான் வந்து சேர்ந்தார். சாப்பிடுவதற்காகச் சுமார் பன்னிரண்டரை மணிக்கு வெளியே சென்ற நான் ஒன்றரை மணிக்கு முன்பு திரும்பி வந்து விட்டேன். எனக்குப் பிறகு தில்லைநாயகம் சாப்பிடச் சென்று இரண்டு மணிக்குப் பிறகு வந்தார். நாங்கள் இருவரும் மாலை ஆறரை மணி வரையில் எங்கள் ஆராய்ச்சியில் ஆழ்ந்து கிடந்தோம்" என்று கூறிவிட்டுச் சற்று நிதானித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு தொடர்ந்து பேசுவதற்கான சக்தியை வரவழைத்துக் கொண்டார்.

"நீங்கள் வழக்கமாக எவ்வளவு நேரம் வரையில் இங்கு காத்திருப்பீர்கள்?" என்று குறுக்கிட்டார் துளசிங்கம்.

"மாலை ஆறு மணிக்கு முன்பு வெளியேறியதில்லை. சிற்சில சமயங்களில் நேரம் போனதே தெரியாமல் கூட இருந்திருக்கிறோம். ஆறரை மணி சுமாருக்கு தில்லைநாயகம் இந்த அறைக்கு

வந்தார். வீட்டிற்குப் போகப் போவதாகச் சொன்னார். நான் எல்லாவற்றையும் எடுத்து ஒழுங்குபடுத்தி வைத்து விட்டுச் சில நிமிடங்களுக்குள் அவருடன் புறப்பட்டு விட்டேன், நாங்கள் இருவரும் பாண்டி பஜாரில் இருக்கும் நளினா கேபியில் சிற்றுண்டி புசித்து விட்டுச் செல்லத் தீர்மானித்திருந்தோம். ஆகவே, பனகல் பார்க்கினுள் நுழைந்து எங்கள் ஆராய்ச்சி சம்பந்தமான குறிப்புகளைப் பேசிய வண்ணம் நடந்து கொண்டிருந்தோம். நான் கண்டு பிடித்த உண்மைகளையும் அவர் ஆராய்ந்தறிந்திருந்த விஷயங்களையும் ஒன்று சேர்த்துப் பார்த்தபோது இன்னும் சில மணி நேரங்கள் தொடர்ந்து வேலை செய்தால், அந்த ஆராய்ச்சி முற்றுப் பெற்று விடும்போல் தோன்றியது. ஆகவே நான் அன்று இரவு தொடர்ந்து அந்த ஆராய்ச்சியை நடத்தப் போவதாய்க் கூறினேன். என் விருப்பத்திற்கு அவர் தடை சொல்லவில்லை. நளினா கேபிற்குச் சென்று சிற்றுண்டி புசித்து விட்டு வெளியே வந்தபோது எட்டு மணிக்கு மேலாகி விட்டது. தில்லைநாயகம் ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்து கொண்டு தன்னுடைய இருப்பிடத்திற்குப் புறப்பட்டு விட்டார். நான் அவரை வழியனுப்பிவிட்டு இங்கு திரும்பி வந்தேன். வீட்டினுள் நுழைந்து இந்த அறையை அடையும் வரையில் எந்த விதமான மாறுதலும் இல்லை. ஆனால் இவ்வறையினுள் நுழைந்த பிறகு.........'

"மிஸ்டர் ஆதிகேசவன்! நீங்கள் தில்லைநாயகத்துடன் சென்றபோது வீட்டைப் பூட்டிக்கொண்டுதானே சென்றீர்கள்?"

"ஆமாம்."

"அப்படியானால் நீங்கள் வந்தபோது அந்தப் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததா?"

"இல்லை, பூட்டியபடிதான் இருந்தது!"

"அவ்வாறானால், நீங்கள் இருவரும் வெளியே புறப்படுவதற்கு முன்பு குற்றவாளி இவ் வீட்டினுள் புகுந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?"

"அப்படி நினைப்பதற்கு இடமில்லை. இந்த வீட்டில் நுழைந்து எங்கள் ஆராய்ச்சியைப் பாழாக்குவதினால் யாருக்கு என்ன லாபம் இருக்கப்போகிறது?"

"உங்கள் ஆராய்ச்சியின் மீது பொறாமை கொண்ட யாராவது அப்படிச் செய்திருக்கலாமல்லவா? நீங்கள் வெளியே

சென்றதைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டு, மாறு சாவி போட்டுத் திறந்து, விட்டினுள் புகுந்து பரிசோதனைக் கருவிகளைப் பாழ்படுத்தி விட்டு மறுபடியும் பூட்டிக் கொண்டு சென்றிருக்கலாம் அல்லவா ?"

"எங்கள் ஆராய்ச்சியைப் பாழாக்குமளவிற்குப் பொறாமை கொண்ட விரோதிகள் ஒருவரும் இல்லை."

"அது சரி. அப்புறம்?"

"அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து மின்சார விளக்கை அழுத்தினேன். விளக்கொளி படர்ந்தவுடன் என் பார்வை தரையில் சிதறிக்கிடந்த கண்ணாடித் துண்டுகளின் மீது விழுந்தது. கண்ணாடிக்குழாய்கள் உடைக்கப் பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்தேன். கலவரமும் குழப்பமும் அடைந்த நான் தில்லைநாயகத்தின் அறையின் பக்கம் சென்றேன். அவ்வறையின் கதவு அரை குறையாகத் திறக்கப்பட்டிருந்தது. உள்ளே விளக்கொளியும் இல்லை. அங்கு ஏதாவது விபரீதம் நடந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும் போலிருந்தது எனக்கு. ஆனால் திடீரென்று வயிற்றைப் புரட்ட ஆரம்பித்து உடல் நடுக்கமும், மயக்கம் வருவது போன்ற உணர்ச்சியும் ஏற்பட்டபடியால் திரும்பி என் அறைக்கு வந்து விட்டேன்."

"நீங்கள் இந்த இடத்திற்கு வந்த பிறகு வேறு ஏதாவது விபரீதம் நடந்ததா ?"

"இங்கு திரும்பி வந்தபிறகு எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஒருவன் ஒரு பெருமுயற்சி செய்து அதில் வெற்றி காணும் தருவாயில் திடீரென்று அவனுடைய முயற்சிகளை முறியடித்தால் எவ்வித மனத்துடிப்பு ஏற்படுமோ அவ்வித உள்ளத்துடிப்புதான் எனக்கு அப்பொழுது ஏற்பட்டது. உடனே போலீசுக்குப் போன் செய்து விட்டு இந்த நாற்காலியில் அமர்ந்து விட்டேன்."

"நீங்கள் செய்யும் இந்தப் பரிசோதனைக்குப் போட்டியாக வேறு யாராவது இதே பரீட்சை செய்து வருகிறார்களா ?"

"நாங்கள் என்ன ஆராய்ச்சி செய்கிறோம் என்று எங்களைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. சென்னை மாகாணத்தில் நாங்கள் செய்யும் ஆராய்ச்சியை வேறு எவரும் செய்யவில்லை என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும்."

"உங்களுக்குப் போட்டியாக ஒருவரும் இல்லை என்று சொல்லுகிறீர்கள் ! உங்களுக்கு விரோதிகளும் இல்லை என்கிறீர்கள் ! ஆனால் யாரோ உங்களுடைய அபிவிருத்தியைத்

தாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இவ்வாறு செய்திருக்கிறார்கள் என்று நிச்சயமாய்க் கூறுவேன். உங்கள் நண்பர்களிடமாவது அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களிடமாவது எப்பொழுதாவது எந்த முறையிலாவது நீங்கள் செய்யும் ஆராய்ச்சியைப்பற்றி வெளிப்படுத்தியது உண்டா?''

''இந்த விஷயத்தில் நாங்கள் இருவரும் என்றும் ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்கிறோம். நாங்கள் ஆராய்ச்சி செய்யும் சமயத்தில் ஒருவரும் இங்கு வருவது இல்லை. அப்படி யாராவது வந்தால் அவர்களை நாங்கள் ஆராய்ச்சி அறையினுள் அனுமதிக்க மாட்டோம், ஒரு வேளை அவர்கள் அப்படி ஏதாவது கேட்டாலும் நேர் விரோதமாக எதையாவது சொல்லி அனுப்பி விடுவோம். அத்துடன் நாங்கள் செய்யும் ஆராய்ச்சியின் ரகசியங்கள் வெளிப்பட்டு விடப்போகிறதே என்று நாங்கள் கண்டு பிடிக்கும் உண்மைகளையும் ஆராய்ச்சி சம்பந்தமான குறிப்புகளையும், ஒரு காகிதத்தில் எழுதி வீட்டிற்குக் கொண்டு போய் விடுவோம். இந்த விஷயத்தில் தில்லைநாயகம் என்னைவிட முன் ஜாக்கிரதை மிகுந்தவர். நீங்கள் சந்தேகிப்பது போல் எங்கள் ஆராய்ச்சியின் மூலம் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இங்கு வந்திருந்தால் இவ்வாறு அவன் பரிசோதனைக் கருவிகளைப் பாழ் படுத்தியிருக்க மாட்டான்!''

''ஆராய்ச்சி சம்பந்தமாய் உதவி செய்ய நீங்கள் வேறு யாரையாவது நியமித்திருக்கிறீர்களா?''

''இல்லை! இந்த மாதிரியான விஷயங்களில் உதவிக்கு வேறு ஒருவரை நியமித்துக் கொள்வது மிகவும் அபாயகரமானது. நம்மிடமிருந்து விஷயங்களைக் கற்றுக்கொண்டு பிறகு நம்மையே எதிர்த்து நிற்க ஆரம்பித்து விடுவார்கள். அதனால்தான் நாங்கள் உதவி செய்ய ஒருவரையும் நியமித்துக் கொள்ளவில்லை.''

''தில்லைநாயகத்தின் அறையைப் பரிசோதிக்க விரும்புகிறேன். உங்களால் எழுந்து வர இயலுமா?'' என்று கேட்டார் துளசிங்கம். உடலில் தளர்ச்சியும் பார்வையில் தடுமாற்றமும் ஏற்பட்ட போதிலும் மிகுந்த பிரயாசையுடன் ராக்கிங் சேரை விட்டு எழுந்து துளசிங்கத்துடன் நடந்தார் ஆதிகேசவன். தில்லைநாயக்த்தின் அறைக் கதவு அரை குறையாகத் திறக்கப்பட்டிருந்தது. துளசிங்கம் முதலில் உள்ளே பிரவேசித்தார். கோட்டுப் பையிலிருந்து டார்ச்சைக் கையில் எடுத்து மின்சார விசையைத் தேடி விளக்கைப் போட்டார்.

ஆதிகேசவனின் அறையைப் போலத்தான் விசித்திரமான ரசாயன புட்டிகளுடனும் கண்ணுடிக் குழாய்களுடனும் காணப் பட்டது அந்த அறை. அங்கு எந்த விதமான சேதமும் ஏற்பட் டிருக்க வில்லை. இருவரும் அந்த அறையினுள் இருந்த பொருள் களின் மீது ஒரு முறை கண்ணேட்டம் விட்டனர்.''

''நான் இந்த அறைக்கு வந்து பல நாட்கள் ஆகிவிட்டன. அவர் இங்கு என்னென்ன வைத்திருந்தார் என்பது எனக்குத் தெரியாது. ஆனல் இங்கு இருக்கும் நிலையிலிருந்து இந்த அறையி னுள் ஒருவரும் வரவில்லை, எந்தப் பொருளும் கையாளப்பட வில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. தில்லைநாயகம் இருந்திருந்தால் உண்மையைக் கண்டு பிடித்திருக்கலாம்.''

" அப்படியா ? அவர் எங்கு வசிக்கிருர் ?

" அடையாறில் வசித்து வருகிருர்.''

" அவருடைய வீட்டில் டெலிபோன் இருக்கிறதா ? "

" சமீபத்தில் தான் அவருக்கு டெலிபோன் கனெக்ஷன் கிடைத்தது.''

" சரி, டெலிபோன் செய்து அவரை உடனே வரவழைக்கி றேன். அப்பொழுது நம்முடைய சந்தேகம் தீர்ந்து விடுமல்லவா?'' என்று துளசிங்கம் கூறியவண்ணம் டெலிபோன் டைரக்டரியை புரட்டி தில்லைநாயகத்தின் நெம்பரைக் கண்டு பிடித்து அவரைக் கூப்பிட்டார். சுமார் பத்து நிமிடங்களாகியும் டெலிபோன் மணி மட்டும் அடித்துக்கொண்டிருந்ததே தவிர பதில் வரவில்லை. ஏமாற்றத்துடன் டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்து விட் டார். தில்லைநாயகத்தினிடமிருந்து பதில் வரவில்லை என்பதைக் கேள்விப்பட்டுத் திகைப்படைந்து போனர் ஆதிகேசவன்.

''அவர் எட்டரை மணிக்கே வீட்டிற்குப் போய்ச் சேர்ந் திருக்க வேண்டும். அவர் வீட்டில் இல்லாவிட்டால் அந்த வீட்டைக் கவனித்துக் கொள்ளும் காந்திமதியாவது பதில் சொல்லி யிருக்க வேண்டுமே ? அவள் ஒரு போதும் எந்தக் காரணம் கொண்டும் வெளியே செல்லமாட்டாளே'' என்று வியப்புடன் கூறினர் ஆதிகேசவன்.

" சரி, நான் அங்கேயே சென்று அவரை விசாரித்து விட்டு வருகிறேன். அதற்குள் இந்த அறையைப் பரிசோதனை செய்து விடுவது நல்லதல்லவா ?'' என்று கூறிவிட்டு மாறு சாவியினல் அந்த அறையில் இருந்த மேசை டிராயரைத் திறந்தார் துள சிங்கம். அதில் ஏதோ சில கடிதங்களும் துண்டுக் காகிதங்களும்

இருந்தன. ஆராய்ச்சி சம்பந்தமான எந்த விதமான குறிப்பும் அங்கு காணப்படவில்லை! ஆதிகேசவன் கூறியது போல் அவைகளை அவரே எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார் துளசிங்கம். ஆயினும் அவருக்கு ஒருவிதமான சந்தேகம் ஏற்படாமல் இல்லை. கரத்திலிருந்த டார்ச் விளக்கைப் பொருத்தி மேசையின் கீழே கவனித்தார்.

அந்த ஆராய்ச்சி பலனளித்து விட்டது. ஒரு சிறிய கத்தி மேசையின் அடியில் விழுந்து கிடந்தது. அதன் மீது ஒன்றும் காணப்படாததினால் சமீபத்தில்தான் அது அங்கு போடப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்மானித்து அதை ரகசியமாய் எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டார் துளசிங்கம்.

ஆதிகேசவன் தன்னுடைய ஆராய்ச்சிக் கருவிகள் பழுதாக்கப்பட்டதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து போனார். இப்பொழுது தில்லைநாயகத்தைப்பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்காததை அறிந்து திகைப்படைந்தார். இவ்விரண்டும் சேர்ந்து அவருடைய உடல் நிலைமையை மேலும் மோசமாகி விட்டன. அவர் நெற்றியை அழுத்திப் பிடித்துக் கொண்டு பெருமூச்சு வீட்டவண்ணம் மீண்டும் ராக்கிங் சேரில் உட்கார்ந்து விட்டார்.

"மிஸ்டர் ஆதிகேசவன்! நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். குற்றவாளியை எப்படியாவது கண்டு பிடித்து விடுகிறோம்" என்று அவரைத் தேற்றினார் துளசிங்கம்,

"என் உடம்பு என்னவோ செய்கிறது. இனிமேல் என்னால் இங்கே இருக்க முடியாது. நான் என் வீட்டிற்குப் போகிறேன். என் விலாசம் பரமசிவ நாடார் தெரு, மைலாப்பூர். அவசியமானால், அங்கு என்னை வந்து பாருங்கள்" என்றார் அவர். மிகுந்த பிரயாசையுடன் துளசிங்கம் அவருடைய கரங்களைப் பிடித்து அழைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தார். அப்பொழுது அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த டாக்ஸியை நிறுத்தி அதில் ஆதிகேசவனை அமரச் செய்தார். அடுத்த கணம் வண்டி அவருடைய உத்தரவுப்படி மைலாப்பூரை நோக்கிச் சென்றது.

துளசிங்கம் தானும் புறப்படவேண்டும் என்று நினைத்த போது காள்ஸ்டேபிள் கந்தசாமி, "நான் ஒரு விஷயத்தைக் கண்டு பிடித்திருக்கிறேன். சற்று என்னுடன் வருகிறீர்களா?" என்று கேட்டான்.

அந்த வீட்டின் பின்புறமிருந்த பெரிய கண்ணாடி ஜன்னலைச் சுட்டிக் காண்பித்தான் கந்தசாமி. கண்ணாடி உடைக்கப்பட்டிருந்தது! கண்ணாடித் துண்டுகள் உடைந்து உட்புறம் விழுந்து கிடந்தன, உள்ளும் வெளியும் காலடிகள் தென்பட்டன. குற்றவாளி அந்த வழியாகத்தான் அவ் வீட்டினுள் பிரவேசித்திருக்க

வேண்டும் என்று உணர்ந்து கொண்டார் துளசிங்கம். முன்புற மாய் உள்ளே பிரவேசித்தால் யாராவது கவனித்துவிடப் போகிறார்களே என்றுதான் குற்றவாளி அந்தக் கண்ணுடி ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே பிரவேசித்திருக்கிறுன் என்பது விளங்கி விட்டது. அதைப் பற்றிச் சில குறிப்புகளை எழுதி எடுத்துக் கொண்டு கந்தசாமியை அங்கேயே காவலிருக்கும்படி எச்சரித்து விட்டுப் புறப்பட்டார்.

துளசிங்கம் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தபோது இன்ஸ்பெக்டர் சங்கரன் வெளியே சென்றிருந்தார். இரண்டொரு கான்ஸ்டேபிள்களைத் தவிர வேறு எவரும் அங்கு இல்லை. அந்த சமயத்தில் மேசையின் மீதிருந்த டெலிபோன் ஒலித்தது. போனுக்கு அருகே இருந்த துளசிங்கம் ரிஸீவரைக் கையில் எடுத்தார்.

“ஹலோ, போலீஸ் ஸ்டேஷனு ?” என்றது ஒரு பெண்ணின் குரல். அந்தக் குரலில் கலவரமும் பதட்டமும் தென்பட்டன. துளசிங்கம் ஒரு கணம் திகைத்துப்போனுர்.

“ஆமாம்! நீங்கள் யார் ? உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டார் அவர்.

“நான் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலிருந்து பேசுகிறேன். சற்று நேரத்திற்கு முன்பு தில்லைநாயகம் என்பவர் இங்கு அனுமதிக்கப்பட்டார். அவருடைய உடல் நிலை மோசமாய் இருந்தபடியால் அவருடன் ஆராய்ச்சி வேலையில் ஈடுபட்டிருக்கும் ஆதிகேசவன் என்பவருக்குப் போன் செய்து பார்த்தோம். பதில் இல்லை, அவருடைய வீட்டிலும் டெலிபோன் இருப்பதாய்த் தெரியவில்லை. அதனுல்தான் நான் இத்தனை அவசரமாய் உங்களைக் கூப்பிட்டேன்” என்றது அந்தப் பெண்ணின் குரல். அதில் எத்தனை பரபரப்பு!

“என்ன, என்ன ? தில்லைநாயகம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறுரா ? இப்பொழுது அவருடைய உடல் நிலை எப்படியிருக்கிறது ?” என்று ஆவலுடன் கேட்டார் துளசிங்கம்.

ஒரே ஒரு வினுடி மௌனம். பிறகு “சில நிமிடங்களுக்கு முன்பு தில்லைநாயகம் இறந்து விட்டார். அதைத் தெரிவிக்கத் தான் உங்களை இத்தனை அவசரமாய் அழைத்தேன்” என்று சோகத்துடன் பேசினுள் அந்தப் பெண். துளசிங்கம் திடுக்கிட்டுப் போனுர். ‘அந்தப் பெண் யார்? அவளுக்கும் தில்லைநாயகத்திற்கும் என்ன சம்பந்தம் ?’ என்றெல்லாம் பல கேள்விகள் கேட்க அவருடைய நெஞ்சம் துடித்தது. ஆனுல் அந்தப் பெண்மணி ரிஸீவரை வைத்துவிட்டபடியால் பதில் ஒன்றும் வரவில்லை. அளவு மீறிய ஏமாற்றத்துடன் தொப்பென்று ரிஸீவரை வைத்து விட்டார் துப்பறியும் துளசிங்கம்.

மாம்பலத்தில் ஆராய்ச்சிசாலை வைத்திருக்கும் ஆதிகேசவன் திடீரென்று உடல் நலம் குன்றி இருக்கிருர். அடையாறிலிருக்கும் தில்லைநாயகம் இறந்துவிட்டார். இது என்ன விந்தை? துளசிங்கத்திற்கு வியப்பை விளைவித்தது. ஒன்றிற்கு ஒன்று தொடர்பு இருக்க வேண்டும் என்றே தோன்றியது. இந்த விஷயத்தை ஆதிகேசவனிடம் தெரிவிக்க வேண்டியது அத்தியாவசியம் என்று தீர்மானித்து டெலிபோனைக் கையில் எடுத்தார், மைலாப்பூரில் ஆதிகேசவன் வசித்து வந்த வீட்டிற்கு எதிரில் டாக்டர் வீடு இருந்தது. அந்த டாக்டரை துளசிங்கத்திற்கு நன்கு தெரியுமாகையினுல், அவர் மூலம் எதிர் வீட்டிலிருக்கும் ஆதிகேசவனை அழைத்து வரும்படி கூறினுர். அந்த டாக்டர் கூறிய பதில் துளசிங்கத்தின் வியப்பை இன்னும் அதிகப்படுத்தியது! ஆதிகேசவனின் வீட்டு வேலைக்காரன் சற்று நேரத்திற்கு முன்பு தன்னை அவசரமாய் அழைத்ததாயும், தான் சென்று பார்த்த போது ஆதிகேசவன் மூர்ச்சை யடைந்து படுக்கையில் படுத்துக் கிடந்ததாகவும் கூறினுர். அவர் விஷக்கலப்பு கொண்ட சிற்றுண்டியைப் புசித்து இருக்க வேண்டுமென்று உணர்ந்து அதற்கு வேண்டிய சிகிச்சைகளைச் சற்று நேரத்திற்கு முன்புதான் செய்து விட்டு வந்ததாயும், சிலமணி நேரங்களுக்குப் பிறகு தான் அவருக்கு மூர்ச்சை தெளியும் என்றும் பதிலுரைத்தார் அந்த டாக்டர். அவருடைய உயிருக்கும் ஏதாவது அபாயம் ஏற்பட்டு விடப் போகிறதே என்று பயந்து விட்டார் அவர். மறுநாள் அவரைப் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானம் செய்து கொண்டு ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டார் துளசிங்கம்.

அங்கு சென்ற பிறகுதான் அவருக்கு ஒருவாறு விஷயம் விளங்கியது. நளினு கேபிலிருந்து காரில் புறப்பட்ட தில்லைநாயகத்தின் உடல் நிலை முன்னைவிட மோசமாகியது. உடனே காரை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு ஓட்டச் சொன்னுர். அவருடைய விகாரமான முகத்தோற்றத்தையும் மோசமான உடல் நிலைமையையும் கண்டு திடுக்கிட்டுப் போய் விட்டான் அந்த டிரைவர். காரை வேகமாக ஓட்டி வந்து அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டான். ஆஸ்பத்திரியில் அவருடைய உடல் பரிசோதிக்கப்பட்டது. உணவில் விஷக்கலப்பு ஏற்பட்டு அதனுல்தான் அவர் அவ்வித விபரீதத்திற்குள்ளாகி இருக்கிருர் என்று உணர்ந்து அந்த விஷயத்தை அவருடைய உறவினர்களுக்குத் தெரியப்படுத்த

முயன்றார்கள். அந்த முயற்சியின் பயனாக தில்லைநாயகத்தின் கோட்டுப் பையிலிருந்து ஒரு விஸிட்டிங் கார்டு கிடைத்தது. அதிலிருந்துதான் அவர்களுக்கு தில்லைநாயகத்தின் வீட்டு விலாசமும் டெலிபோன் நெம்பரும் கிடைத்தன. உடனே அவளுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது. காந்திமதி அடையாறிலிருந்து உடனே வந்து சேர்ந்தாள். எஜமானரின் அவல நிலைமையைக் கண்டு துடிதுடித்துப்போனாள். அவருக்கு உற்றார் உறவினர்கள் இருக்கிறார்களா என்று ஆஸ்பத்திரியில் அவளை விசாரித்தார்கள். அவருக்கு உறவினர்கள் எவரும் இல்லை என்றும், அவர் கலியாணமானவர் என்றும், ஆனால், மனைவி அவருடன் மனஸ்தாபப் பட்டுக்கொண்டு தனியாக வசிப்பதாயும், அவளுடைய இருப்பிடம் தனக்குத் தெரியாது என்றும் கூறிவிட்டாள். அவளை விசாரித்ததின் பேரில்தான் ஆதிகேசவனைப்பற்றி அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

இந்தச் செய்தி துப்பறியும் துளசிங்கத்திற்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்துவிட்டது. ஆஸ்பத்திரியில் இருந்த நர்ஸ், அவருடைய உடலைப் பரிசோதனை செய்த டாக்டர், தில்லைநாயகத்தைக் கொண்டு வந்துவிட்ட டாக்ஸி டிரைவர் முதலியோரை விசாரித்தார். புதிய உண்மைகள் எதுவும் கிடைக்கவில்லை. தான் நினைத்ததுபோல் அந்த வழக்கு அத்தனை சுலபமானதல்ல, அதில் பல மர்மங்கள் அடங்கியிருக்கின்றன என்பதை உணர்ந்து மீண்டும் ஒருவித ஏமாற்றத்துடன் போலீஸ் ஸ்டேஷனுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார் துளசிங்கம்.

இப்பொழுது இன்ஸ்பெக்டர் சங்கரன் போலீஸ் ஸ்டேஷனுக்குத் திரும்பி வந்திருந்தார். துப்பறியும் துளசிங்கம் ஆதிகேசவனைப் பார்க்கச் சென்றது முதல் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டு வந்ததுவரை நடந்த விஷயங்களை இன்ஸ்பெக்டரிடம் வெளியிட்டார். ஆதிகேசவனின் ஆராய்ச்சிச் சாலையில் எவனோ புகுந்து கொள்ளையடித்திருக்கிறான் என்றுதான் எண்ணியிருந்தார் சங்கரன். ஆனால் தில்லைநாயகத்தின் மரணத்தைப் பற்றி அறிந்தபோது, இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டுப் போனார்!

ஆதிகேசவனின் ஆராய்ச்சி அறை பாழாக்கப்பட்டதற்கும், தில்லைநாயகத்தின் திடீர் மரணத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும் என்று தோன்றியபடியால் அதைப்பற்றி துளசிங்கத்தினிடம் அக்கறையோடு விசாரித்தார் இன்ஸ்பெக்டர்.

“ஆதிகேசவனின் அறையில் இருந்த முக்கியமான கருவிகள் சில பழுதாக்கப்பட்டிருக்கின்றன. தில்லைநாயகத்தின் அறையி

லிருக்கும் மேசை டிராயரிலிருந்து ஆராய்ச்சி சம்பந்தமான குறிப்பு கள் காணுமல் போயிருக்கலாம் என்று சந்தேகிக்க இடம் இருக் கிறது. ஆகவே, அவ்விருவரின் ஆராய்ச்சியைப்பற்றி உணர்ந்த யாரோதான் அவர்களின் வெற்றியைத் தடுக்க இவ்வாறு செய் திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். இதற்குப் பொருமைதான் காரணம் என்று நிச்சயமாய்க் கூறலாம்.

"அத்துடன் வேறு ஏதோ சில மர்மங்களும் இதில் மறைந் திருக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். ஆராய்ச்சியாளர் களின் முயற்சி தடை செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு ஆராய்ச்சி யாளர்களில் ஒருவர் உடல் நலம் குன்றிக் கிடக்கிறுர். மற்றொரு வர் மரணமடைந்திருக்கிறுர். இந்த மூன்று விஷயங்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது!" என்றுர் இன்ஸ்பெக்டர் சங்கரன்.

"எனக்கும் அவ்விதச் சந்தேகம் ஏற்படாமல் இல்லை. ஆனுல் ஆராய்ச்சியாளர்களின் வீடு கொள்ளையடிக்கப்பட்டதற்கும் அவ்விருவரின் உடல் நிலை பாதிக்கப்பட்டதற்கும் சம்பந்தம் இருக்குமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. இன்று மாலை ஆறரை மணிவரை அவர்கள் இருவரும் ஆரோக்கியத்துடன் இருந் திருக்கிறுர்கள். அவ்விருவரும் சிற்றுண்டி புசிக்கக் கிளம்பிய பிறகுதான் ஆதிகேசவனின் ஆராய்ச்சி அறை பழுதாக்கப்பட் டிருக்கிறது. அவ்விருவரும் எட்டு மணி சுமாருக்குத்தான் ஓட்ட லிலிருந்து திரும்பி இருக்கிறுர்கள். ஒருவர் அடையாறுக்குச் சென்றுவிட்டார். மற்றொருவர் ஆராய்ச்சிச்சாலைக்குத் திரும்பி வந்திருக்கிறுர். பிறகுதான் அவர்களின் உடல் பாதிக்கப்பட்டிருக் கிறது. ஆகவே ஆராய்ச்சிக் கருவிகளைப் பாழாக்கிய குற்றவாளி எவ்வாறு ஆராய்ச்சியாளர்களின் உடல் நிலை பாதிக்கப்பட்ட தற்குக் காரணமாய் இருந்திருக்க முடியும்?"

"இரண்டு ஆசாமிகள் இந்தச் சதித் திட்டத்தில் சம்பந்தப் பட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். ஒருவன், அவர்கள் எப்பொழுது வெளியேறுகிறுர்கள் என்று கவனித்துக் கொண் டிருக்கிறுன். மற்றொருவன் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று எப்படியோ அவர்களின் சிற்றுண்டியில் விஷங்கலந்து இருக்கிறுன், அதனுல்தான் குற்றவாளிகளின் திட்டம் வெற்றிகரமாக முடிந் திருக்கிறது! இன்று மாலை அவ்விருவரும் ஆராய்ச்சிச்சாலையை விட்டுக் கிளம்பியது முதல், ஓட்டலில் பிரிந்ததுவரை யார் யாரை சந்தித்தார்கள், என்னென்ன பேசினுர்கள் என்பதைக் கண்டு பிடித்தால் இந்தச் சந்தேகம் நீங்கிவிடுமல்லவா?" என்று யோசனை கூறினுர் இன்ஸ்பெக்டர்.

“ தில்லைநாயகத்தின் ஆராய்ச்சிக் கருவிகள் பழுதுபடாமல் இருந்த போதிலும் குற்றவாளி அந்த அறையினுள் புகுந்து இருக்கிறான் என்று என்னால் நிச்சயமாய்க் கூறமுடியும். ஆனால் அவன் அங்கு எதற்காக வந்தான், என்ன செய்தான் என்றுதான் கண்டு பிடிக்க முடியவில்லை” என்று கூறிவிட்டு தில்லைநாயகத்தின் அறையிலிருந்து கண்டெடுத்த கத்தியை இன்ஸ்பெக்டரிடம் காண்பித்தார் துளசிங்கம். இன்ஸ்பெக்டர் அதைக் கையில் வாங்கி நன்கு கவனித்தார். அதன்மீது எந்த விதமான அடையாளமும் காணப் படவில்லை.

“ தில்லைநாயகத்தின் அறையிலிருக்கும் மேசையினடியிலிருந்து இதைக் கண்டெடுத்தேன். குற்றவாளி இதன்மூலம் தான் அந்த வீட்டின் பின்புறமிருக்கும் கண்ணாடி ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்திருக்கிறான். இதன் மூலமாவது குற்றவாளியைக் கண்டு பிடிக்கலாமென்று நினைத்துத் தான் இதைக்கொண்டு வந்தேன். இப்பொழுது அதுவும் முடியாது போலிருக்கிறது” என்றார் துளசிங்கம்.

“ இது குற்றவாளியினுடையது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதை அவன் ஏன் அந்த அறையில் போட்டு விட்டுப் போயிருக்கிறான்? அதன் மூலம் தன்னைக் கண்டுபிடித்து விடப்போகிறார்களோ என்ற பயம் இல்லாமல் இருந்திருக்குமா?”

“இத்துடன் வெளியே சென்றால் தன்மீது சந்தேகம் ஏற்படப் போகிறதே என்ற பயம் உண்டாகியிருக்கிறது. அதனால்தான் மேசையின் கீழேபோட்டுவிட்டுப் போய்விட்டான்!” என்று கூறி விட்டு, பொழுது விடிந்த பிறகு மேற்கொண்டு விஷயத்தை விசாரிக்கலாம் என்ற எண்ணத்துடன் வீட்டிற்குப் புறப்பட்டார் துளசிங்கம்.

மறுநாள் காலை தில்லைநாயகத்தின் மரணத்தைப்பற்றி விசாரிக்க வீட்டைவிட்டுக் கிளம்பிக்கொண்டிருந்த சமயத்தில் துப்பறியும் துளசிங்கத்தைத் தேடிக்கொண்டு ஓர் ஆசாமி அவருக்கு முன்னால் வந்து நின்றார்.

வட்டவடிவமான முகம்; நரைத்த தலைமயிர்; நெற்றியில் சந்தனப்பொட்டு; நீண்ட முறுக்கிவிட்ட மீசை; மேல் நாட்டாரைப்போல் நாகரிக உடை; கரத்தில் ஒரு குறுந்தடி—இவைகள் சகிதம் கம்பீரமாகத் தன் வீட்டினுள் நுழைந்த அந்தப் புதிய மனிதரைக் கண்டு அதிசயித்துப் போனார் துளசிங்கம்.

“ வணக்கம் மிஸ்டர் துளசிங்கம். என் பெயர் பஞ்சநாதன். தில்லைநாயகத்தின் வக்கீல். சற்று நேரத்திற்கு முன்பு போலீஸ்

ஸ்டேஷனுக்குப் போன் செய்து இன்ஸ்பெக்டர் சங்கரனை விசாரித்ததில் நீங்கள் அந்த வழக்கு விஷயமாய் வேலை செய்வதாகத் தெரிவித்திருந்தார். அதனுல்தான் உங்களைப் பார்க்க வந்தேன்!'' என்ருர் வந்தவர். துளசிங்கம் அவரை உட்கார வைத்துப் பேச ஆரம்பித்தார்.

"நேற்று நான்தான் அந்த வழக்கு விஷயமாய் விசாரித்தேன். உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார் துளசிங்கம்.

"தில்லைநாயகத்தின் வக்கீல் என்ற முறையில் நான் உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன். தில்லைநாயகத்தின் ஆராய்ச்சிச்சாலையின் சாவியைக் கொடுக்க முடியுமா?'' என்று கேட்டார் அவர்.

"அது என்னிடம் இருக்கிறது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார் துளசிங்கம்.

"தில்லைநாயகத்தின் வீட்டில் வசித்துவரும் காந்திமதியின் மூலம் எனக்கு அவருடைய மரணச் செய்தி இன்று காலை அறிவிக்கப்பட்டது. நான் உடனே அவருடைய வீட்டிற்குச் சென்றேன். காந்திமதி தனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொன்னுள். ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்று அவர் மரணமடைந்ததின் காரணத்தையும் அறிந்து கொண்டேன். உடனே அவருடைய ஆராய்ச்சிச் சாலைக்குச் சென்றேன். அந்த வீடு பூட்டப்பட்டிருந்தது. அங்கு காவல் இருக்கும் கான்ஸ்டேபிள் முதல் நாள் அந்த இடம் கொள்ளையடிக்கப்பட்டது என்றும், இப்பொழுது அந்த இடம் போலீசாரின் பந்தோபஸ்தில் இருப்பதாயும் தெரிவித்தான். தில்லைநாயகத்தினுல் நியமிக்கப்பட்ட வக்கீல் என்ற முறையில் அந்த வீட்டின் சாவியை வாங்கிக்கொண்டு போகத்தான் நான் இங்கு வந்தேன்'' என்ருர் பஞ்சநாதன்.

"அது சரி! உங்களைத் தில்லைநாயகம் தன் வக்கிலாக நியமித்திருக்கிருர் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?'' என்று கேட்டார் துளசிங்கம். பஞ்சநாதன் ஒருவித வெறுப்புடன் துளசிங்கத்தைப் பார்த்துவிட்டுத் தன் கோட்டுப் பையில் திணித்து வைத்திருந்த நீளமான உறை ஒன்றை எடுத்து அவரிடம் கொடுத்தார். துளசிங்கம் அதைப் படித்துப் பார்த்தார். பிறகுதான் அவருக்குச் சமாதானம் ஏற்பட்டது. அந்த உறையை வக்கீலிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தொடர்ந்தார் துளசிங்கம்.

"நீங்கள் சாவியைக் கேட்பதில் நியாயமிருக்கிறது. ஆனுல் ஆதிகேசவனும் பாதிக்கப்பட்டிருப்பதனுல்தான் சற்று யோசிக்க வேண்டியிருக்கிறது!''

"ஆதிகேசவனும் தில்லைநாயகமும் நெருங்கிய நண்பர்கள். பாகஸ்தர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இந்தக் கடிதப்படி தில்லைநாயகத்தின் சொத்து சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருப்ப தால் தான் நான் இவ்வளவு அவசரப்படுகிறேன். சாவியைக் கொடுக்காவிட்டால் உங்கள்மீது நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்!"—வக்கீல் குரலில் கடுமை மூண்டது.

"உங்களிடம் நான் சாவியைக் கொடுக்க முடியாது! என்னுடன் வந்தால் வீட்டைத் திறந்துவிடுகிறேன். உங்கள் கடமைப் படி செய்து கொள்ளலாம். ஆனால் நான் உங்களுடனேயே இருப்பேன்" என்றார் துளசிங்கம். வக்கீல் பஞ்சநாதன் அதற்குச் சம்மதித்தார்.

பஞ்சநாதன் வந்திருந்த டாக்ஸி துளசிங்கத்தின் வீட்டு வாசலில் காத்துக்கொண்டிருந்தது. இருவரும் அதில் ஏறி அமர்ந்துகொண்டனர். துளசிங்கத்தின் உத்தரவுப்படி அந்த வண்டி மாம்பலத்தை நோக்கி விரைந்தது. வக்கீலின் வேண்டு கோளின்பேரில் முதல் நாள் மாலை தான் கண்டுபிடித்த விஷயங் களை அவரிடம் வெளியிட்டார் துளசிங்கம்.

தில்லைநாயகத்தின் மரணத்தைவிட ஆதிகேசவன் பாதிக்கப் பட்டதுதான் அவருடைய வியப்பை அதிகப்படுத்தியது! 'உலகம் வரவர மோசமாகி விட்டது. எந்த சமயத்தில் என்ன நடக்கும் என்று தெரியவில்லை. எந்த இடத்திலும் அபாயம் காத்து நிற் கிறது. அநியாயமும் அக்கிரமமும் அதிகமாகிக் கொண்டே வருகின் றன. இந்த நிலையில் போனால் விரைவில் பிரளயம் வந்துவிடும்" என்று அச்சம் நிறைந்த குரலில் கூறினார் வக்கீல். துப்பறியும் துளசிங்கத்தின் மூளை தான் பிரவேசித்திருக்கும் வழக்கைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தபடியால் வக்கீலின் வார்த்தை களில் அடங்கியிருந்த தத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருந்தார் அவர்.

சில நிமிடங்களுக்குள் அந்த வண்டி உஸ்மான் ரோடில் இருந்த ஆராய்ச்சிச் சாலையின் முன்னால் வந்து நின்றது. அங்கு காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்த கந்தசாமி துளசிங்கத்திற்கு ஸல்யூட்டு அடித்துவிட்டு ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றான். வக்கீலின் வேண்டுகோளின்பேரில் குற்றவாளியினால் உடைக்கப்பட்ட கண்ணாடி ஜன்னலையும், ஆதிகேசவனின் அறையில் நொறுக்கப் பட்ட ஆராய்ச்சிக்கருவிகளையும் காண்பித்தார் துளசிங்கம். கடைசி யாக இருவரும் தில்லைநாயகத்தின் அறைக்குள் வந்தனர், வக்கீல் அவ்வறையிலிருந்த ஒவ்வொரு பொருளையும் உன்னிப்பாகக் கவனித்

தார். ஒவ்வொன்றைப் பற்றிய குறிப்புகளையும், அவைகளின் ஜாபிதாவையும் தயாரித்துக் கொண்டார். பிறகு அந்த அறையி லிருந்த மேசை டிராயரைக் குடைந்தார். அங்கிருந்த கடிதங்களை ஏற்கனவே ஒரு முறை துளசிங்கம் பார்வையிட்டிருந்தபடியால், எந்தவிதமான பரபரப்புமின்றி அலட்சியமாய் வக்கீலுக்கு பக்கத் தில் நின்றிருந்தார். வக்கீல் ஒவ்வொரு கடிதமாய் எடுத்து நிதான மாய்ப் பார்த்துக்கொண்டே வந்தார். அவருக்கு ஒன்றும் பிர யோசனப்படக் கூடியதாக இல்லை. ஒருவித ஏமாற்றத்துடன் மேசை டிராயரை அலுப்போடு மூட முயன்றபோது பழுப்பு நிறக் கவர் ஒன்று பின்புறம் தட்டுப்பட்டு 'தொப்'பென்று கீழே விழுந்தது. வக்கீல் மிகுந்த ஆவலுடன் அதைக் கையில் எடுத் தார். அந்தக் கவர் துளசிங்கத்தின் கண்ணில் படாததினுல் அதனுள் என்ன அடங்கியிருக்கிறது என்று அறிய ஆவல் கொண்டார்.

வக்கீல் அந்தக் கவரிலிருந்த கடிதத்தை வெளியே எடுத்துப் படித்தார். அவருடைய நெற்றி விரிந்து சுருங்கியது. வலதுபுற புருவம் உயர்ந்து தாழ்ந்தது. ஏதோ ஓர் உண்மையைக் கண்டு பிடித்துவிட்டவர்போல் லேசாகத் தலையை அசைத்தார்.

"தில்லைநாயகம் இந்த இடத்தில் தன்னுடைய குடும்ப சம்பந்தமான கடிதங்களை வைத்திருப்பதாய் ஒரு முறை கூறியிருக் கிருர். அதனுல்தான் இத்துணை அவசரமாய் இங்கு வந்தேன். இப்பொழுது நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது!" என்று கூறிவிட்டு மீண்டும் அக்கடிதத்தை ஒரு முறை படித்தார் வக்கீல்.

"அது யார் எழுதிய கடிதம்? கடிதத்தைப் படித்தவுடன் திடீரென்று உங்கள் முகத்தோற்றம் மாறிவிட்டதே! அப்படி அதில் என்ன அடங்கியிருக்கிறது?"

"ஒருவருக்கு ஒரு நாள் எச்சரிக்கைக் கடிதம் வருகிறது. அதே தினத்தில் அவர் துர்மரணம் அடைந்திருக்கிருர் என்ருல் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"அது அந்தக் கடிதத்தில் அடங்கியிருக்கும் விஷயத்தையும் சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்திருக்கிறது" என்று கூறிவிட்டு வக்கீலிடமிருந்த கடிதத்தை வாங்கி படித்தார் துள சிங்கம். அதில் —

"அன்பானவருக்கு,

நான் தங்களுக்குப் பல கடிதங்கள் எழுதிவிட் டேன். இதுவரை உங்களிடமிருந்து திருப்திகரமான

காமராசர் பல்கலை அவ்வை

பதில் ஒன்றும் வரவில்லை. நான் இனி தங்களுடன் வாழ முடியாது. இப்படி ஒரு பெண் எழுதுவது உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கலாம். ஆனால் துர்க்குணமும் முன்கோபமும் தீச்செயலும் உருவான ஒருவருடன் என்னைப் போன்ற நாகரிகமான முற்போக்குக் கொள்கை மிகுந்த பெண் ஒருத்தி, எவ்வாறு பொறுத்துக் கொண்டு குடும்ப வாழ்வை நடத்த முடியும்? எனவே நான் ஒரு சுதந்திரப் பெண்மணியாய் வாழ விரும்புகிறேன். கலியாண பந்தத்திலிருந்து என்னை விடுவித்து விட்டதாக ஒரு கடிதம் எழுதி அனுப்புங்கள் என்று நான் பலமுறை தங்களுக்கு எழுதி விட்டேன். அது விஷயமாய் நான் தங்களுக்கு எழுதும் கடைசிக் கடிதம் இதுதான். உடனே உங்கள் பிடிவாதத்தை விட்டொழித்து நாளை பகல் பன்னிரெண்டு மணிக்குள் எனக்குத் தந்திமூலம் தெரியப்படுத்தி விடுங்கள். இல்லாவிட்டால் என்ன விபரீதம் நேருமோ எனக்குத் தெரியாது. இது வெறும் எச்சரிக்கையல்ல. கண்டிப்பான கடிதம். வழக்கம்போல் மௌனமாய் இருந்துவிட்டு உங்கள் வாழ்வைப் பலிகொடுத்து விடாதீர்கள்.

இப்படிக்கு
விஜயவல்லி."

என்றிருந்தது. படித்துவிட்டுத் துப்பறியும் துளசிங்கமும் பிரமித்துப்போனார். முதல் நாள் இரவு எப்படி அந்தக் கவர் தன் கண்ணில் படாமல் போய்விட்டது என்று அவருக்குப் புரியவில்லை! "இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்பதுபோல் புருவத்தை உயர்த்தி ஏளனம் கலந்த பார்வையில் துப்பறிபவரைப் பார்த்தார் வக்கீல் பஞ்சநாதன்.

"இந்தச் சூழ்நிலையில் விஜயவல்லியைச் சந்தித்து விசாரிக்கப் போகிறேன்" என்றார் துளசிங்கம்.

"இந்தக் கடிதத்திலிருந்து விஜயவல்லி, தில்லைநாயகத்தின் மனைவி என்று உங்களுக்குத் தெரிகிறதல்லவா? இது அவளுடைய கையெழுத்துத்தான்! இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் அவள் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள். நான் அதை அவரிடம் கொடுத்துவிட்டேன். குடும்பத்தில் சண்டை சச்சரவு ஏற்படுவது சகஜந்தான். ஆனால் அவர்களின் பகைமை இவ்வளவு தூரம் வளர்ந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை! விஜயவல்லி இத்தனை கொடியவளாய் இருப்பாள் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. என்னதான் மனவிரோதம் இருந்தபோதிலும் தன் கணவனைத் தந்திரமாய்க் கொலை செய்யுமளவிற்கு

அவள் துணிந்துவிடுவாள் என்று நான் நினைக்கவில்லை" என்று கூறிவிட்டு ஒரு நெடு மூச்சு விட்டார் பஞ்சநாதன்!

"ஒரு பெண்ணிற்குத் தன் கணவனைக் கொலை செய்யுமளவிற்குத் துணிவு ஏற்படுமா என்பது சந்தேகமாக இருந்த போதிலும் அவ்வாறு நடக்காமல் இல்லை! ஆகவே இந்தக் கடிதத்தைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை! ஆனால் இந்த எச்சரிக்கைக் கடிதத்திற்கும் தில்லைநாயகத்தின் மரணத்திற்கும் சம்பந்தம் இருக்குமா என்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, விஜயவல்லியைப்பற்றியும், இதில் கண்டிருக்கும் விஷயத்தைப்பற்றியும் சற்று விவரமாய்க் கூறமுடியுமா?" என்று கேட்டார் துளசிங்கம்.

"இந்த விவகாரத்தைப்பற்றி எனக்குத் தெரிந்தவைகளைக் கூறுகிறேன். விஜயவல்லிக்கும் தில்லைநாயகத்திற்கும் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு மணமாகியது. அப்பொழுது தில்லைநாயகத்திற்கு நாற்பது வயதிற்குள்தான் இருக்கும். விஜயவல்லிக்கு முப்பது வயது இருக்கும். தில்லைநாயகம் ஏன் அவ்வளவு வயதிற்குப் பிறகு மணம் செய்துகொண்டார், விஜயவல்லி ஏன் அத்தனைக் காலம் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தாள் என்பவைகளுக்கு எனக்குக் காரணம் தெரியாது. கலியாண மானதிலிருந்தே அவர்களிடம் ஒற்றுமையில்லை. சதா சண்டை சச்சரவு ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. யார் மீது குற்றம் என்று எனக்குத் தெரியாது. அவைகளை அறியவும் நான் முயற்சிக்கவில்லை. நாகரிக மோகமும் முற்போக்குக் கொள்கைகளும் மிகுந்திருந்த விஜயவல்லிக்கு தில்லைநாயகத்துடன் வாழ்வது கடினமாய் இருந்தது. வீட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு சந்ததியில்லாமல் இறந்துபோன அவளுடைய அத்தையின் மூலம் அவளுக்குக் கொஞ்சம் சொத்து வந்து சேர்ந்தது. அதன் மூலம் நிம்மதியாய் வாழலாம் என்று தீர்மானித்துக் கொண்டு கலியாண பந்தத்திலிருந்து தன்னை விடுவித்து விடும்படி தன் கணவனை வற்புறுத்த ஆரம்பித்தாள். தில்லைநாயகம் பழங் காலத்துக் கொள்கைகளை மேற்கொண்டிருந்தபடியால் அவளுடைய வேண்டுகோளை நிராகரித்தார். அத்துடன் அவள்மீது கடுங் கோபம் கொண்டு அவளைக் கொடுமைப்படுத்தவும் துணிந்து விட்டார். இதன் விளைவாக அவர்களுடைய விரோதம் விரிந்தது.

"விஜயவல்லி கணவனைப் பகைத்துக்கொண்டு காஞ்சிபுரத்திற்குச் சென்றுவிட்டாள். காஞ்சீபுரத்தில்தான் அவளுடைய அத்தை வசித்து வந்தாள். அங்குதான் அவளுக்குக் கொடுக்கப்

பட்ட நிலபுலன்களும் இருந்தன. விஜயவல்லி காஞ்சிபுரம் சென்ற பிறகு கலியாண பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துவிடும்படி பல கடிதங்கள் எழுதினாள். ஆனால் தில்லைநாயகம் அவைகளைப் பிரித்துப் பார்க்காமல்கூடத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தார். தில்லைநாயகத்தின் பிடிவாதத்தைப் போக்கித் தனக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கும்படி அவள் எனக்குக்கூடக் கடிதம் எழுதியிருந்தாள். கலியாணமான ஒரு பெண் இப்படி நடந்து கொள்வாள் என்று நினைக்கும்போது ஆச்சரியமாகத்தான் இருக்கும்! ஆணுக்குப் பெண் எந்தவிதத்திலும் குறைந்தவள் அல்ல என்ற மனோபாவமும், இருவரும் சமம் என்ற கொள்கையும் வளர்ந்து வந்திருக்கும் இந்தக் காலத்தில் விஜயவல்லி அப்படி நடந்து கொண்டதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?" என்றார் வக்கீல்.

"விஜயவல்லி கலியாண பந்தத்திலிருந்து விடுபட பல முயற்சிகளைச் செய்து பார்த்துத் தோல்வி அடைந்து விட்டபடியால், அவளேதான் தந்திரமான முறைகளைக் கையாண்டு தில்லைநாயகத்தைக் கொன்று இருக்கவேண்டும் என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள்? விஜயவல்லியோ காஞ்சிபுரத்தில் இருக்கிறாள். தில்லைநாயகமோ திடீரென்று உடல் நிலை பாதிக்கப்பட்டு இறந்து போயிருக்கிறார். விஜயவல்லியின் கடைசிக் கடிதத்தைப் படிக்கும்போது அவள் குற்றவாளியாய் இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறதே தவிர, தில்லைநாயகத்தின் மரணத்திற்கும் இந்தக் கடிதத்திற்கும் சம்பந்தம் இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை" என்று கூறி வக்கீலின் சந்தேகத்தை அகற்ற முயன்றார் துளசிங்கம்.

"நீங்கள் என்ன நினைத்தபோதிலும் எனக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது!"

"தில்லைநாயகம் முன்கோபமும் பிடிவாத குணமும் கொண்டவர் என்று சொன்னீர்களே, அவர் அவ்வளவு சுலபத்தில் இந்த எச்சரிக்கைக் கடிதத்தைக் கண்டு பயந்து போயிருப்பாரா?"

"அவர் பிடிவாதக்காரரான போதிலும் பயந்த சுபாவம் கொண்டவர் என்றுதான் நான் சொல்வேன்! சர்வ சாதாரண விஷயத்திற்கெல்லாம்கூட சில சமயங்களில் பயந்துபோயிருக்கிறார். தன்னுடைய பிடிவாதத்தினால் தன் உயிருக்கு அபாயம் ஏற்படலாம் என்று தோன்றும்போது அச்சம் ஏற்படுவது இயற்கைதானே? விஜயவல்லியின் கடிதங்களைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்த அவர் இந்தக் கடிதத்தைமட்டும் வாங்கியிருக்கிறார். இதை அடையாறில் இருக்கும் தன் வீட்டில்

வைக்காமல் தன் கையோடு இங்கு கொண்டு வந்திருக்கிருர். விஜயவல்லி குறிப்பிட்டபடி தந்தி அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இக்கடிதத்தை இங்கு கொண்டு வந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அவர் இந்தக் கடிதத்திற்கு பதில் அனுப்பிஞரா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. தில்லைநாயகத்தின் மரணத்தைப்பற்றி அலசிப் பார்க்க வேண்டியது உங்கள் கடமை. நான் செய்யவேண்டிய வேலைகள் எத்தனையோ இருக்கின்றன. நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார் வக்கீல் பஞ்சநாதன்.

ஆதிகேசவனின் ஆராய்ச்சிக் கருவிகள் நொறுக்கப்பட்டன; தில்லைநாயகத்தின் திடீர்மரணம்; விஜயவல்லியின் எச்சரிக்கைக் கடிதம் ஆகிய மூன்றும் துளசிங்கத்தின் மனக்கண் முன்னுல் தோன்றின.

தான் நினைத்ததைவிட அதிகமான மர்மங்கள் அதில் அடங்கியிருப்பதாகவே அவர் நினைத்தார்! விஜயவல்லியை விசாரித்தால் உண்மை கிடைக்கலாம் என்ற நம்பிக்கை துளிர்த்தது. ஆனுல் அதற்கு முன்பு முதல் நாள் காலை ஆறரை மணியிலிருந்து எட்டுமணிவரை தில்லைநாயகம் என்ன செய்தார் என்பவைகளைக் கண்டுபிடிப்பதற்காக நேராக நளினு கேப் இருக்கும் பாண்டி பஜாருக்குச் சென்ருர் துளசிங்கம்.

காலை நேரம். ஓட்டலில் மும்முரமாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. அந்த ஓட்டலின் முதலாளி ரகுராமன் துப்பறியும் துளசிங்கத்தை அறிந்திருந்தபடியால் அவர் ஓட்டலுள் நுழைந்தவுடன், அருகில் சென்று அவரை உபசரித்தார். துப்பறியும் துளசிங்கம் ஆரஞ்சுக் கிரஷைக் கொண்டு வரச்சொல்லி அதை உறிஞ்சிய வண்ணம் தான் வந்த விஷயத்தை ஆரம்பித்தார்.

முதல் நாள் மாலை தன் ஓட்டலில் சிற்றுண்டி புசித்த இருவரில் ஒருவர் திடீரென்று இறந்து விட்டதும், மற்றொருவரின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருப்பதும் அறிந்து திடுக்கிட்டுப் போனார் ரகுராமன்! ஓட்டலின் நல்ல பெயர் கெட்டுவிடப் போகிறதே என்று அஞ்சினார் அவர்.

துளசிங்கம் குறிப்பிட்ட இரண்டு ஆசாமிகளையும் அவருக்குத் தெரியும். வழக்கமாக அவர்கள் அந்த ஓட்டலுக்கு வந்து கொண்டிருந்தபடியால்தான் அவ்விருவரையும் அவர் அறிந்திருந்தார். ஓட்டலில் எந்தப் பொருளும் தன் கண்முன்னலேயே தயாரிக்கப்படுகின்றன வென்றும், எந்தவிதமான விஷப்பொருளும் கலக்கப்படுவதற்கு வழியில்லை என்றும் கூறினர். பிறகு துளசிங்கத்தை ஓட்டலின் பின்புறமாக அழைத்துச் சென்று, சாமான்கள் வைக்கும் அறையிலிருந்து சிற்றுண்டி தயாரிக்கப்படும் இடம் வரையில் காண்பித்தார். எங்கெந்த பொருள்கள் எப்படி எப்படி தயாரிக்கப்படுகின்றன, யார் யார் என்னென்ன வேலைகள் செய்கிறார்கள், ஒவ்வொரு பொருளும் தயார் செய்யப்பட்ட பிறகு எவ்வாறு வினியோகம் செய்யப்படுகின்றன என்பவைகளைக் கூறினர். அத்துடன் ஒவ்வொரு தின்பண்டமும் தயாரானவுடன் தான் அதை ருசி பார்த்த பிறகுதான் வெளியே கொண்டுவரப் படுவதாவும் கூறினர். ஓட்டல் முதலாளி கூறிய விளக்கம் திருப்திகரமாக இருந்தபோதிலும் ஏன் அந்த இரண்டு ஆராய்ச்சியாளர்களும் பாதிக்கப்பட்டார்கள் என்பதுதான் அவருக்குப் புரியாத புதிராக இருந்தது! இருவரும் சிற்றுண்டி புசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் குற்றவாளி அவர்களுக்கு எதிரில் அமர்ந்து கொண்டு அவர்களின் சிற்றுண்டியில் விஷத்தைக் கலந்திருக்கலாமல்லவா என்ற சந்தேகமும் ஏற்பட்டது. ஆதிகேசவனும் தில்லைநாயகமும் ஆறரை மணிக்கு ஆராய்ச்சிசாலையை விட்டுப் புறப்பட்டு இருக்கிருர்கள். இரவு எட்டுமணி சுமாருக்குத்தான் இருவரும் ஓட்டலை விட்டு வெளியே

வந்திருக்கிறார்கள். ஆராய்ச்சிச்சாலை இருக்கும் உஸ்மான் ரோடுக்கும் பாண்டி பஜாரில் இருக்கும் ஓட்டலுக்கும் சுமார் இரண்டு பர்லாங்கு தூரம்தான் இருக்கிறது. ஆகவே அந்த ஒன்றரை மணி நேரம் அவர்கள் என்ன செய்தார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? ஓட்டலில் தான் விசாரித்த விஷயங்களை டைரியில் குறித்துக்கொண்டு ஆதிகேசவனைப் பார்க்கப் புறப்பட்டார் துளசிங்கம்.

மைலாப்பூர் பரமசிவநாடார் வீதியில் ஆதிகேசவன் வசித்து வந்த வீடு கிளிக்கூண்டைப்போல் சிறியதாக இருந்தது. அந்த வீட்டின் முன்புறமிருந்த காலிங்பெல்லின் விசையை அழுத்தினார் துள்சிங்கம். மறுவிநாடி வீட்டினுள் இருந்து ஒரு நர்ஸ் வெளியே வந்தாள். ஆதிகேசவன் உடம்பு சரியாகி இருக்கும் என்று எண்ணி இருந்தார் அவர். ஆனால் நர்ஸைப் பார்த்தவுடன் அவருடைய உடல்நிலை மோசமாகி விட்டதோ என்று அஞ்சினார்.

"நான் அவசரமாய் ஆதிகேசவனைப் பார்க்கவேண்டும்" என்றார் அவர் பரபரப்பான குரலில்.

"அவர் உடல் நிலை மோசமாய் இருக்கிறது. அவர் பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று டாக்டர் உத்தரவிட்டிருக்கிறார்" என்றாள் அந்த நர்ஸ்.

"நான் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவன். அவர் ஒரு முக்கியமான விஷயம் ஒன்றை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார். அதற்காக நான் உடனே அவரைப் பார்த்தாகவேண்டும்" என்றார் துளசிங்கம்.

"ஓ, அப்படியா? தன் சொத்துக்களைக் காப்பாற்றுவதற்காக ஒரு துப்பறிபவரை நியமித்திருப்பதாயும், அவருடைய வருகையைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் சொல்லிக் கொண்டிருந்தார், நீங்கள்தானே அந்தத் துப்பறிபவர்?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம்! அவருடைய பாகஸ்தர் தில்லைநாயகம் இறந்து போன செய்தி அவருக்குத் தெரியுமா?" என்று கேட்டார் அவர்.

"அவர் அதிர்ச்சி அடைந்துவிடப் போகிறாரே என்று அந்த விஷயத்தைச் சொல்லாமல் இருந்துவந்தேன். ஆனால் அவர் காலையிலிருந்து தில்லைநாயகத்தை டெலிபோன் மூலம் அழைத்துத் தன்னுடைய ஆராய்ச்சிக் கருவிகள் நொறுக்கப்பட்ட விஷயத்தைத் தெரிவிக்கும்படி வற்புறுத்த ஆரம்பித்து விட்டார்! நான்

எவ்வளவு சமாதானம் சொல்லியும் அவர் கேட்கவில்லை. வேறு வழியின்றி நான் விஷயத்தை வெளியிட்டுவிட்டேன். தில்லை நாயகம் இறந்து போய்விட்டார் என்ற செய்தியைக் கேட்ட வுடன் அனலிலிட்ட புழுவைப்போல் துடித்தார்; அலறினர்; கட்டிலிலிருந்து புரண்டு கீழே விழுந்துவிட்டார்; மறுகணம் மூர்ச்சையாகி விட்டார்.''

''அப்படியா? இப்பொழுது எப்படியிருக்கிறது?''

''ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அவருக்கு உணர்வு வந்தது. ஆனல் உடல்நிலை முன்னைவிட மோசமாகிவிட்டது. நல்ல சிகிச்சைபெற்று பூரண ஓய்வு எடுத்துக்கொண்டால் தவிர உடம்பு குணமாகாது என்று டாக்டர் சொல்லிவிட்டு ஊசி போட்டுவிட்டுப் போயிருக்கிருர். அதிகமாக அவரைச் சிரமப் படுத்தாமல் விரைவில் உங்கள் பேச்சை முடித்துக்கொண்டு வந்து விடுங்கள்'' என்று கூறினள் நர்ஸ்.

துப்பறியும் துளசிங்கம் வீட்டினுள் நுழைந்து ஹாலிற்குப் பக்கத்தில் இருந்த அறையினுள் பிரவேசித்தார். கண்களை மூடியவண்ணம் கட்டிலில் படுத்திருந்தார் ஆதிகேசவன். முதல் நாள் இரவு பார்த்ததற்கும் இப்பொழுது பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. சிலமணி நேரங்களுக்குள் அவர் எவ்வளவு மாறிவிட்டார் என்பதை நினைக்கும்போது அவருக்கு மிகவும் அனுதாபமாக இருந்தது. விஷக்கலப்பினுல் ஏற்பட்ட கோளாறும், தன்னுடைய பாகஸ்தரின் அதிர்ச்சியும் சேர்ந்து அவருடைய உடல்நிலையை மோசமாக்கி இருக்கின்றன என்பதை உணர்ந்துகொண்டார் துளசிங்கம்.

கட்டிலில் படுத்திருந்த ஆதிகேசவன் தன் அறையினுள் காலடியோசை கேட்டுக் கண்களைத் திறந்தார். துப்பறியும் துளசிங்கத்தைக் கண்டவுடன் அவருடைய முகம் சற்று மலர்ந்தது. தலையை அசைத்து அவரை வரவேற்று சற்றுத் தூரத்தில் இருந்த நாற்காலியில் அமரச்செய்தார்.

''நான் உங்களுக்குச் சொல்லி அனுப்ப வேண்டும் என்று எண்ணியிருந்தேன். நீங்களாகவே என்னைப் பார்க்க வந்தது குறித்து மகிழ்ச்சி. என்னுடைய ஆராய்ச்சிக் கருவிகள் நொறுக்கப் பட்டிருக்கின்றன. என்னுடன் ஒத்துழைத்த என் நண்பர் தில்லை நாயகமும் மரணமடைந்து விட்டார். அவைகளை நினைக்கும்போது என் மனம் வேதனையினுல் வெடித்துவிடும்போல இருக்கிறது'' என்று மெலிந்த குரலில் கூறியவண்ணம் தன்னையும் மீறி வந்த துயரத்தை அடக்கிக்கொண்டார் ஆதிகேசவன்.

"உங்கள் நண்பர் தில்லைநாயகம் ரத்தத்தில் விஷக்கலப்பு ஏற்பட்டு இறந்து போனதாகத் தெரியவருகிறது. ராயப் பேட்டை ஆஸ்பத்திரியில் அவரைச் சிகிச்சை செய்த டாக்டரும் விஷக்கலப்பினல் தில்லைநாயகத்தின் வயிற்றில் ஏற்பட்ட கோளாறு அதிகமாகி அவர் இறந்துவிட்டதாக ரிபோர்ட்டு எழுதி அனுப்பியிருக்கிருர்".

"என்ன? அவருடைய ரத்தத்திலும் விஷக்கலப்பு ஏற் பட்டிருந்ததா?"

"ஆமாம்! உங்கள் இருவரையும் கொலைசெய்ய யாரோ முயற்சி செய்திருக்கிருர்கள். நீங்கள் பிழைத்து விட்டீர்கள். உங்கள் நண்பர் இறந்துவிட்டார். அது விஷயமாய் உங்களை விசாரிக்கத்தான் வந்திருக்கிறேன். ஓட்டலில் சிற்றுண்டி புசிக்கப் பட்ட பிறகு இருவருடைய உடல் நிலையும் பாதிக்கப்பட்டிருக் கிறது. ஆகவே அதற்கு முன்பு நடந்த விஷயங்களை நான் அறிய விரும்புகிறேன். சிற்றுண்டி புசிக்க நளினு கேபிற்குச் செல்ல வேண்டும் என்று யார் முதலில் கூறியது?" என்று ஆரம்பித் தார் துளசிங்கம்.

"நான் எந்த ஓட்டலுக்கு வேண்டுமாலுைம் செல்வேன். மேலும் ஒரே ஓட்டலுக்குச் செல்வதும் எனக்குப் பிடிக்காது. மாறுதல் வேண்டும் என்று தினம் ஒரு ஓட்டலுக்குப் போவேன்! ஆனல் தில்லைநாயகம் அப்பேர்ப்பட்டவர் அல்ல; சென்னையில் எத்தனையோ ஓட்டல்கள் இருந்தபோதிலும் நளினு கேப்தான் அவருக்கு பிடித்தமான ஓட்டல். அந்த ஓட்டலில் தயாரிக்கப்படும் தின்பண்டங்களைப்பற்றி அடிக்கடி பெருமையாகச் சொல்லிக் கொண்டே யிருப்பார். அன்று மாலை நாங்கள் இருவரும் ஆராய்ச்சிச் சாலையைவிட்டு வெளியே வந்தவுடன் அவர்தான் நளினு கேபிற்குப் போகலாம் என்று கூறிஞர், அதனல்தான் நாங்கள் அங்கு புறப்பட்டோம்."

"நீங்கள் இருவரும் எந்த வழியாகச் சென்றீர்கள்?"

"இருவரும் பனகல் பார்க்கினுள் புகுந்து பாண்டி பஜா ருக்குச் சென்றேம்."

"வழியில் யாரையாவது சந்தித்தீர்களா? யாருடனவது பேசினீர்களா?"

"பார்க்கினுள் ஒன்றும் நடக்கவில்லை. ஆனல் எங்கள் இரு வரையும் யாரோ ஒருவன் பின்தொடர்ந்து வருவதுபோன்ற சந்தேகம் ஏற்பட்டது. நாங்கள் சற்று நிதானித்ததால் அவனும் நிதானித்தான். நாங்கள் நடந்தால் அவனும் நடந்தான். இந்த விஷயத்தை தில்லைநாயகத்தினிடம் தெரிவிக்கவேண்டும் என்று

தான் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் தில்லைநாயகம் அப்பொழுது கலவரமடைந்த முகத்தோற்றத்துடன் காணப் பட்டபடியால் நான் அவரிடம் ஒன்றும் சொல்லவில்லை. பனகல் பார்க்கைக் கடந்து வெளியே வந்து நின்றவுடன் வலது பக்கமாக இருந்த ஓர் ஐஸ்கிரீம் பார் என் கண்ணில் பட்டது. அங்கு தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம் எனக்குப் பிடித்திருந்தபடியால் ஐஸ்கிரீம் சாப்பிடலாம் என்று சொன்னேன். அவர் என்னு டைய யோசனையை ஏற்றுக்கொண்டார். உடனே நாங்கள் இருவரும் அந்த ஐஸ்கிரீம் பாருக்குச் சென்றோம். இரண்டு ஐஸ்கிரீம்களைக் கொண்டுவரச் சொன்னோம். அந்தச் சமயத்தில் நாகரிக உடைகள் அணிந்த வாலிபன் ஒருவன் அந்தக் கடையி னுள் நுழைந்தான். எங்களைப் பனகல் பார்க்கில் பின்தொடர்ந்து வந்த ஆசாமி அவனாகத்தான் இருக்கவேண்டும் என்று நான் முடிவு செய்துகொண்டேன். அதற்கேற்றாற்போல் கடையினுள் நுழைந்த அந்த வாலிபன் எங்கள் இருவருக்கும் மத்தியில் வந்து நின்று, "நீங்கள்தானே மிஸ்டர் தில்லைநாயகம்?" என்று மெல்லிய குரலில் கேட்டான். அந்த வாலிபன் யாரென்று அவருக்குப் புரியவில்லை. 'ஆமாம், நான்தான்' என்றார் அவர். 'நான் உங்க ளுடன் சில வார்த்தைகள் பேசவேண்டும். கொஞ்சம் வெளியே வருகிறீர்களா?' என்று வினயமான குரலில் கேட்டான் அவன். தில்லைநாயகம் சற்றுத் தயங்கினார். ஆயினும் ஒருவிதத் தைரியத் துடன் எழுந்து அந்த வாலிபனுடன் சென்றார். அவ்விருவரும் வாசல் பக்கத்தில் இருந்த படிக்கட்டில் நின்று பேசிக்கொண் டிருந்தபடியால் உள்ளேயிருந்தவாறே அவர்களை என்னால் நன்கு பார்க்க முடிந்தது. அந்த வாலிபன் கரங்களையும் தலையையும் அசைத்தவண்ணம் அவரைத் திருப்திப்படுத்த முயலுபவன்போல் ஏதோதோ சொல்லிக்கொண்டிருந்தான். தில்லைநாயகம் தலையை லேசாக அசைத்த வண்ணம் அவ்வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாரே தவிர, ஒன்றும் பதில் பேசவில்லை. அந்த வாலிபன் தன் பேச்சை நிறுத்தினான். 'முடியாது! கண்டிப் பாக முடியாது' என்று உரத்த குரலில் கூறிவிட்டு விரைந்து பாருக்குள் வந்துவிட்டார் தில்லைநாயகம். அந்த வாலிபன் அவரைப்பார்த்து மௌனமாகப் புன்னகை புரிந்தான். ஏதோ ஒருவித முடிவிற்கு வந்தவன்போலத் தலையை அசைத்துவிட்டுச் சென்றுவிட்டான். தில்லைநாயகத்தின் முகத்தில் எள்ளும் கொள் ளும் வெடிக்கும்போல் இருந்தன. அந்த வாலிபனின் சந்திப்பு அவருடைய கோபத்தைக் கிளறிவிட்டிருக்கிறது என்று நான் யூகித்துக்கொண்டேன். அந்த வாலிபன் யார், அவன் என்ன பேசினான் என்பவைகளை நான் விசாரிக்கவில்லை. அவரும்

அதைப்பற்றி என்னிடம் சொல்லவில்லை. சிறிதுநேரத்திற்குள் நாங்கள் இருவரும் அங்கிருந்து புறப்பட்டு விட்டோம்!"

"அந்த வாலிபனின் அங்க அடையாளங்களைக் கூற முடியுமா?"

"தூரத்திலிருந்துதான் இரண்டொரு நிமிடங்கள் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஆகவே எவ்வாறு நான் அவனைப் பற்றிக் கூறமுடியும்?"

"அது சரி! நீங்கள் மறுபடியும் அந்த வாலிபனைப் பார்த்தீர்களா?"

"ஆமாம். நாங்கள் இருவரும் ஓட்டலை விட்டு வெளியே வந்தபோதும் அங்கும் அவன் எங்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். ஆனால் அவன் முதல் முறையைப்போல் எங்கள் அருகில் வரவில்லை. தில்லைநாயகத்தினிடம் பேசவும் அவன் முயற்சிக்கவில்லை. தில்லைநாயகம் டாக்ஸியில் அடையாறுக்குப் புறப்பட்டவுடன் அவனும் ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்துகொண்டு புறப்பட்டு விட்டான்."

"டாக்ஸியின் நம்பரைச் சொல்ல முடியுமா?"

"நான் அதைக் கவனிக்கவில்லை. விர்ரென்று பறந்து தில்லைநாயகத்தின் வண்டியைப் பின்பற்றிச் செல்ல ஆரம்பித்து விட்டது!"

"அது சரி! ஐஸ்கிரீம் பாரிலிருந்து புறப்பட்டு ஓட்டலுக்கு நீங்கள் இருவரும் நேராகச் சென்றீர்களா? அல்லது வேறு எங்காவது போனீர்களா?"

"ஐஸ்கிரீம் பாரிலிருந்து புறப்பட்டு நடை பாதையில் நடந்து சென்ற நாங்கள் பாண்டிபஜாரில் இருந்த ஒரு மருந்துக் கடையினுள் சென்றோம்."

"மருந்துக் கடைக்கா? ஏன் சென்றீர்கள்?"

"தில்லைநாயகத்திற்குத் தொண்டை கட்டிக்கொண்டிருந்தது. நாலைந்து நாட்களாக இருமலினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். தொண்டைக் கட்டைப் போக்குவதற்காக அவர் குறிப்பிட்ட மாத்திரை ஒன்றைப் புசித்துவந்தார். அந்த மாத்திரைகளை வாங்குவதற்காகத்தான் மருந்து கடைக்குச் சென்றார்."

"இருமலினாலும் தொண்டைக் கட்டினாலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த அவர் எவ்வாறு ஐஸ்கிரீம் சாப்பிடுவதற்குச் சம்மதித்தார்? அது அவருடைய நோயை அதிகப்படுத்தி இருக்குமே?"

"எனக்கு ஐஸ்கிரீம் என்ருல் உயிர். குளிர்காலத்தில்கூட நான் அதைச் சாப்பிடுவேன். என் உடம்பிற்கு அது ஒன்றும் செய்யாது. அதனுல்தான் ஐஸ்கிரீம் சாப்பிடவேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டது. நான் ஐஸ்கிரீம் பாருக்குச் செல்ல வேண்டும் என்று கூறியவுடன் என் யோசனையை ஏற்றுக்கொண்டு விட்டார். அவர் இருமல் நோயினுல் பீடிக்கப்பட்டிருப்பதைப் பற்றி எச்சரிக்கை செய்தேன். ஐஸ்கிரீம் ஒன்றும் செய்யாது என்றும், சூட்டைக் கொண்டு சூட்டைத் தணிக்கவேண்டும் என்று சொல்வதுபோல் குளிர்ச்சியான பொருள்களினுலேயே உடம்பில் இருக்கும் குளுமையைப் போக்கவேண்டும் என்றும் வேடிக்கையாகக் கூறினுர்! ஐஸ்கிரீம் சாப்பிட்ட பிறகு அவருடைய உடல்நிலை மோசமாகி விட்டதோ என்னவோ! அதனுல் தான் மாத்திரைகளை வாங்க அவர் மருந்துக் கடைக்குச் சென்றிருக்கலாம்".

உஸ்மான் ரோட்டிலிருந்து பாண்டி பஜாருக்குப் போய்ச் சேருவதற்கு அவர்களுக்கு ஏன் ஒன்றரை மணி நேரமாகியது என்று இப்பொழுது துப்பறியும் துளசிங்கத்திற்கு விளங்கி விட்டது. ஆனுல் தில்லைநாயகத்தைச் சந்தித்த அந்த வாலிபன் யாரென்பதுதான் புரியாத புதிராக இருந்தது! வக்கீல் கண்டெடுத்த கடிதத்தைப் படித்த பிறகு விஜயவல்லியின்மீது சந்தேகம் ஏற்பட்டது. இப்பொழுது அந்த வாலிபன்மீது அதிகமான சந்தேகம் உண்டாகியது!

"மிஸ்டர் துளசிங்கம்! உங்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லி உங்கள் சந்தேகங்களைப் போக்கிவிட்டேன். அதற்குப் பிரதியாக நீங்கள் ஒரு உதவி செய்யவேண்டும்."

"என்னுல் முடிந்த உதவியைச் செய்யக் காத்திருக்கிறேன்."

"தில்லைநாயகத்தின் திடீர் மரணம் எனக்குப் பெரும் கவலையைக் கொடுத்திருக்கிறது. ஆனுல் அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புகளைப் பற்றித்தான் இப்பொழுது அதிகமாக நான் கவலைப்படுகிறேன். அவர் தன்னுடைய குறிப்புகளை அநேகமாக தன்னுடைய மேசை டிராயரில்தான் வைத்திருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன். அவைகள் எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்தக் குறிப்புகள் வேறு யாருடைய கையிலாவது கிடைத்துவிட்டால் நாங்கள் இவ்வளவு காலம் செய்த முயற்சிகள் அனைத்தும் பாழாகிவிடும். அந்தக் குறிப்புகள் வேறு ஒருவரிடமும் கிடைக்காதபடி செய்யவேண்டுமே?" என்று வேண்டினுர் ஆதிகேசவன்.

அதுவிஷயமாய்த் தன்னுல் முடிந்த உதவிகளைச் செய்வதாய்க் கூறிவிட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார் துப்பறியும் துளசிங்கம்.

இன்ஸ்பெக்டர் சங்கரன் சில முக்கிய விஷயங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு துளசிங்கத்தின் வருகையை எதிர் பார்த்த வண்ணம் இருந்தார். துளசிங்கத்தைக் கண்டவுடன் அவருடைய முகம் மலர்ந்தது.

"விஜயவல்லியின் கடிதத்தைப் பற்றிய செய்தி நேற்று இரவே எனக்குத் தெரிந்துவிட்டது. உடனே அவளைப்பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்தேன், காஞ்சீபுரத்திலிருக்கும் ஸி. ஐ. டி. இலாகாவிலிருந்து எனக்குச் சில விஷயங்கள் தெரியவந்திருக் கின்றன. அதை உங்களிடம் கூறுவதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன். தில்லைநாயகத்தின் மனைவி விஜயவல்லி காஞ்சீ புரத்தில் இருக்கும் பரிமளபவனம் ஓட்டலில் ஓர் அறையை ஏற்பாடு செய்துகொண்டு ஒரு மாத காலமாக அங்கு வசித்து வந்தாளாம்! அடிக்கடி அவள் வெளியே போய் வந்துகொண் டிருந்தாளாம். அவளைப் பார்க்கவும் பலர் அடிக்கடி அந்த ஓட்ட லுக்கு வந்துகொண்டிருந்தனராம். இதிலிருந்து காஞ்சீபுரத்தில் அவளுக்குத் தெரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறதல்லவா? இன்று காலை ஒரு வாலிபன் அவளைப் பார்க்க பரிமளபவனத்திற்கு வந்தானாம். இருவரும் சற்று நேரம் தனிமையில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்களாம். கால்மணி நேரத்திற்குப் பிறகு அந்த வாலிபன் சென்றுவிட்டானாம். அரை மணி நேரத்திற்குப் பிறகு அவளும் அவசர அவசரமாய்த் தன் அறையைக் காலி செய்துகொண்டு, ஒரு டாக்ஸியில் காஞ்சீபுரம் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு விட்டாளாம். இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"நினைப்பதற்கு என்ன இருக்கிறது? விஜயவல்லியைச் சந்தித்த வாலிபன் நேற்று தில்லைநாயகத்தைப் பின்தொடர்ந்து பேசியவனாகத்தான் இருக்கவேண்டும்! தில்லைநாயகத்தைக் கொலை செய்ய அவன் ஏதோ ஒரு தந்திரத்தைக் கையாண்டு இருக்கிறான். அவன் முயற்சி பலித்துவிட்டது. தில்லைநாயகம் அவனுடைய சூழ்ச்சி வலையில் சிக்குண்டு பலியாகிவிட்டார். தன் வெற்றியைத் தெரிவிக்கத்தான் அந்த வாலிபன் காஞ்சீபுரத் திற்குச் சென்று இருக்கிறான். ஏற்கெனவே கணவன்மீது விரோதமும் பகையையும் கொண்டிருந்த அவள் தில்லைநாயகத்தின் மரணச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்திருக்கிறாள். அடுத்தபடியாக

நடக்கவேண்டியவைகளைக் கவனிப்பதற்காகத்தான் அத்துணை அவசரமாய் அவள் புறப்பட்டிருக்கிறாள்!" என்று ஆணித் தரமான குரலில் கூறி முடித்தார் துளசிங்கம்.

"அவ்வளவு சுலபமாக நீங்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டீர்களே? ஆனால் ஒரு பெண் எவ்வளவுதான் தன் கணவரை வெறுத்து வந்தபோதிலும், அவருடைய மரணச்செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்திருப்பாள் என்று என்னால் நினைக்கக்கூட முடியவில்லை!" என்று சற்று வியப்புடன் கூறினார் இன்ஸ்பெக்டர்.

"இந்தக் காலத்தில் நினைக்கமுடியாத விஷயங்கள் எத்தனையோ நடந்துவிடுகின்றன! கொலை செய்வாள் பத்தினி என்று அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு இருக்கும்போது வேண்டாத புருஷன் மரணமடைந்த செய்தியைக் கேட்டு அவள் மகிழ்ச்சி அடைந்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? மேலும் பெண்களின் நாகரிக மோகமும் முற்போக்குக் கொள்கையும் ரொம்ப தூரம் வளர்ந்துவிட்டன. இந்த நிலையில் விஜயவல்லியின் மனப்போக்கைக் கண்டு நாம் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை."

"அப்படியானால் நேற்று தில்லைநாயகத்தைப் பின்தொடர்ந்த வாலிபனுக்கும் விஜயவல்லிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று நீங்கள் சொல்லுகிறீர்களா?"

"ஆமாம்!"

"சரி! அப்படியே வைத்துக்கொள்வோம். நீங்கள் குறிப்பிடும் அந்த வாலிபனை 'வாசகன்' என்று குறிப்பிடுவோம். அவனுக்கும் அவளுக்கும் எந்தவிதத்தில் தொடர்பு இருந்திருக்கும் என்று சொல்கிறீர்கள்?"

"இதுவரை நான் கேட்டறிந்த விஷயங்களையும் இப்பொழுது நீங்கள் குறிப்பிடும் விஷயத்தையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும், வக்கீலின் வாக்குமூலத்தின்படி விஜயவல்லி தன்னைக் கலியாண பந்தத்திலிருந்து விடுதலை செய்யும்படி தன் கணவனை வற்புறுத்தி வந்திருக்கிறாள் என்பது விளங்குகிறது. நாகரிக மோகமும் முற்போக்குக் கொள்கைகளும் மிகுந்த அவள் வேறு ஒருவனை மணம் செய்து கொள்ளவேண்டும் என்பதே அதற்குக் காரணமாய் இருக்கவேண்டும். நம் நாட்டுக் கலாசாரத்திற்கு முற்றிலும் புறம்பானதுதான். ஆயினும் விஜயவல்லியிடம் அவ்வித எண்ணம் ஏற்பட்டிருக்கலாம் என்று நினைக்க இடமிருக்கிறதல்லவா? அந்த ஆசாமி நாம் சந்தே

இக்கும் வாசகனுகத்தான் இருக்கவேண்டும். விஜயவல்லி தன் கணவனின் பிடிவாதத்தைப் போக்க முயன்று தோல்வி அடைந்ததால் அவனை ஒழித்துவிட அவள் திட்டமிட்டிருக்கிருள். வாசகன் அந்த விஷயத்தில் அவளுக்கு உதவி செய்யத் தீர்மானித்திருக்கிருன். அவன் காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டு நேற்று மாலை மாம்பலத்திற்கு வந்து தில்லைநாயகத்தைக் காணக் காத்துக் கொண்டிருந்திருக்கிருன். தில்லைநாயகம், ஆதிகேசவனுடன் ஆராய்ச்சிச்சாலையைவிட்டு வெளிப்பட வந்தபடியால் அவ்வளவு சுலபத்தில் அவரைச் சந்தித்துப் பேசமுடியாமல் போய்விட்டது. அதனுல்தான் அவன் அவரைப் பின்பற்றிச் சென்றிருக்கிருன்! இருவரும் ஒன்ருகச் சேர்ந்து சென்றுகொண்டிருந்தபடியால் தில்லைநாயகத்தைத் தனிமையில் சந்திக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்திருக்கிருன். வேறுவழி தோன்ருததால்தான் ஐஸ் கிரீம் பாரில் அவரைக் கண்டு தனிமையில் அழைத்துவந்து அவருடன் பேசியிருக்கிருன். அப்பொழுதும் அவர் தன் மனைவியைக் கலியாண பந்தத்திலிருந்து விடுதலை செய்யக் கண்டிப்பாக முடியாது என்று கூறியிருக்கிருர். அவருடைய முடிவான பதிலைக் கேட்பதற்காகத்தான் அவன் வாசலில் காத்துக் கொண்டிருக்கவேண்டும். அவர் வெளியே வந்து டாக்ஸியில் புறப்பட்டவுடன் வாசகனும் மற்ருெரு டாக்ஸியில் அவரைப் பின்தொடர்ந்து இருக்கிருன். தில்லைநாயகம் உடல் நிலை பாதிக்கப்பட்டு நேராக அவர் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றது நமக்குத் தெரியும். வாசகன் ஆஸ்பத்திரியை அடைந்திருக்கிருன். தில்லைநாயகம் இறந்துவிட்ட செய்தியைக்கேட்டுக் கொண்டு அங்கிருந்து காஞ்சீபுரத்திற்குத் திரும்பி யிருக்க வேண்டும். அந்த வாசகனின் மூலம் விஷயத்தை அறிந்து கொண்டு தன்னுடைய காதலனுடன் வாழ்க்கையை நடத்த அவனுடன் புறப்பட்டுவிட்டாள் அந்தக் காரிகை!" என்று கூறிவிட்டுக் கம்பீரமாக இன்ஸ்பெக்டரைப் பார்த்தார் துளசிங்கம்.

"உங்கள் காதில் விழுந்த விஷயங்களை ஒன்று சேர்த்து பிரமாதமாக வர்ணித்து விட்டீர்கள். ஆனுல் இரண்டு முக்கிய விஷயங்களை மறந்துவிட்டீர்கள். தில்லைநாயகத்தின் அறையினுள் குற்றவாளி புகுந்திருக்கவேண்டும் என்று சந்தேகிப்பதற்கான ஆதாரம் இருக்கிறது. அத்துடன் ஓட்டலில் தில்லைநாயகம் புசித்த சிற்றுண்டியில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு குற்றங்களிலும் வாசகனுக்கு சம்பந்தம் இல்லை என்று எண்ணத் தோன்றுகிறதே!"

"நன்கு யோசித்துப் பார்த்தால் அந்தச் சந்தேகமும் நீங்கிவிடும். தில்லைநாயகத்தை நேரில் சந்தித்து அவருடைய பிடி

வாதத்தைப் போக்கிவிடலாம் என்று எண்ணியிருக்கிறுன் அந்த வாசகன். ஆனுல் அவர் கண்டிப்பாக மறுத்துவிட்டது, அவனுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. அவர்கள் சிற்றுண்டி புசிக்கத்தான் எங்கோ சென்றிருக்கிருர்கள் என்று தீர்மானித்துக் கொண்டு அவன் ஆராய்ச்சிச்சாலைக்குத் திரும்பிச் சென்று பின்புறக் கண்ணுடி ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்திருக்கிறுன். ஒருவேளை தில்லைநாயகம், ஆதிகேசவனின் தூண்டுதலின்பேரில் அத்தனை பிடிவாதமாய் இருக்கிருரோ என்று எண்ணிக்கொண்டு அவருடைய ஆராய்ச்சிக் கருவிகளை உடைத்திருக்கிறுன். பிறகு தில்லைநாயகத்தின் அறையினுள் சென்று விஜயவல்லியின் வேண்டுகோளுக்குச் சாதகமாய் கடிதம் ஏதாவது கிடைக்கிறதா என்று பார்த்திருக்கிறுன். அந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. ஆகவே, ஏமாற்றத்துடன் அங்கிருந்து வெளியேறி பாண்டி பஜாரின் பக்கம் வந்திருக்கிறுன். அந்த சமயத்தில் அவனுக்கு அவர்கள் இருவரும் ஓட்டலுக்குள் இருப்பது தெரியவந்திருக்கிறது. தில்லைநாயகம் உயிருடன் இருக்கும்வரை விஜயவல்லி இன்பமாய் வாழமுடியாது என்று தீர்மானித்து அவர்கள் அமர்ந்திருந்த மேசையைக் கவனித்துக்கொள்ளும் ஓட்டல் சிப்பந்தியைச் சரிப்படுத்திக்கொண்டு இருவருடைய சிற்றுண்டியிலும் விஷம் கலந்துவிட ஏற்பாடு செய்திருக்கிறுன்! ஆதிகேசவன் ஆரோக்கியமாய் இருந்தபடியால் அந்த விஷம் அவரை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. தில்லைநாயகம் ஏற்கனவே நோய் வாய்ப்பட்டிருந்தபடியால்தான் அவர் இறந்துவிட்டார். இதுதான் என்னுடைய ஊகம். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"சரியான ஆதாரம் இல்லாமல் நீங்கள் இவ்வாறு முடிவு செய்துவிட்டீர்கள்! வாசகன்தான் ஆராய்ச்சிச்சாலையினுள் புகுந்தான் என்பதற்கு என்ன சாட்சியிருக்கிறது? தில்லைநாயகம் ஓட்டலில் இருந்தது அவனுக்கு எவ்வாறு தெரியவந்தது? சிறந்த ஓட்டல் முதலாளியான ரகுராமன் அவ்வாறு பொறுப்பற்ற சிப்பந்தியைத்தான் ஓட்டலில் வேலைக்கு வைத்துக்கொண்டிருந்திருப்பாரா? மேலும் நீங்கள் இதுபற்றி ஓட்டல் முதலாளியையும் சிப்பந்திகளையும் விசாரித்திருந்திருக்கிறீர்களே! அவ்வாறு ஏதாவது இருந்தால் கொஞ்சமாவது உண்மை வெளிவந்திருக்குமல்லவா? அந்தக் கேள்விகளை எண்ணிப் பார்க்கும்போது எனக்கு ஒரே குழப்பமாய் இருக்கிறது!"

"இந்த வழக்கில் கொலை, கொள்ளை ஆகிய இரண்டு குற்றங்களும் நடந்திருக்கின்றன. அதனுல்தான் இத்தனை குழப்பங்கள்

தோன்றியிருக்கின்றன. இவ்வாறு பலவிதமாக சிந்தித்தால் தான் நாம் ஒருவித முடிவிற்கு வரமுடியும். வாசகனின்மீது குற்றம் சாட்டத் தகுந்த ஆதாரங்களைத்தான் நான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். முதல் முதலாக வாசகனின் நட வடிக்கைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். ஐஸ்கிரீம் பாருக்குச் சென்றால் ஓரளவு உண்மை கிடைக்கும். அடுத்தபடியாக காஞ்சீ புரம் பரிமள பவனத்திற்குச் சென்றால் அங்கு விஜயவல்லியைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம். பிறகுதான் அவ்விருவரின் இருப்பிடத்தையும் கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும்” என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு ஐஸ்கிரீம் பாருக்குப் புறப்பட்டார் துளசிங்கம்.

அப்பொழுது மாலை ஐந்து மணி இருக்கும். ஐஸ்கிரீம் பாரில் கூட்டம் கொஞ்சம் அதிகமாகத்தான் இருந்தது, துளசிங்கம் உயர்ந்தரக சாக்லேட்டு ஒன்றைக் கொண்டுவரச் சொல்லிவிட்டு அங்கு வேலை பார்த்துவந்த ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டே இருந்தார். முதலாளி ஒரு பீங்கான் தட்டில் துளசிங்கம் கேட்ட சாக்லேட்டைக் கொண்டுவந்து வைத்தார். துளசிங்கம் அவருடன் பேச்சுக் கொடுத்து விஷயத்தை ஆரம்பித் தார். தில்லைநாயகத்தை அவருக்குப் புரியவில்லை. ஆனால் ஆதிகேசவனின் பெயரைக் கேட்டவுடன் அவர் புரிந்துகொண்டு விட்டார்.

“அவரை எனக்கு நன்றாய்த் தெரியும். சிற்சில சமயங்களில் காலை வேளைகளில்கூட ரொட்டி, பிஸ்கேட்டு முதலியவைகளைச் சாப்பிட இங்கு வருவார். ஆனால் இன்று காலையிலிருந்து அவரைக் காணவில்லை” என்றார் முதலாளி.

“அவருக்கு உடம்பு சரியாக இல்லை. இரண்டு மூன்று தினங்களில் சரியாகிவிடும். அது சரி, நீங்கள் அவரைக் கடைசி யாக எப்போழுது பார்த்தீர்கள் என்று சொல்லமுடியுமா?”

“ஏன், நேற்று மாலைகூட அவரைப் பார்த்தேன். அவர் தன்னுடன் வேறு ஒருவரையும் அழைத்துக்கொண்டு வந்திருந் ததும் எனக்கு நினைவு இருக்கிறதே!”

“இவர்கள் இருவரும் என்ன அருந்தினார்கள் என்று சொல்ல முடியுமா?”

“நேற்று நாங்கள் பாதாம் எஸென்ஸினால் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம்தான் செய்திருந்தோம். அதைத்தான் அவர்கள் கொண்டு வரச் சொன்னார்கள்.”

“அவர்களைப் பார்க்க வேறு யாராவது வந்திருந்தார்களா?”

"நான் வேலை செய்துகொண்டிருந்த போதிலும் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதை என் கண்கள் எப்பொழுதும் கவனித்துக்கொண்டுதான் இருக்கும். அதனால்தான் வாசல் பக்கத்துப் படிக்கட்டில் ஆதிகேசவனுடன் வந்திருந்த ஆசாமி வேறு ஒரு வாலிபனுடன் பேசிக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். ஆனால் அவர்கள் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது."

"அவர்கள் இருவரும் எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று சொல்ல முடியுமா?"

"இரண்டு மூன்று நிமிடங்கள்தான் இருக்கும், ஆதிகேசனின் நண்பரைப் பார்க்க வந்திருந்த ஆசாமி பலமாகக் கரங்களையும் தலையையும் அசைத்த வண்ணம் பேசிக்கொண்டு இருந்தான். ஆனால் அவனுடைய பேச்சு, என் காதில் விழவில்லை, கடைசியாக அவர், 'முடியாது! கண்டிப்பாக முடியாது!' என்று கூறிய வார்த்தைகள் தான் என் செவிகளில் விழுந்தன; மறுகணம் அவர் உள்ளே வந்துவிட்டார், அந்த வாலிபனும் வெளியே சென்றுவிட்டான்."

"அந்த வாலிபனை உங்களால் அடையாளம் கூற முடியுமா?"

"அவனை எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது, சற்று மா நிறம்; நல்ல உயரம்; உயரத்திற்கேற்ற உடலமைப்பு. வட்ட வடிவமான முகம்; அலை அலையாக வாரி விடப்பட்டிருந்த கிராப்பு. அவனை மறுபடியும் பார்த்தால் அடையாளம் கூறிவிடுவேன்!"

இந்த விசாரணை துப்பறியும் துளசிங்கத்திற்கு மிகுந்த திருப்தியை அளித்தது. வாசகனை—அதாவது குற்றவாளியை அடையாளம் கண்டுபிடிக்க இப்பொழுது இரண்டு ஆசாமிகள் இருக்கிறார்கள்! காஞ்சீபுரத்திற்குச் சென்றால் குற்றவாளியைப் பற்றி மேலும் சில உண்மைகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. ஐஸ்கிரீம் பாரில் விசாரணை செய்த பிறகு, அவர்கள் புசித்த ஐஸ்கிரீமில் விஷம் கலக்கப்பட்டிருந்ததா அல்லது சிற்றுண்டியில் விஷக் கலப்பு ஏற்பட்டதா என்ற குழப்பம் ஏற்பட்டது. துளசிங்கம் அந்தக் குழப்பத்தோடு இன்ஸ்பெக்டரைக் காணப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்.

முதல் நாள் இரவு போலவே அவர் அப்பொழுது அங்கு இல்லை! இன்ஸ்பெக்டர் தனக்குத் தெரியாமல் அதே வழக்கில் வேலை செய்வது துளசிங்கத்திற்குப் புரிந்துவிட்டது. ஆனால் அதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை! எப்படியாவது குற்றவாளியைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று தான் எண்ணம்

கொண்டிருந்தார் அவர். தன்னுடைய இருப்பிடத்திற்குச் செல்ல வேண்டும் என்று நாற்காலியிலிருந்து எழுந்த சமயத்தில் இன்ஸ்பெக்டரின் மேசையின் மீதிருந்த டெலிபோன் மணி ஒலித்தது. துளசிங்கம் ரிஸீவரைக் கையில் எடுத்தார்.

"ஹலோ, போலீஸ் ஸ்டேஷனு?" என்று கேட்டது ஒருபெண் குரல். அது மிகவும் பழக்கமான குரலாக இருந்தது.

"ஆமாம்! நீங்கள் யார்? உங்களுக்கு என்னவேண்டும்?" என்று கேட்டார் துளசிங்கம்.

"நான் அடையாறில் இருக்கும் தில்லைநாயகத்தின் வீட்டிலிருந்து பேசுகிறேன்......"

"ஓ! காந்திமதியா பேசுவது?"

"ஆமாம்! நீங்கள் யார்?"

"துப்பறியும் துளசிங்கம் பேசுகிறேன். இன்ஸ்பெக்டர் இப்பொழுது ஸ்டேஷனில் இல்லை. என்ன விசேஷம்?"

"உங்களை வரவழைக்க வேண்டும் என்பதற்காகத்தான் போன் செய்தேன்."

"என்ன சமாச்சாரம்?"

"இங்கு ஒரு பெரிய விபத்து நேர்ந்திருக்கிறது. உங்களுக்காக வக்கீலும் இங்கு காத்துக்கொண்டிருக்கிறார். உடனே புறப்பட்டு வருகிறீர்களா?"

"விபத்தா? என்ன விபத்து? யாருக்கு என்ன நேர்ந்து விட்டது.?"

"நான் இவைகளை டெலிபோன் மூலம் சொல்ல முடியாது. உடனே புறப்பட்டு வாருங்கள். எல்லா விஷயங்களையும் நேரில் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு ரிஸீவரைக் கீழே வைத்து விட்டாள் அந்தப் பெண்.

அன்று இரவு வண்டியிலேயே காஞ்சீபுரம் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தார் அவர், ஆனால் காந்திமதியின் டெலிபோன் செய்தி அந்த தீர்மானத்தை மாற்றிவிட்டது, அடையாறில் என்ன நடந்திருக்கிறது என்று அவருக்குப் புரியவில்லை. அத்துடன் காந்திமதியின் மூலம் விஜயவல்லியின் குணாதிசயங்களை அறிந்து கொண்டால் பரிமள பவனத்தில் அவளைப்பற்றி விசாரித்தறிய சுலபமாய் இருக்கும் என்றும் தோன்றியது. ஆகவே மறுநாள் காலை வண்டியில் காஞ்சீபுரத்திற்குப் போகலாம் என்ற எண்ணத்துடன் ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்துகொண்டு அடையாறுக்கு விரைந்தார் துப்பறியும் துளசிங்கம்.

அடையாறில் இருந்த தில்லைநாயகத்தின் வீட்டிற்கு துப்பறியும் துளசிங்கம் சென்றது அதுதான் முதல் தடவை. ஆகவே சுற்றுமுற்றும் கண்ணோட்டம் செலுத்திய வண்ணம் வீட்டின் வாசலில் வந்து நின்றார் அவர். ஒருமுறை லேசாகக் கதவைத் தட்டினார். மறுகணம் கதவு திறந்துகொண்டது. கலவரமடைந்த முகத்தோற்றத்துடன் கதவினருகில் நின்று கொண்டிருந்தாள் காந்திமதி. அவளுடைய முகம் வெகுவாக மாறி இருந்தது. எஜமானரின் திடீர் மரணத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக அவ்வாறு குழப்பமடைந்திருப்பாளோ என்று எண்ணினார் துளசிங்கம்.

"நீங்கள் உடனே வந்ததற்கு என்னுடைய மனமார்ந்த வந்தனம். உள்ளே வாருங்கள்; உங்களுக்காக வக்கீல் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று அழைத்தாள் காந்திமதி.

"என்ன விபத்து? வக்கீல் எதற்காக இங்கு வந்திருக்கிறார்?" என்று ஆவலுடன் கேட்டார் அவர்.

"சற்று நேரத்திற்கு முன்பு இங்கு நடந்தவைகளை நினைத்துப் பார்க்கும்போது என்னுடைய உடல் நடுங்குகிறது. வக்கீல் எல்லாவற்றையும் உங்களுக்கு விவரமாகச் சொல்லுவார்" என்று கூறியவண்ணம் ஹாலுக்குப் பக்கத்தில் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள் காந்திமதி.

வக்கீல் பஞ்சநாதன் நெற்றியில் பலமான கட்டுடன் அவ்வறையில் இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்து சில குறிப்புகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவரது கன்னத்திலும் முகவாய்க் கட்டையிலும் ரத்தக் கறைகள் தென்பட்டன. காந்திமதி கூறியது உண்மை! அவருக்குத்தான் ஏதோ பயங்கர விபத்து!

"மிஸ்டர் பஞ்சநாதன்! ஏன் ஒருமாதிரியாய் இருக்கிறீர்கள்? என்ன நடந்தது?" என்று பரபரப்புடன் கேட்ட வண்ணம் அவருக்கு எதிரில் வந்து நின்றார் துளசிங்கம்.

வக்கீல் தலையை உயர்த்தி ஒரு முறை அவரைப் பார்த்தார். துப்பறிபவரின் வருகையை அவர் எதிர்பார்க்கவில்லை என்று அவருடைய விழிகள் வெளிப்படுத்தின! ஒரு விநாடி நேரம் வைத்த விழி வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு பேச ஆரம்பித்தார் வக்கீல்:

"என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது! எவ்வாறு அந்த விபத்து ஏற்பட்டது என்றும் என்னால்

நிச்சயமாய்க் கூறமுடியாது. அவைகளை நீங்கள் தான் கண்டு பிடிக்க வேண்டும்! முதலில் தில்லைநாயகத்தின் ஆபீஸ் அறையைப் பரிசோதனை செய்யுங்கள். பிறகு நடந்தவைகளை நான் நாளை கூறுகிறேன்" என்று கூறிவிட்டு நாற்காலியை விட்டெழுந்து மெல்ல நடந்தார். துளசிங்கம் அவரை ஆவலுடன் பின்பற்றிச் சென்றார். அந்த ஹாலின் மறுபுறமிருந்த அறையினுள் பிரவேசித்து, கரத்திலிருந்த டார்ச் விளக்கைப் பொருத்தினார். இருள் சூழ்ந்திருந்த அந்த அறை இப்பொழுது பிரகாசமாகியது. அந்த அறையிலிருந்த பொருள்கள் அலங்கோலமாய்க் கிடந்தன. கண்ணாடித் துண்டுகள் தரையில் சிதறிக் கிடந்தன. நாற்காலி ஒன்று தலைகுப்புற விழுந்திருந்தது. சுவரில் மாட்டப்பட்டிருந்த படம் ஒன்று ஆணியுடன் பெயர்த்துக்கொண்டு தரையில் விழுந்து நூறு சுக்கலாகிக்கிடந்தது; அந்த அறையைப் பார்த்தவுடன் மாம்பலம் ஆராய்ச்சிச் சாலையில் பாழாக்கப்பட்டிருந்த ஆதிகேசவனின் அறையின் நினைவுதான் அவருக்கு வந்தது. ஏறக்குறைய இரண்டும் ஒன்றுபோல் தோன்றியது. வக்கீல் அவ்வறையில் நடந்திருக்கும் விபத்தில் சிக்கிக்கொண்டுதான் படுகாயமடைந்திருக்க வேண்டும் என்று துளசிங்கத்திற்குப் புரிந்துவிட்டது!

வக்கீல் அவரை அழைத்துக்கொண்டு ஹாலுக்கு வந்து அங்கிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டார். துளசிங்கம் டைரியை எடுத்து வைத்துக்கொண்டார், வக்கீல் நடந்த விஷயங்களைக் கூற ஆரம்பித்தார்:

"தில்லைநாயகத்தின் சொத்து சம்பந்தமான ஜாபிதாவைத் தயாரிப்பதற்காக நான் இன்று மாலை ஐந்து மணிசுமாருக்கு இங்கு வந்து சேர்ந்தேன். அப்பொழுது காந்திமதிமட்டும் தான் இந்த வீட்டில் இருந்தாள். தில்லைநாயகத்தின் மனைவிக்கு விஷயம் தெரிந்து அவள் வந்திருப்பாளோ என்று நினைத்தேன். ஆனால் அவளிடமிருந்து எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. அவளுடைய விலாசம் எனக்குத் தெரியாததினால் அவளுக்கு விஷயத்தைத் தெரிவிக்க முடியவில்லை! நான் இந்த வீட்டில் இருக்கும் பொருள்களின் ஜாபிதாவைத் தயாரிக்க முற்பட்டேன். சிறிது நேரத்தில் என் வேலை முடிந்துவிட்டது. கடைசியாக தில்லைநாயகத்தின் ஆபீஸ் அறைதான் பாக்கி இருந்தது. அவ்வறையினுள் சென்று தில்லைநாயகத்தின் மேசை, பீரோ முதலியவைகளைப் பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். சிறிது நேரத்திற்குள் இருட்டிவிட்டது. ஆகவே, மின்சார விசையை அழுத்தினேன். மறுகணம் 'டுமீல்' என்று துப்பாக்கி வெடிப்பதுபோல் பயங்கரச் சப்தம் ஒன்று கேட்டது! அந்த வெடி சப்தத்தினால் அவ்

வறையே அதிர்ந்து போய்விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மறுகணம் கண்ணுடித் துண்டுகள் சிதறி என் முகத்தின் மீது விழுந்தன! நான் நிதானம் இழந்து நிலை தடுமாறி தரையில் விழுந்து விட்டேன்! ஓசை கேட்டு காந்திமதி அவ்வறையினுள் ஓடிவந்தாள். 'என்ன சப்தம்? என்ன நடந்து விட்டது?' என்று பதட்டத்துடன் கேட்டாள். என்னால் உடனே பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. காந்திமதியின் உதவியின்பேரில் அறையைவிட்டு வெளியே வந்தேன். என் முகத்தில் இருந்த ரத்தக் கறைகளைத் துடைத்துக் கட்டுப்போட்டாள். உடனே பக்கத்து வீட்டில் இருக்கும் டாக்டரையும் வரவழைத்து எனக்குச் சிகிச்சை செய்தாள். அவள்தான் உங்களுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தி இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்."

"ஆமாம்! அதனால்தான் உடனே புறப்பட்டு வந்தேன். இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என்று உங்களால் சொல்ல முடியுமா?"

"தரையில் பட்டவுடன் வெடிக்கக்கூடிய பொருளை யாரோ ஜன்னல் வழியாக அந்த அறையினுள் வீசியிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அந்தப் பொருள் மின்சார பல்பின் மீதுபட்டு வெடித்துச் சிதறி இந்த விபத்தை உண்டாக்கி இருக்க வேண்டும்."

"இந்த விபத்து சம்பந்தமாக யார் மீதாவது உங்களுக்குச் சந்தேகம் உண்டா?"

"நான் ஒரு வக்கீலாகையினால் தொழில் முறையில் எனக்கு விரோதிகள் இல்லாமல் இல்லை. ஆனால் ஒருவருக்கும் என்னைக் கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்காது. அவ்வளவு தூரத்திற்கு நான் ஒருவரையும் பகைத்துக் கொள்ளவில்லை. தில்லைநாயகத்தின் மீது பகைமை கொண்ட யாரோ தான் இதைச் செய்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். நான் தில்லைநாயகம் அமரும் நாற்காலியில் அமர்ந்து ஜாபிதா தயாரித்துக் கொண்டிருந்தபடியால் நான் தான் அவர் என்று நினைத்து அந்தக் குண்டை வீசி எறிந்திருக்கலாம்!"

"தில்லைநாயகம் முக்கிய ஆராய்ச்சி ஒன்றில் மும்முரமாய் வேலைசெய்து கொண்டிருப்பதாய் எனக்குத் தெரிய வருகிறது. அது விஷயமாகப் பொறாமை ஏற்பட்டு இந்த விபத்து நடந்திருக்குமோ?"

"தில்லைநாயகத்துடன் நான் பழகி இருந்தபோதிலும் ரசாயனம், ஆராய்ச்சி முதலியவைகளைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அதனால் அவர் அவைகளைப்பற்றி என்னிடம் ஒரு போதும் பேசியதில்லை. அவருடைய ஆராய்ச்சிகளைப்பற்றி அறியவும் நான் ஆசைப்பட்டதில்லை. ஆனால் ஒருவித விசேஷ மரப்பட்டையிலிருந்து பஞ்சு தயாரிக்க பெருமுயற்சி செய்து வருவதாக மட்டும் ஒருமுறை என் காதில் விழுந்தது! அந்த ஆராய்ச்சி வெற்றிகரமாக முடிந்தால் தங்களுக்குப் பெருத்த லாபமும், பெயரும் புகழும் கிடைக்கும் என்று அவர் சொல்லி இருக்கிறார். அவர்களின் ஆராய்ச்சியின்போது யார் மரணமடைய நேர்ந்தபோதிலும் உயிருடன் இருப்பவரே அதனால் ஏற்படும் பலன்களை அனுபவித்துக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தபடியால், அந்த ஆராய்ச்சிச் சாலையை ஆதிகேசவனிடமே ஒப்படைத்துவிடப் போகிறேன்" என்றார் வக்கீல்.

"இன்று மாலை ஆதிகேசவனைப் பார்த்தபோது தில்லைநாயகத்தின் ஆராய்ச்சிக் குறிப்புகளைப்பற்றி அவர் விசாரித்தார். விரோதிகளின் கரத்தில் சிக்கிவிடப் போகிறதே என்று மிகவும் கவலைப்பட்டார்."

"அதைப்பற்றி அவர் கவலைப்பட வேண்டாம். அவருடைய குறிப்புகள் அனைத்தும் என்னிடம் பத்திரமாய் இருக்கின்றன. அந்தக் குறிப்புகளில் என்ன எழுதி இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது" என்றார் வக்கீல்.

அந்தச் சமயத்தில் காந்திமதி தேனீர் நிரம்பிய இரண்டு பீங்கான் கோப்பைகளைக் கொண்டு வந்து அவர்களின் முன்னால் வைத்தாள். மின்சார விசையில் ஏதாவது பழுது ஏற்பட்டு அந்த விபத்து நேர்ந்திருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டபடியால், "மின்சார அமைப்பில் சமீபத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டதா?" என்று கேட்டார்.

"அப்படி ஒன்றும் இல்லை. நேற்றுக்கூட எலெக்டிரிக் ஆபீஸிலிருந்து விளக்குகளைப் பரிசோதனை செய்ய ஒருவன் வந்துவிட்டுப் போனான்."

"நேற்று வந்திருந்தானா?"

"ஆமாம், எஜமானர் வழக்கமாக ஏழு மணிக்கு வந்து விடுவார். அவருடைய வருகையை எதிர்பார்த்த வண்ணம் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது டெலிபோன் மணி ஒலித்தது. எஜமானரிடமிருந்து ஏதாவது செய்தி வந்திருக்கிறதோ என்று அதைக் கவனித்தேன். அவர்

உடல் நலம் பாதிக்கப்பட்டு ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாய் அறிந்து அங்கு கிளம்ப முயற்சித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் தான் எலெக்டிரிக் கம்பெனியிலிருந்து அந்த ஆசாமி வந்திருந்தான். இந்த வட்டாரத்தில் அடிக்கடி மின்சாரப் பழுது ஏற்படுவதாகவும் அதனுல் ஒவ்வொரு இடமாகப் பரிசோதனை செய்துகொண்டு வருவதாகவும் சொன்னுன். என்னுடைய அவசரத்தையும் அவன் பொருட்படுத்தவில்லை. ஒவ்வொரு விளக்குகளாகப் பார்த்துக்கொண்டே வந்தான். ஒன்றிரண்டு பல்புகளையும் மாற்றினுன்.''

"அப்படியா? அவன் தில்லைநாயகத்தின் அறையினுள் சென்ருனு?"

"அவன் அந்த அறைக்குள்ளும் சென்ருன். ஆனுல் அங்கு என்ன செய்தான் என்பது எனக்குத் தெரியாது. ஒரு வேளை அந்த அறையின் பல்பையும் அவன் மாற்றி வைத்தாலும் வைத்திருக்கலாம்."

"அந்த ஆசாமி வந்துபோன பிறகு நீங்கள் தில்லைநாயகத்தின் அறையினுள் சென்றீர்களா?"

"இல்லை. அங்கு செல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. அவர் இறந்துவிட்ட செய்தி எனக்குக் குழப்பத்தை உண்டாக்கி விட்டபடியால் அந்த அறைக்குள் செல்லவில்லை. எலெக்டிரிக் கம்பெனியிலிருந்து அந்த ஆசாமி வந்துபோன பிறகு முதல் முதலாக வக்கீல்தான் அந்த அறையினுள் சென்ருர்."

"நீங்கள் அந்த ஆசாமியின் அடையாளம் கூறமுடியுமா?"

"அவனுக்கு அதிக வயதாகவில்லை. நல்ல உயரமும் உயரத்திற்கேற்ற உடலமைப்புடனும் இருந்தான்."

"மறுபடியும் அவனைப் பார்த்தால் அடையாளம் கூற முடியுமா?"

"அவனை எனக்கு நன்ருய் நினைவு இருக்கிறது. பார்த்தால் உடனே சொல்லிவிடுவேன்."

குற்றுவாளி தான் மின்சாரக் கம்பெனியைச் சேர்ந்த ஆசாமி என்று சொல்லிக்கொண்டு காந்திமதியை ஏமாற்றி இருக்கிருன் என்பது விளங்கிவிட்டது. அத்துடன் அவன்தான் மின்சாரம் பாயும்போது வெடிக்கக்கூடிய விசேஷ பல்பைப் பொருத்தி விட்டுப் போயிருக்கிருன் என்பதும் விளங்கியது. தில்லைநாயகம் ஆபீஸ் அறையினுள் பிரவேசித்து மின்சார விசையை அழுத்து

வார், மறுகணம் அந்த பல்பு வெடித்து அவர் விபத்திற்குள்ளாகி விடுவார் என்று குற்றவாளி எண்ணியிருக்க வேண்டும். ஆனல் அது வேறு விதமாக முடிந்துவிட்டது!"

"அது சரி! விஜயவல்லியை உங்களுக்குத் தெரியுமா?" என்று விசாரணையை வேறு பக்கம் திருப்பினர் துளசிங்கம்.

"நன்ருகத் தெரியும். அவள் இந்த வீட்டில் இருந்தபோது தான் நான் இங்கு வேலைக்கு வந்து அமர்ந்தேன்."

"விஜயவல்லி வீட்டைவிட்டு வெளியே போவதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியுமா?"

"அவள் நாகரிக மோகம் கொண்டவள். குடும்பத்தின் மீது அவளுக்குக் கொஞ்சம்கூட அக்கறை கிடையாது."

"கணவனுக்கும் மனைவிக்கும் ஏன் மனஸ்தாபம் ஏற்பட்டது?"

"விஜயவல்லி நினைத்தபோது வீட்டைவிட்டு வெளியேறுவாள். நினைத்த சமயத்தில் திரும்பி வருவாள். எஜமானரின் வார்த்தைகளுக்குச் சற்றும் மதிப்பு கொடுக்க மாட்டாள். எதிர்த்துப் பேசுவாள். என்னதான் ஒரு பெண்ணுக்குச் சுதந்திர உணர்ச்சி இருந்தபோதிலும் இவ்வாறு அலட்சிய மனோபாவத்துடன் நடந்துகொண்டால் கணவனுக்குக் கோபம் உண்டாவது இயற்கைதானே? அதன் விளைவாக எழுந்த மனஸ்தாபம் வளர்ந்து பெரும்புயலாகிவிட்டது."

"அவள் யாருடன் அதிகத் தொடர்பு கொண்டிருந்தாள் என்று சொல்லமுடியுமா?"

"நான் இங்கு வேலைக்கு வந்ததுமுதல் என்னை வெறுத்து வந்தாள் அவள். நான் அவளுடைய கணவரின் கட்சியைச் சேர்ந்தவள் என்று என்னிடம் அதிகம் பழகாமல் இருந்து வந்தாள். நானும் அவளுடைய விஷயங்களில் தலையிடாமல் தான் இருந்துவந்தேன். ஆயினும் அவளுக்கு நிறைய சிநேகிதர்கள் உண்டு என்பது எனக்குத் தெரியும். வாலிபர்கள் பலர் அடிக்கடி அவளைப் பார்க்க இங்கு வருவது உண்டு. எல்லோரிடமும் சகஜமாகப் பேசிப் பழகிவந்தாள் அவள். ஆனல் யாருடனும் விசேஷ அபிமானத்துடன் நடந்து கொண்டதில்லை. கணவனின் கொள்கையும் அடக்குமுறையும் தனக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினல்தான் அவள் வீட்டைவிட்டு சென்ருளே தவிர, வேறு விதமாக அவள்மீது சந்தேகம் கொள்வற்கில்லை" என்று பதிலுரைத்தாள் காந்திமதி.

துப்பறியும் துளசிங்கம் அவளை அனுப்பிவிட்டு வக்கீலின் பக்கம் தலையைத் திருப்பினர். விஜயவல்லியின் குணதிசயங் களைப்பற்றி அவர் ஏற்கனவே அறிந்திருந்தபடியால் காந்திமதி யின் வார்த்தைகளைக்கேட்டு ஆச்சரியப்படவில்லை. ஆனல் மின் சார பல்பைப்பற்றி அவள் கூறிய செய்திதான் அவருக்குத் திகைப்பை உண்டாக்கியது. 'முதல் நாள் மின்சாரத்தைப் பரி சோதனை செய்யவந்தவன் உண்மையானவன் தானு என்று அறிய காந்திமதி ஏன் முயற்சி செய்யவில்லை? இருட்டிய பிறகு எலெக் டிரிக் கம்பெனியிலிருந்து பரிசோதனை செய்ய யாராவது வருவார் களா என்ற சந்தேகம் ஏன் அவளுக்கு எழவில்லை? ஒருவேளை அவளும் இந்த விபத்திற்குக் காரணமாய் இருப்பாளோ? இவ் வாறு பல வினக்கள் எழுந்து வக்கீலைக் குழப்பின. காந்திமதியை விசாரித்ததிலிருந்து அறிந்த உண்மைகளை டைரியில் குறித்துக் கொண்டு, "தில்லைநாயகத்தின் உயிரைப் போக்குவதற்காகத்தான் இந்தத் தந்திரம் கையாளப்பட்டிருக்கிறது, ஆனல் அவர் தப்பி விட் டார், இதிலிருந்து குற்றவாளிக்கு இரண்டு முக்கிய விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன என்ற உண்மை விளங்குகிறது. குற்ற வாளி, தில்லைநாயகத்தின் அன்ருட அலுவல்களையும், அவர் வீட் டில் இல்லாத சமயங்களில் வேறு எவரும் ஆபீஸ் அறையினுள் செல்ல மாட்டார்கள் என்ற விஷயமும் தெரிந்திருக்கிறது என் பது ஒன்று. அத்துடன் அவனுக்கு தில்லைநாயகம் அன்று இரவு ரத்தத்தில் விஷக்கலப்பு ஏற்பட்டு அதனல் பாதிக்கப்படுவார் என்பது தெரியாமல் இருந்திருக்கிறது என்பது மற்ருென்று" என்ருர் துளசிங்கம்.

"இந்த இரண்டு குற்றங்களையும் ஒரே ஆசாமி செய்திருக்க முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது. தில்லைநாயகத்தின் உணவில் விஷத்தைக் கலக்க ஏற்பாடு செய்தவன் மறுபடியும் அவ ருடைய ஆபீஸ் அறையில் மின்சார பல்பை மாற்றி அமைத்து இவ்வித விபத்தை உண்டாக்க ஏன் சூழ்ச்சி செய்ய வேண்டும்? இரண்டும் வெவ்வேறு ஆசாமிகளினல் செய்யப் பட்டதாக இருக்க வேண்டும் என்றுதான் நான் எண்ணுகிறேன்" என்ருர் வக்கீல்.

"நீங்கள் நினைப்பதுபோல் இரண்டு வெவ்வேறு ஆசாமி கள் இவைகளைச் செய்திருக்கலாம். ஆனல் விஜயவல்லி தான் இவைகளுக்கு அடிப்படையான காரணம் என்று நான் நிச்சய மாய்க் கூறுவேன். அவள் தன் கணவனைப் பயமுறுத்திக் கடிதம் எழுதி இருக்கிருள். அவளுடைய ஆசாமி ஒருவன் தில்லைநாய கத்தைப் பின்பற்றிச் சென்று இருக்கிருன். அத்துடன் ஆபீஸ்

அறையில் மின்சார பல்பை மாற்றி அமைத்தவன், விஜயவல்லி யின் ஆசாமி என்றும் எண்ணத் தோன்றுகிறது. விஜயவல்லி தன் கணவனை ஒழிக்க இரண்டு பேரை நியமித்திருக்கிருள் என்று எண்ணுகிறேன். அவருடைய உணவில் விஷம் கலக்கும் பொறுப்பை ஒருவனிடம் ஒப்படைத்திருக்கிருள். அது ஒரு வேளை தவறி விடப்போகிறதே என்றுதான் வீட்டினுள் அவரை விபத்திற்குள்ளாக்க மற்றொருவனை நியமித்திருக்கிருள், தில்லை நாயகம் தற்செயலாக இறக்கவில்லை. மனைவியினுல் தந்திரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிருர். விஜயவல்லியைச் சந்தித்து விசாரித்தால் உண்மை விளங்கும்" என்று கூறிவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார் துளசிங்கம்.

மறு நாள் காலை சென்னையிலிருந்து புறப்பட்ட காஞ்சீபுரம் ரயிலில் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் அமர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தார் துளசிங்கம். அந்தப் பெட்டியில் அவர் ஒருவர் தான் இருந்தார். நிம்மதியாய் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் அனைத்தும் இருந்தன. ஆனால் அவர் அப்பொழுது அமைதியிழந்து காணப்பட்டார். தில்லைநாயகத்தின் மரண வழக்குதான் அப்பொழுது அவருடைய மூளையை வெகுவாகக் குழப்பிக் கொண்டிருந்தது.

விஜயவல்லியின் எச்சரிக்கைக் கடிதம் அவருக்கு அன்று காலையில் தான் வந்திருக்கிறது. உடனே தனக்குத் தந்தி அடிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். யோசிப்பதற்குக்கூட அவள் அவருக்கு அவகாசம் கொடுக்கவில்லை! அவர் தன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தித் தந்தியடிக்கவில்லை. அவ்வாறு இருக்கும்போது அவர் ஏன் அந்தக் கடிதத்தை ஆராய்ச்சிச் சாலைக்குக் கொண்டு வந்தார்? வழக்கம்போல் அந்தக் கடிதத்தை அவர் ஏன் உதாசீனம் செய்யவில்லை? ஒரு வேளை அது ஒருவருடைய கண்ணிலும் படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அதை அங்கு கொண்டு வந்து வைத்திருப்பாரோ? ஒரு வேளை நன்கு யோசித்து ஒரு முடிவிற்கு வரலாம் என்ற எண்ணம் தோன்றியிருக்குமோ? அவ்வாறு அவர் தந்தி அடிக்க முயன்று இருந்தாலும் அந்தக் கடிதத்தில் அவளுடைய விலாசம் காணப்பட வில்லையே! உடனே பதில் எழுத வேண்டும் என்று எச்சரித்திருந்த அவள் அத்தனை அஜாக்கிரதையாய் இருந்திருப்பாளா?—இவ்வாறு எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தார் அவர். அந்த வண்டி விரைவில் காஞ்சீபுரத்தை அடைந்து அவருடைய குழப்பத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது.

காஞ்சீபுரத்தில் சமீபத்தில் கட்டப்பட்ட பரிமள பவனத்தைப்பற்றி அவர் கேள்விப்பட்டிருந்தார். அந்த ஓட்டலைப் பற்றி அடிக்கடி பிரமாதமாகப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. செல்வந்தர்கள் வசிப்பதற்கு ஏற்ற இடம் அது என்று அவர் அறிந்திருந்தாரே தவிர, அந்த ஓட்டலை அவர் நேரில் பார்த்தது இல்லை. இப்பொழுது தான் முதல் முறையாகப் பரிமள பவனத்திற்கு வந்தார் அவர்.

## 6

அந்த ஓட்டல் மானேஜர் உடையிலிருந்தபடி அவர் கன்னட தேசத்தைச் சேர்ந்தவர் என்பது நன்கு

விளங்கி விட்டது. ஆயினும் காஞ்சிபுரத்தில் பல காலம் வசித்து வந்தபடியால் நன்கு தமிழ் பேசினர் அவர். துப்பறியும் துளசிங்கம் தன்னை யாரென்று அறிமுகப்படுத்திக் கொண்டு விஷயத்திற்கு வந்தார்.

" விஜயவல்லியைப்பற்றித் தானே கேட்கிறீர்கள்? அவளை எனக்கு இரண்டு மூன்று வருஷகாலமாகத் தெரியும். எங்களுடைய நிரந்தர ஆதரவாளர்களில் அவளும் ஒருத்தி. அவள் கலியாணமானவள் என்பது எனக்குத் தெரியாது, ஆனல் அவளுடைய கணவனை நான் பார்த்தது இல்லை. இந்த ஊரில் இருக்கும் தன்னுடைய நிலபுலன்களைக் கவனிப்பதற்காக வந்து போவதாய்ச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒருபோதும் அவளுடைய கணவன் இங்கு வந்தது இல்லை. நாகரிக மோகமும் முற்போக்குக் கொள்கைகளும் மிகுந்திருந்த அவள் அவ்வாறு தனியாக வசித்ததைக் குறித்து நான் ஆச்சரியப்படவில்லை! "

" அவள் சென்ற புதன்கிழமை யன்று திடீரென்று புறப்பட்டு விட்டாள் அல்லவா?"

" ஆமாம். அவள் தனக்கு அவசர வேலை இருப்பதாகச் சொல்லிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்."

" அவள் எங்கு சென்ருள் என்று சொல்ல முடியுமா?"

" அது எனக்குத் தெரியாது. இங்கு வந்து தங்குபவர்களை, என்ன செய்கிருர்கள், எங்கு போகிருர்கள் என்று கேட்கும் வழக்கம் எனக்குக் கிடையாது. எனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்த பிறகு அவர்களைப்பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?"

" அது வாஸ்தவம்தான். ஆனல் சில நாட்கள் ஓர் ஓட்டலில் தங்கிவிட்டுக் கிளம்பும்போது தங்களுக்கு வரும் தபால்களை அனுப்பி வைப்பதற்காக தங்களின் விலாசத்தைக் கொடுத்து விட்டுச் செல்வது சிலரது வழக்கமாயிற்றே என்று கேட்டேன்."

" சிலர் அப்படிச் செய்கிருர்கள். சிலர் ஒன்றும் சொல்லாமல்கூட கிளம்பி விடுகிருர்கள். விஜயவல்லி எப்பொழுதும் தான் போகும் இடத்தைத் தெரியப்படுத்தி விட்டுத்தான் செல்வாள். ஆனல் இந்த முறை ஏனே ஒன்றும் சொல்லவில்லை!"

" இதிலிருந்து அவள் வழக்கத்தைவிட விரைவாகக் கிளம்பி இருக்கிருள் என்று விளங்குகிறதல்லவா? அது சரி, அவள் எவ்வளவு நாட்கள் இந்த ஓட்டலில் தங்கி இருந்தாள்?"

" சுமார் நாற்பது நாட்களாக இங்குதான் இருந்தாள்!"

" தன்னுடைய நிலபுலன்களைப் பார்க்க வந்திருப்பதாகக் கூறிய அவள் அவ்வளவு நாட்கள் இங்கு தங்கியது உங்களுக்குச் சந்தேகத்தை விளைவிக்கவில்லையா ?"

" இதில் சந்தேகப்படுவதற்கு என்ன இருக்கிறது ? வாரா வாரம் எங்களுக்குச் சேர வேண்டிய பணத்தை ஒழுங்காகக் கொடுத்து வந்தாள்! அவளைப்பற்றி எந்த விதமான புகாரும் என் காதில் விழவில்லை. அவளைத் தேடிக் கொண்டு பலர் வருவதுண்டு. ஆனால் அவள் ஒருவரையும் தன்னுடைய அறையினுள் அனுவசியமாய் அனுமதிக்க மாட்டாள். எல்லோருக்கும் பொதுவான ஹாலில் அமர்ந்துதான் பேசிக்கொண்டிருப்பாள். அப்படியிருக்கும்போது அவளை நான் ஏன் சந்தேகிக்கவேண்டும்?"

" சென்ற புதன்கிழமை காலை விஜயவல்லியைத் தேடிக் கொண்டு இங்கு யாராவது வந்தார்களா?"

" புதன்கிழமையன்று ? ஆமாம், அன்று காலை நான் தற்செயலாய் வாசல் பக்கம் போனேன். அப்பொழுது ஒரு வாலிபன் விஜயவல்லி இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு வந்தான். அவள் இருக்கும் அறையைத் தெரிவித்தேன். வாசல் படிக்கட்டில் நின்றவண்ணம் அவன் என்ன செய்கிறான் என்று நான் கவனித்தேன். அந்த வாலிபன் கம்பீரமாக வராந்தாவில் நடந்து விஜயவல்லியின் அறையின் முன்னால் போய் நின்றான். அவன் கதவைத் தட்டியவுடன் வெளியே எட்டிப் பார்த்தாள் விஜய வல்லி. ஒரு நிமிடம் இருவரும் ஏதோ பேசிக்கொண்டார்கள். பிறகு அந்த வாலிபனை அழைத்துக்கொண்டு அவள் ஹாலுக்கு வந்து விட்டாள்."

" அவள் அவனிடம் எவ்வாறு பழகினாள் ?"

"கதவைத் திறந்து கொண்டு வெளியே தலையை நீட்டிய விஜயவல்லி அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவனை அவள் உடனே புரிந்து கொள்ளவில்லை என்பதை அந்தப் பார்வை வெளிப்படுத்தியது. "அட நீயா ? என்னால் நம்ப முடியவில்லையே ?' என்று அவள் சற்று உரத்த குரலில் உச்சரித்த வார்த்தைகள் மட்டும் என் செவிகளில் விழுந்தன. அந்த வாலிபன் யாரென்று எனக்குத் தெரியாவிட்டாலும் அவனை அவள் வெகு காலத்திற்குப் பிறகு பார்க்கிறாள் என்பது எனக்கு விளங்கி விட்டது."

" அவர்கள் இருவரும் எவ்வாறு பழகினார்கள் என்று சொல்ல முடியுமா ?

“பல நாட்களுக்குப் பிறகு சந்திக்கும் உறவினர்கள் எவ்வாறு பழகுவார்களோ, அவ்வாறுதான் பழகினர்கள்.”

“அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள்?”

“அவர்கள் ஹாலுக்கு வந்தவுடன் நான் என் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டேன். ஆகவே அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியாது.”

“அந்த வாலிபனை உங்களுக்கு நினைவு இருக்கிறதல்லவா?”

“நன்ருக நினைவு இருக்கிறது. மறுபடியும் பார்த்தால் அடையாளம் கண்டுபிடித்து விடுவேன்,”

“அந்த வாலிபனைச் சந்தித்த பிறகு அவள் என்ன செய்தாள்?”

“அவர்களின் பேச்சு எப்பொழுது முடிந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனல் நான் வேலைகளை முடித்துக் கொண்டு இங்கு வந்தவுடன் அறையைக் காலி செய்வதாய்க் கூறிக் கணக்குத் தீர்த்துப் பணத்தைக் கொடுத்துவிட்டு உடனே புறப்பட்டு விட்டாள் அவள்” என்று பதிலுரைத்தார் அந்த ஓட்டல் மானேஜர்.

பரிமள பவனத்திலிருந்து புறப்பட்ட துப்பறியும் துளசிங்கத்தின் மூளை முன்னைவிட வேகமாக வேலை செய்தது. அந்த வாலிபனைச் சந்தித்துப் பேசியவுடன் விஜயவல்லி திடீரென்று புறப்பட்டு விட்டாள்! அவன் கூறிய செய்தி அவளிடம் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. அந்த வாலிபன் ஏற்கனவே அறிமுகமாய் இருந்த வாசகன்தான். இதில் சந்தேகம் இல்லை. ஆனல், அந்த வாலிபனைப் பார்த்தவுடன் அவள் புரிந்துகொள்ளவில்லை என்று ஓட்டல் மானேஜர் கூறியதுதான் அவளுடைய குழப்பத்தை அதிகப்படுத்திவிட்டது. செவ்வாய்க் கிழமையன்று தில்லைநாயகத்தை ஒழிக்கச் சூழ்ச்சிகள் செய்த அதே வாலிபன் தான் புதன்கிழமை காலை விஜயவல்லியைப் பார்க்க பரிமள பவனத்திற்கு வந்திருக்கிருன் என்ருல் அவனை ஏன் அவள் பார்த்தவுடன் புரிந்துகொள்ளவில்லை? அந்த வாலிபனைக் கண்டு அவள் ஏன் ஆச்சரியப்படவேண்டும்? ஒருவேளை அவள் அவ்வாறு நடித்திருப்பாளோ? அந்த வாலிபன் விஜயவல்லியின் கூட்டத்தைச் சேர்ந்தவனுக இல்லாவிட்டால் அவன் எதற்காகத் தில்லைநாயகத்தைப் பின்தொடர்ந்து சென்ருன்? அவர் இறந்து விட்ட செய்தியைத் தெரிவிக்க அவன் ஏன் அத்துணை அவசரமாக விஜயவல்லியைக் காணவந்தான்? அவனுக்கு எவ்வாறு

விஜயவல்லியின் விலாசம் தெரியவந்தது? முன்னைவிட அதிக மான குழப்பத்துடன் சென்னை திரும்பினார் துளசிங்கம். ஆனால் வந்தவுடன் அந்தக் குழப்பத்திற்கு ஒரு முடிவு ஏற்பட்டது. விரைவில் தன்னை வந்து பார்க்கும்படி துளசிங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருந்தார் வக்கீல் பஞ்சநாதன். வக்கீலின் வீட்டிற்குச் சென்றார் துளசிங்கம். முதல் நாளைவிடக் கொஞ்சம் தெம்பாகப் பேசினார் வக்கீல்.

"நேற்று எனக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சியால் ஒரு முக்கிய மான விஷயத்தை உங்களிடம் கூற மறந்துவிட்டேன். அது உங்கள் விசாரணைக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தோன்றியது. அதனால்தான் உங்களை இத்தனை அவசரமாகக் கூப்பிட்டேன். தில்லைநாயகம் நன்கு படித்தவர், திறமை வாய்ந்தவர், எடுத்த காரியத்தை எப்படியாவது வெற்றிகர மாக முடித்தாகவேண்டும் என்ற பிடிவாதம் கொண்டவர். ஆனால் அவருக்குச் சரியாக பழகத்தெரியாது. அற்ப புத்தி யுள்ளவர், முன்கோபமும் பிடிவாத குணமும் கொண்டவர். அதனால்தான் அவருக்கு அத்தனை செல்வாக்கு ஏற்படவில்லை. விஜயவல்லி அவருடைய அத்தையின் மகள். அழகாகவும் நாகரிகமாகவும் நன்றாகப் படித்தவளாயும் இருந்தபடியால் அவளை அவர் மணந்துகொண்டார். அந்தக் கலியாணத்திலிருந்து அவருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் சச்சரவு ஏற்பட ஆரம்பித்தது. அது அதிகமாகித் தன் உற்றார் உறவினர்களின் தொடர்பையே விட்டுவிட்டார் அவர்! குடும்பத்திலிருந்து பிரிந்துவந்தும் வாழ்க்கை சுகப்படவில்லை. கணவனுக்கும் மனை விக்கும் அடிக்கடி சண்டை சச்சரவு ஏற்பட்டுக்கொண்டே யிருந்தது. கடைசியில் விஜயவல்லி அவரைப் பகைப்படுத்திக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி விட்டாள். இதனால் வெகுண்டு எழுந்த அவர் தன் சொத்தை மனைவி அடையக் கூடாது என்று தீர்மானித்தார். இது விஷயமாக என்னிடம் யோசனை கேட்டார் அவர். நான் அவருடைய உற்றார் உற வினர்களைப்பற்றி விசாரித்ததில் அவருடைய சகோதரி ஒருத்தி மிகுந்த அவலநிலையில் இருக்கிறாள் என்றும் அவளுடைய மகன் படித்துவிட்டு உத்தியோகம் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறான் என்றும் எனக்குத் தெரியவந்தது.

"அவருடைய சகோதரியின் மகனுக்குச் சொத்துக்களை எழுதி வைத்துவிடும்படி யோசனை கூறினேன். தில்லைநாயகம் அதை ஏற்கவில்லை. என்னையே தன் வாரிசாக நினைத்து உயில் எழுதி வைக்கப் போவதாகக் கூறினார் அவர். அந்த யோசனை

எவ்வளவு தவருனது என்பதை எடுத்துரைத்தேன். கடைசியில் அவருடைய சகோதரியின் மகளையும் என்னையும் தன்னுடைய சொத்தின் வாரிசுகளாக எழுதி அவர் ஓர் உயில் எழுதிவைத் திருக்கிருர். அதை உங்களிடம் கூறுவதற்காகத்தான் இத்தனை அவசரமாக உங்களை வரச்சொன்னேன்.''

வக்கீலை நிமிர்ந்து பார்த்தார் துளசிங்கம்.

"இந்த விஷயம் எனக்கு மிகவும் உபயோகமாய் இருக் கிறது. அந்த உயிலை எனக்குக் காண்பிக்க முடியுமா?'' என்று பிறகு கேட்டார் துளசிங்கம்.

வக்கீல் மேசை டிராயரில் இருந்த நீண்ட உறையை எடுத்துத் துளசிங்கத்தினிடம் கொடுத்தார். அந்த உயிலைப் படித்துப் பார்த்த பிறகு வக்கீல் கூறியது முற்றிலும் உண்மை என்று விளங்கிவிட்டது.

"அது சரி! இந்த உயில் ஏன் இன்னும் ரிஜிஸ்தர் செய்யப் படவில்லை?'' என்று கேட்டார் துளசிங்கம்.

"அதற்குக் காரணம் இருக்கிறது! அதையும் சொல்லி விடுகிறேன். சுமார் பத்து நாட்களுக்கு முன்பு, நான் வழக்குச் சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் புரட்டிக்கொண்டிருந்த சமயத்தில் தில்லைநாயகம் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். அவருடைய கண்கள் சிவந்திருந்தன. முகத்தில் கோபக்கனல் வீசிக்கொண்டிருந்தது. அவருடைய தோற்றத்தைக் கண்டு நான் பயந்து போய்விட்டேன். அதற்குக் காரணம் கேட்பதற்கும் எனக்கு பயமாக இருந்தது. தன் சொத்தில் ஒரு செல்லாத காசுகூடத் தன்னுடைய உறவினர்களுக்குப் போகக்கூடாது என்றும், உயிலை என்பேரிலேயே மாற்றிவைக்கத் தீர்மானித்திருப் பதாயும் கூறியபோது நான் திடுக்கிட்டுப் போனேன். ஏன் அவர் அவ்வாறு தன் தீர்மானத்தை மாற்றினுர் என்று அறிய முயன்றேன். அன்று தன் சகோதரியிடமிருந்து அவரை ஏசி ஒரு கடிதம் வந்திருப்பதாயும், என்னதான் உதவி செய்த போதிலும் அது பலனளிக்காது என்றும் கூறினுர். நன்மை செய்து கெட்ட பெயரை வாங்குவதைவிடக் கெட்டது செய்தே அந்தப் பெயரை வாங்கிக்கொள்ளலாம் என்ற தீர்மானத்துடன் தான் உயிலை என்பேரில் மாற்றி அமைக்க நிச்சயித்திருப்ப தாய்க் கூறினுர். நான் அவருடைய கோபத்தைத் தணித்து எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிப்பார்த்தேன். ஆனுல் அவரு டைய பிடிவாதத்தைக் குறைக்க முடியவில்லை. நான் அவருடைய

சொற்படி செய்யாவிட்டால் வேறு வக்கீலின் உதவியை நாடு வதாகவும் கூறினர். அவருடைய பிடிவாதக் குணம் எனக்குத் தெரியுமாகையால் அவரை விட்டுப்பிடிக்கத் தீர்மானித்தேன். உயிலை மாற்றி அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாய்க் கூறினேன். ஆனல் அவர் அத்துடன் விட்டுவிடவில்லை. திங்கட் கிழமையன்று என்னைப் பார்த்து 'உயில் தயாராகிவிட்டதா?' என்று கேட்டார்.

"இனிமேல் அவருடைய தீர்மானத்தை மாற்ற முடியாது என்று உணர்ந்து அவருடைய விருப்பப்படி புதன்கிழமை யன்று அந்தப் புதிய உயிலை ரிஜிஸ்தர் செய்வதற்கான ஏற்பாடு களைச் செய்வதாகக் கூறினேன். ஆனல் மறுநாள் அவர் இவ் வாறு துர்மரணமடைந்து விடுவார் என்று நான் நினைக்கவில்லை. தன்னுடைய சொத்து தன் உறவினர்களுக்குப் போகக்கூடாது என்று அவர் பெருமுயற்சி செய்தார். ஆனல் அது இப்பொழுது அவருடைய சகோதரியின் மகனுக்குத்தான் போகப்போகிறது! உண்மையில் அவன்தான் அதிர்ஷ்டக்காரன்" என்று கூறினர் வக்கீல்.

துப்பறியும் துளசிங்கத்தின் முகம் மலர்ந்தது. குற்றவாளி யின் அருகில் தான் நெருங்கிக் கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவருக்கு!

"ஆமாம்! அந்த இளைஞனை அதிர்ஷ்டக்காரன் என்று தான் சொல்லவேண்டும். அது சரி! இந்த உயில் சம்பந்த மான விஷயம் அவனுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் துளசிங்கம்.

"எங்கள் இருவரைத் தவிர வேறு ஒருவருக்கும் அந்த விஷயம் தெரியாது."

"அவனுடைய பெயரையும் விலாசத்தையும் கூறமுடியுமா?"

"அவன் எங்கு இருக்கிறன் என்று எனக்குத் தெரியாது. அவன் பெயர் தனஞ்சயன் என்றுமட்டும் எனக்குத் தெரியும்!"

குற்றவாளியின் பெயர் கிடைத்துவிட்டது! தனஞ்சயன் தான் தில்லைநாயகத்தின் மரணத்திற்குக் காரணம். குடும்பத் துடன் விரோதம் கொண்டு விலகிச் சென்று தன் சகோதரன் நல்ல நிலைமையில் இருப்பதை உணர்ந்து தனக்கு உதவி செய் யும்படி அவள் எழுதி இருக்கவேண்டும். அது தில்லைநாயகத்தின் கோபத்தைக் கிளறிவிட்டிருக்கிறது.

தில்லைநாயகத்தினிடமிருந்து பதில் ஒன்றும் வராததினால் தன் மகனை அனுப்பியிருக்கிறாள் அவள். தனஞ்சயன் அவரை ஐஸ்கிரீம் பாரில் தனிமையில் சந்தித்துத் தன் குடும்ப நிலைமையை வெளிப்படுத்தி உதவி செய்யும்படி கேட்டிருக்கிறான். அதனால்தான் அவர் 'முடியாது! கண்டிப்பாக முடியாது!' என்று கூறியிருக்கிறார். அதனால் வெகுண்டு எழுந்த அவன் அவரைக் கொலைசெய்யத் திட்டமிட்டிருக்கிறான்! உணவில் விஷம் கலக்க ஏற்பாடு செய்திருக்கிறான். அதிலிருந்து தப்பித்து விட்டாலும் விபத்துக்குள்ளாகி அவர் மரணமடைய வேண்டும் என்பதற்காக அவருடைய ஆபீஸ் அறையின் மின்சார பல்பை மாற்றி அமைத்திருக்கிறான்! தில்லைநாயகம் இறந்துவிட்டபடியால் இப்பொழுது அவருடைய சொத்தில் பாதி அவனுக்கு வந்துவிட்டது! ஆனால் அவனுக்கு அவருடைய உயிலைப்பற்றி எப்படித் தெரியும்? அவன் எவ்வாறு அவ்வளவு குறுகிய நேரத்தில் அவரைக் கொலைசெய்யச் சூழ்ச்சி செய்திருக்க முடியும்? அவன் ஏன் விஜயவல்லியைக் காணச்சென்றான்? அவளுக்கும் தில்லைநாயகத்தின் உயிலுக்கும் என்ன சம்பந்தம்? துப்பறியும் துளசிங்கத்தின் மூளை மீண்டும் குழம்பியது. ஆதிகேசவனைப் பார்த்து இரண்டு தினங்களாயிருந்தபடியாலும் அவர் மூலம் தனஞ்சயனைப்பற்றிய விஷயங்களை அறிந்துகொள்ளலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டபடியாலும் அவரைக் காண புறப்பட்டார் துளசிங்கம்.

ஆதிகேசவனின் உடல் நிலை இப்பொழுது கொஞ்சம் அபிவிருத்தி அடைந்திருந்தது. ஆனால் அவர் வீட்டைவிட்டு வெளியேருமல் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். தன் பங்களாவின் முன்னால் இருந்த சிறிய பூந்தோட்டத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஆராய்ச்சி சம்பந்தமான புத்தகம் ஒன்றைப் புரட்டிய வண்ணம் இருந்தார். அவர் இன்னும் பூரண குணமடையவில்லை என்று முகத்தோற்றம் வெளிப்படுத்தியது. அந்தச் சமயத்தில்தான் அவரைத் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார் துளசிங்கம்.

"ஓ! நீங்களா? உட்காருங்கள். குற்றவாளியைக் கண்டு பிடித்து விட்டீர்களா?" என்று ஆவலுடன் கேட்ட வண்ணம் எதிரிலிருந்த மற்ருெரு நாற்காலியை அவர் அருகில் நகர்த்திஞர்.

"குற்றவாளியைக் கண்டுபிடிக்கத்தான் நான் பெரு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் தில்லைநாயகத்தின் குறிப்புகள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்துவிட்டேன்" என்று கூறியவண்ணம் அந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டார் துளசிங்கம்.

"குறிப்புகளைக் கண்டுபிடித்து விட்டீர்களா? அவைகள் எங்கே இருக்கின்றன?" என்று பரபரப்பும் மகிழ்ச்சியும் ஏற்படக் கேட்டார் அவர்.

"நீங்கள் பதட்டப்பட வேண்டாம். வக்கீல் பஞ்சநாதனிடம் தில்லைநாயகத்தின் தஸ்தாவேஜுகள் அனைத்தும் பத்திரமாய் இருக்கின்றன!" என்று கூறி அவரை ஆசுவாசப்படுத்திஞர் துளசிங்கம்.

"ஓ! வக்கீலிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனவா? அவர் அவைகளைப் படித்திருந்தாலும் அவருக்கு ஒன்றும் புரிந்திருக்காது. தில்லைநாயகம் விளக்கமாக எதையும் எழுதி வைத்துக்கொள்ளமாட்டார். பல விஷயங்கள் அவருடைய மூளையிலேயே இடம்பெற்று இருக்கும். தான் மறந்துவிடலாம் என்ற பயம் ஏற்பட்டால்தான் அவைகளைக் குறித்து வைத்துக் கொள்வார். அதை நான் பார்த்தால்தான் எதைக் குறித்து வைத்திருக்கிருர் என்று தெரிந்துகொள்ள முடியும்!"

"அது சரி, மிஸ்டர் ஆதிகேசவன்! நீங்கள் தில்லைநாயகத்துடன் எவ்வாறு பழகினீர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் துளசிங்கம்.

"என்னையே நீங்கள் சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டீர்களா?"

"நான் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை! நீங்கள் இருவரும் பழகிய விதத்திலிருந்து குற்றவாளியைக் கண்டுபிடிக்க வழியிருக்கிறதா என்றுதான் அறிய முயலுகிறேன்."

"தில்லைநாயகம் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளர் என்ற முறையில்தான் நான் அவருக்கு மரியாதை கொடுத்து வந்தேன். ஆராய்ச்சி சம்பந்தமான விஷயங்களை அலசிப்பார்ப்பதிலும், எந்த விஷயத்தையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பதிலும் மிகுந்த அனுபவம் கொண்டவர். எடுத்த காரியத்தை ஒழுங்காகச் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தவர். அவர் விஷயத்தில் எவரும் தலையிடமுடியாது. யாரும் அவருடைய தீர்மானத்தைச் சுலபத்தில் மாற்றிவிட முடியாது. எதைச் செய்யவேண்டும் என்று நினைத்தபோதிலும் அதை அவர் பிடிவாதமாகச் செய்து முடித்துவிடுவார். எங்கள் ஆராய்ச்சி எங்களுக்குப் பலன் அளித்து வந்திருக்கின்றன. அவருடைய ஒத்துழைப்பினால் நான் லாபம் அடைந்திருக்கிறேன் என்று சொன்னாலும் மிகையாகாது. அவர் உயிருடன் இருந்திருந்தால் நான் பல நன்மைகளை அடைந்திருப்பேன். ஓர் ஆராய்ச்சியாளர் என்ற முறையில் அவருக்கு நான் நன்றிசெலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்."

"நண்பர் என்ற முறையில் அவருக்கு நீங்கள் மதிப்பு கொடுக்கவில்லையா?"

"நான் அவரை ஒரு மனிதராகவே மதிக்கவில்லை என்று சொன்னாலும் மிகையாகாது! பழங்காலத்துப் பழக்க வழக்கங்கள் மிகுந்தவர். பழகுவதற்குத் தகுதியானவர் அல்ல. முரட்டுச் சுபாவமும் முன்கோபமும் கொண்டவருடன் எவ்வாறு நல்ல முறையில் பழக முடியும்?"

"குடும்ப விஷயங்களைப்பற்றி நீங்கள் அவருடன் பேசியிருக்கிறீர்களா?"

"சதா சர்வகாலமும் ரசாயனங்களைப்பற்றியும் ஆராய்ச்சிகளைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தால் மூளை குழம்பிவிடுமல்லவா? அதனால் அவ்வப்பொழுது பொது விஷயங்களைப் பற்றியும் நாங்கள் பேசுவதுண்டு. அந்தச் சமயங்களில் நான் அவருடைய குடும்ப விஷயங்களை விசாரித்திருக்கிறேன். அப்பொழுதுதான் அவர் பெற்றோர்களையும் உற்றார் உறவினர்களையும் பகைத்துக்கொண்டு தனியாக வந்துவிட்டது எனக்குத் தெரியவந்தது!" அவைகளைக் கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை! தில்லைநாயகத்தைப் போன்ற துர்க்குணம் மிகுந்த

ஆசாமிகள் எவ்வாறு அமைதியோடு குடும்ப வாழ்க்கையை நடத்த முடியும்?"

"அவர் மணமானவர் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம், அவராகவே அதை என்னிடம் சொல்லியிருக்கிறார். மிருகத்திற்கு ஒப்பான தில்லைநாயகத்துடன் அவருடைய மனைவி எவ்வாறு வாழ்ந்து வருகிறாள் என்று நான் ஆச்சரியமடைந்தது உண்டு! கொஞ்ச காலத்திற்குமுன்பு அவருடைய மனைவி விஜயவல்லி அவருடன் மனஸ்தாபங்கொண்டு சென்றுவிட்டதாகக் கூறியதைக்கேட்டு நான் சற்றும் வியப்படையவில்லை. இவ்வளவு நாள் அவள் அவருடன் வாழ்ந்ததுகூட ஆச்சரியம் என்றுதான் நான் எண்ணினேன். தில்லைநாயகம் தன் மனைவியின்மீது பல குற்றங்களைச் சுமத்தினார். தங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் சொன்னார். அவர் என்னதான் சொன்னபோதிலும் விஜயவல்லி வீட்டை விட்டு வெளியேறியதற்கு அவர்தான் காரணம் என்ற முடிவிற்கு வந்தேன் நான்!"

"விஜயவல்லியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்திருக்கிறேன். அவள் ஓர் அழகி; நன்கு படித்தவள்; நாகரிக மோகம் கொண்டவள். இத்தகைய ஒரு மங்கை, முரட்டுத்தனமும் முன்கோபமும் கொண்ட ஒருவருடன் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்தியிருக்கமுடியுமா?"

"தில்லைநாயகத்தினிடம் விரோதித்துக்கொண்டு செல்வதற்கு முன்பு நீங்கள் அவளைப் பார்த்தீர்களா?"

"இல்லை; பிறகுதான் பார்த்தேன். அதுவும் இரண்டு மாதங்களுக்கு முன்புதான்."

"என்ன காரணம்?"

"என்னைத் தனிமையில் சந்தித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புவதாக அவள் எனக்குக் கடிதம் எழுதி இருந்தாள். அதனால்தான் அவளை நான் சந்திக்க நேர்ந்தது!"

"அவளை நீங்கள் எங்கு சந்தித்தீர்கள்?"

"தாசப்பிரகாச ஓட்டலில் அவள் வந்து இறங்குவதாயும், அங்கு வந்து தன்னைச் சந்திக்கும்படியும் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள்."

"எதற்காக அவள் உங்களைப் பார்க்க விரும்பினாள்?"

"அது எனக்குத் தெரியாது; அவள் குறிப்பிட்ட தினத்தன்று நான் தாசப்பிரகாச ஓட்டலுக்குச்சென்று இருந்தேன். தில்லைநாயகத்தின் துர்க்குணங்களைப்பற்றியும், தன் கணவன் செய்த கொடுமைகளைப் பற்றியும் கூறிக் கண்ணீர் வடித்தாள். தன்னை வாழவும் விடாமல், சாகவும் விடாமல் சித்திரவதை செய்துகொண்டிருக்கும் தன் கணவனின் கொடுமையைப்பற்றிக் கூறினாள். கலியாண பந்தத்திலிருந்து தன்னை விடுதலை செய்யாவிட்டால் எதற்கும் தான் துணிந்துவிடப் போவதாக அவள் கூறினாள்!"

"விஜயவல்லி உங்களிடம் ஏன் தன்னுடைய குறைகளைச் சொல்லவேண்டும்?"

"நான் தில்லைநாயகத்தின் நண்பன் என்று எண்ணிக் கொண்டு, தான் நிரபராதி என்று நிரூபிக்கவும் தில்லைநாயகத்தின் பிடிவாதத்தைத் தணித்துத் தனக்கு விடுதலை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்வதற்காகவும்தான் என்னை அவள் தனிமையில் சந்தித்தாள். நெருங்கிய நண்பர் சொன்னால் அவருடைய பிடிவாதம் குறையாதா என்று அவள் எண்ணியிருக்கிறாள். ஆனால் யாராலும் தில்லைநாயகத்தின் தீர்மானத்தை மாற்ற முடியாது என்பது அவளுக்குத் தெரியாதுபோலும்!"

"தில்லைநாயகத்தின் மரணத்திற்கு அவள் காரணமாய் இருக்கலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"அவள் தன் கணவனுடன் மனஸ்தாபம் கொண்டிருப்பதனாலேயே அவளைக் குற்றவாளி என்று தீர்மானித்துவிட முடியுமா? ஒரு பெண் என்னதான் பகைமை கொண்டிருந்த போதிலும் தன் கணவனைக் கொலை செய்யுமளவிற்கு அவளுக்குத் துணிவு ஏற்படாது என்றே நான் எண்ணுகிறேன்."

"அப்படியானால் வேறு யார்மீதாவது உங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறதா?"

"வேறு யாரைச் சந்தேகிப்பது? ...ம். இப்பொழுதுதான் நினைவு வருகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை யன்று, அதாவது தில்லைநாயகம் மரணமடைந்த தினத்தன்று ஒருவன் அவருக்கு டெலிபோன் செய்தான். அவன் ஏன் குற்றவாளியாக இருக்கக் கூடாது?"

"யார் அந்த ஆசாமி?"

"அன்று மாலை மூன்று மணி சுமாருக்கு ஆராய்ச்சிச்சாலையின் நடு ஹாலில் இருந்த டெலிபோன் மணி ஒலித்தது. அந்த மணி

யோசை என் கவனத்தைக் கலைத்தபடியால் நான்தான், அந்த டெலிபோனைக் கவனித்தேன். மாரிசாமி, தில்லைநாயகத்துடன் பேசவேண்டும் என்று சொன்னான். அவர் ஆராய்ச்சியில் கவனமாய் இருக்கும்போது ஒருவருடனும் பேசமாட்டார் என்பது எனக்குத் தெரியுமாகையினால் அவருடன் பேச முடியாது என்று கூறிவிட்டேன். 'பரவாயில்லை, பிறகு பேசிக்கொள்கிறேன்' என்று மாரிசாமி டெலிபோனைக் கீழே வைத்து விட்டான். அன்று மாலை நாங்கள் இருவரும் பனகல் பார்க் வழியாகச் சென்றபோதுதான் நான் மாரிசாமி டெலிபோன் செய்ததை அவரிடம் கூறினேன்,"

"மாரிசாமியை அவர் புரிந்து கொண்டாரா?"

"இல்லை! அந்தப் பெயரையே கேள்விப்பட்டதில்லை என்று கூறிவிட்டார். அதனால்தான் நான் அந்தப் பேச்சை அத்துடன் விட்டுவிட்டேன்."

"அது சரி! அவருடைய உறவினர்களில் ஒருவனை தனஞ்சயன் என்பவனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"அவர் பெற்றோர்களையும் உற்றார் உறவினர்களையும் விட்டு விட்டுத் தனியாக வந்து விட்டதாய்க் கூறினாரே தவிர, ஒருவரைப் பற்றியும் விவரமாகக் கூறியதில்லை. நீங்கள் குறிப்பிடும் அந்தப் பெயரை நான் கேள்விப்பட்டதில்லை."

"இப்பொழுது உங்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிக் கருவிகள் பழுதாக்கப்பட்டிருக்கின்றன. உங்களுடன் ஒத்துழைத்து வந்த ஆசாமியும் இறந்துவிட்டார். அடுத்தபடியாக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை! அவரும் உயிருடன் இருந்திருந்தால் இன்று எங்கள் புகழ் வானளாவ ஓங்கி இருக்கும். பத்திரிகைகளில் எங்கள் ஆராய்ச்சியைப் பற்றிய செய்திதான் பத்திப் பத்தியாக வெளி வந்திருக்கும். நாங்களும் விரைவில் பெருஞ் செல்வந்தர்களாகி இருப்போம். ஆனால் நாங்கள் ஒன்று நினைக்க அது ஒன்றாய் முடிந்துவிட்டது. அன்று மாலை அவர் என்னுடன் பேசிய விதத்திலிருந்து மறுநாள் எங்கள் ஆராய்ச்சி முடிவடைந்து விடும்போல்தான் இருந்தது. நானும் ஓரளவு வெற்றி பெற்றிருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். எங்கள் இருவரின் பரிசோதனையையும் ஒன்று சேர்த்து ஒப்பிட்டுப் பார்த்தால் எங்கள் ஆராய்ச்சி ஒருவித முடிவிற்கு வந்திருக்கும். கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விட்டதே என்று நினைக்கும்போதுதான் என் மனம் துடிக்கின்றது.

இன்னும் சில நாட்களுக்கு நான் ஆராய்ச்சி சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளப் போவதில்லை" என்று கூறிவிட்டுத் தன்னையும் மீறிவந்த கண்ணீர்ப் பொட்டு களைத் துடைத்துவிட்டுக் கொண்டார் துளசிங்கம்,

—

அந்த விசாரணை அவருக்கு மிகுந்த திருப்தியை அளித்தது! விஜயவல்லிதான் தில்லைநாயகத்தின் மரணத்திற்குக் காரணமாய் இருக்கவேண்டும் என்பது சந்தேகமற விளங்கி விட்டது. ஆனால் மாரிசாமி என்ற ஆசாமி யாரென்றுதான் அவருக்குப் புரிய வில்லை. அவன் விஜயவல்லிக்கு வேண்டிய ஆசாமியாக இருந்து, தில்லைநாயகத்தின் பிடிவாதத்தைப் போக்கி அவளுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கப் பாடுபடுபவனாக இருந்தால் ஏன் அவன் தில்லைநாயகத்துடன் பேசவேண்டும் என்று வற்புறுத்தவில்லை? ஒருவேளை அவர் ஆராய்ச்சி சாலையில்தான் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள அவன் போன் செய்திருப்பானோ? அவன்தான், அடையாறுக்குச் சென்று மின்சாரம் பாய்ந்தவுடன் வெடிக்கக்கூடிய பல்பைப் பொறுத்தியிருக்க வேண்டும் என்றும், அவனேதான் உஸ்மான் ரோடில் இருக்கும் ஆராய்ச்சி சாலை கண்ணாடி ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே பிரவேசித் திருக்கவேண்டும் என்றும் அவருக்குத் தோன்றியது. அவன் தான் உணவில் விஷம் கலந்து தில்லைநாயகத்தைக் கொலை செய்யத் திட்டமிட்டிருக்க வேண்டும் என்றும் தோன்றியது. ஆனால் எவ்வாறு ஆதிகேசவனும் அந்த சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொண்டார் என்பதுதான் துளசிங்கத்திற்குப் புரியவில்லை. மறு கணம் அவருக்கு தனஞ்சயனின் நினைவு வந்தது. அவன் ஏன் தில்லைநாயகத்தைப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தான்? மாரிசாமி குற்றவாளியா? தனஞ்சயன் குற்றவாளியா? என்று புரியாமல் குழப்பமடைந்த வண்ணம் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார் துளசிங்கம். இன்ஸ்பெக்டர் சங்கரன், தில்லை நாயகத்தின் வழக்கு விஷயமாகத் தன்னால் முடிந்த விசாரணைகளை செய்துகொண்டிருந்தார். அதிலிருந்து மாரிசாமி என்ற ஆசாமி விஜயவல்லிக்கு மிகவும் வேண்டியவன் என்றும், அவனைத்தான் அவள் அநேகமாக பதிவுத் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்க வேண்டும் என்றும் கூறினார் இன்ஸ்பெக்டர். இப்பொழுது மாரிசாமிதான் குற்றவாளி என்பது விளங்கி விட்டது. அவன் யார்? எங்கு இருக்கிறான்? எவ்வாறு அவன் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினான்? சிந்தனை சிறகடித்தது துளசிங்கத்திற்கு.

அந்த சமயத்தில் டெலிபோன் மணி ஒலித்தது. இன்ஸ்பெக்டர் ரிஸீவரைக் கையில் எடுத்தார். "ஹலோ போலீஸ் ஸ்டேஷனா?" — குரல் வக்கீல் பஞ்சநாதனுடையது.

"ஆமாம்! இன்ஸ்பெக்டர் சங்கரன் பேசுகிறேன்"

"நான் துளசிங்கத்தினிடம் தனஞ்சயன் என்ற ஆசாமியைப்பற்றிச் சொல்லி இருக்கிறேன். அவன் நாளைக் காலை சென்னைக்கு வரப்போவதாய்த் தெரிகிறது. அவனுடைய அங்க அடையாளங்கள் அவருக்குத் தெரியும். அவசியமானால் அவனைச் சந்தித்து விசாரிக்கச் சொல்லுங்கள்" என்று கூறினார் வக்கீல்.

இச்செய்தியை அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தார் துளசிங்கம். தனஞ்சயனை விசாரித்தால் மாரிசாமியைப் பற்றிய உண்மைகளை அறியலாம் என்ற எண்ணம் ஏற்பட்டபடியால் அவனைச் சந்திக்கத் தீர்மானித்தார் அவர், ஆதிகேசவனின் பேட்டியும் வக்கீல் பஞ்சநாதனிடமிருந்து வந்த செய்தியும் துப்பறியும் துளசிங்கத்திற்கு ஒருவித உற்சாகத்தையும் குற்றவாளியை விரைவில் கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கையையும் கொடுத்த போதிலும், அதிலும் சில குழப்பங்கள் இருப்பதை அவர் உணராமல் இல்லை. மாரிசாமி தில்லைநாயகத்தின் கொலை வழக்கில் எவ்வாறு சம்பந்தப் பட்டிருக்கிறான்? தனஞ்சயன் எதற்காக சென்னைக்கு வரப்போகிறான்? இந்த இரண்டு ஆசாமிகளும் இவ்வளவு நாட்கள் எங்கு இருந்தார்கள்?—இவ்விதக் கேள்விகள் சற்று நேரம் துப்பறியும் துளசிங்கத்தைக் குழப்பின.

தில்லைநாயகத்தின் மரணச் செய்தியைப் பற்றி கேள்விப் பட்டபோது அது தற்செயலாய் ஏற்பட்டதாக இருக்கும் என்று தான் நினைத்தார் துளசிங்கம். உஸ்மான் ரோடு ஆராய்ச்சி சாலையில் நடந்த சம்பவத்திற்கும் தில்லைநாயகத்தின் மரணத்திற்கும் சம்பந்தம் இருக்கும் என்று அவர் எண்ணவில்லை. வக்கீல் பஞ்சநாதனிடம் தில்லைநாயகம் ஒப்படைத்திருந்த உயிலும், அடையாறு பங்களாவில் தில்லைநாயத்தின் அறையில் அவருடைய உயிரையே போக்குமளவிற்கு ஏற்பட்ட சம்பவமும் அந்த வழக்கில் மேலும் சில சந்தேகங்களை உண்டுபண்ணி விட்டன.

தில்லைநாயக கொலை வழக்கின் தற்போதைய நிலைமை ஒரு முறை துளசிங்கத்தின் மனதில் வந்து நின்றது. ரத்தத்தில் விஷக்கலப்பு ஏற்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டு தில்லைநாயகம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஏறக்குறைய அதே சமயத்தில் மாம்பலம் உஸ்மான் ரோட்டில் இருக்கும் ஆராய்ச்சி

சாலையில் குற்றவாளி ரகசியமாகப் பிரவேசித்து ஆதிகேசவனின் பரிசோதனைகளைப் பாழாக்கி இருக்கிறான். அத்துடன் குற்ற வாளியினால் உபயோகப்பட்டதாகக் கருதப்படும் சுத்தி ஒன்றும் தில்லைநாயகத்தின் அறையிலிருந்து கண்டெடுக்கப்பட்டிருக் கிறது. துளசிங்கம் ஆராய்ச்சிசாலையைப் பரிசோதனை செய்துக் கொண்டிருந்த சமயத்தில்தான் தில்லைநாயகம் ஆஸ்பத்திரியில் மரணமடைந்திருக்கிறார். இரண்டு ஆராய்ச்சியாளர்களும் பழ கிய விதத்தில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லை. ஆதி கேசவனின் ஆராய்ச்சி அறை பாதிக்கப்படாமல், தில்லைநாயகம் துர்மரணமடையாமல் இருந்திருந்தால் அவர்களின் ஆராய்ச்சி மகத்தான வெற்றிபெற்றிருக்கும். உலகம் போற்றிய புகழ்ந் திருக்கும். விரைவில் பெருஞ்செல்வந்தர்களாகி இருப்பார்கள், ஆனால் அவர்களின் துரதிருஷ்டம்தான் வேறுவிதமாக முடி வடைந்து விட்டதே!

அடுத்தபடியாக வக்கீல் பஞ்சநாதனின் விஜயம், அவர் கண்டெடுத்த விஜயவல்லியின் கடிதம், ஆதிகேசவனின் மூலம் விசாரித்தறிந்த உண்மைகள், தனஞ்சயன், மாரிசாமி இவர் களைப்பற்றி கேள்விப்பட்ட விஷயங்கள், அனைத்தும் அவருடைய அகக் கண்முன்னால் வந்து நின்றன. எவ்வளவு யோசித்தும் அவரால் ஒருவித முடிவிற்கு வரமுடியவில்லை.

ஆகவே, டைரியை எடுத்துக் கரத்தில் புரட்டிய வண்ணம் தான் சந்தேகிப்பவர்களைப் பற்றி ஆராய்ந்தறிய ஆரம்பித்தார்! முதன் முதலில் ஸ்ரீமதி விஜயவல்லியின் பெயர்தான் அவருடைய கண்ணில் பட்டது.

ஸ்ரீமதி விஜயவல்லி—காலம் சென்ற தில்லைநாயகத்தின் மனைவி: அவளாகவே தன் கணவனை விரோதித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி வந்திருக்கிறாள். வேறு ஒருவனை பதிவுத் திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் என்ற துணிவும் கொண்டிருக்கிறாள் அவள். அந்த விஷயத்தை அவள் ரகசிய மாக வைத்திருக்கவில்லை. தன்னைக் கலியாண பந்தத்திலிருந்து விடுவித்து விடும்படி தன் கணவருக்குப் பல கடிதங்கள் எழுதியும் இருக்கிறாள். ஆனால் அவள் எந்தக் கடிதத்திலும் தான் யாரை மறுமணம் செய்துக்கொள்ளப் போகிறாள் என்பதை வெளிப் படுத்தவில்லை. தில்லைநாயகம் மரணமடைந்த தினத்தன்று காலை விஜயவல்லியிடமிருந்து அவருக்கு கடைசியாக ஒரு எச்சரிக்கைக் கடிதம் வந்திருக்கிறது. அவளுக்கு மறுநாள் காலையில்தான் தில்லைநாயகம் மரணமடைந்த செய்தி கிடைத்திருக்கிறது. அதைக்கேட்டு அவள் ஆச்சரியப்படவில்லை; துயரப்படவும்

இல்லை. ஆனால் அவள் சில மணி நேரத்திற்குப்பிறகு தான் தங்கி யிருந்த ஓட்டலிலிருந்து புறப்பட்டுவிட்டாள். குற்றவாளி என்று சந்தேகிக்கப்பட வேண்டிய ஆசாமிகளில் ஒருத்தி விஜயவல்லி. அப்படி அவள் குற்றவாளியாக இருந்தால் தன்னுடைய கலியாண பந்தத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும் என்பது ஒன்றே அதற்குக் காரணம்! ஆனால் அந்த ஒரு காரணத்திற்காகத் தன் கணவனைக் கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்குமா? அவள் படித்தவள்; நாகரிக வாழ்க்கையில் மோகம் கொண்டவள்; முற்போக்கு வாதி! கணவனின் சம்மதத்திற்காகக்கூட காத்திருக்காமல் பதிவுத் திருமணம் செய்துகொண்டிருக்கலாம் அல்லவா? அதற்காக அவள் ஏன் தன் கணவனைக் கொலைசெய்ய திட்டமிடவேண்டும்?

அடுத்ததாகச் சந்தேகப்படவேண்டிய குற்றவாளி மாரிசாமி! விஜயவல்லியின் காதலன் அவனாகத்தான் இருக்கவேண்டும்! அவனைத்தான் அவள் மறுமணம் செய்துக்கொள்ள எண்ணி இருக்கவேண்டும். தில்லைநாயகம் மரணமடைந்த தினத்தன்று அவன் சென்னையில் இருந்திருக்கிறான் என்பதும், தில்லைநாயகத்தின் மரணச்செய்தியை விஜயவல்லியின்மூலம் கேள்விப்பட்டிருக்கிறாள் என்பதும் தெரியவருகின்றன. தில்லைநாயகத்தின் மரணத்திற்கும் பிறகும் அவள் அவனுடன்தான் வாழ்ந்து வந்திருக்கவேண்டும், விஜயவல்லியை மணம் செய்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால்தான் அவன் தில்லைநாயகத்தை கொலை செய்திருக்கவேண்டும்.

விஜயவல்லி மாரிசாமியை மணந்துகொள்ள சித்தமாய் இருந்திருக்கிறாள். அவர்களின் தொடர்பைப் பிரிக்கவோ, அல்லது அவர்களின் அன்பிற்கு இடையூறாகவோ ஒருவரும் இல்லை! தில்லைநாயகத்திற்கு மாரிசாமியைத் தெரியாது, அப்படி தெரிந்திருந்தாலும் அவர் தன் மனைவியின் விஷயத்தில் தலையிட்டிருப்பார் என்று சொல்லுவதற்கும் இல்லை. ஆகவே, அதிகமான சிரமமின்றி விஜயவல்லியை மணந்துகொள்ள வழியிருக்கும் போது மாரிசாமி ஏன் தில்லைநாயகத்தைக் கொலைசெய்யத் துணியவேண்டும்?

இந்தக் கொலை வழக்கில் சந்தேகிக்க வேண்டியவர்களில் மூன்றாவது குற்றவாளி தனஞ்சயன்! தில்லைநாயகத்தின் சகோதரியின் மகன். தில்லைநாயகத்தின் உயிலின்படி பாதி சொத்து அவனுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் அவர் இன்னும் சில தினங்கள் உயிருடன் இருந்திருந்தால் உயிலை மாற்றி வைத்திருப்பார். அவருடைய சொத்துகள் அனைத்தும் வக்கீ

விடமே ஒப்படைக்கப்பட்டிருக்கும். தில்லைநாயகம் மரண மடைந்த தினத்தன்று மாலை அவன் ஐஸ்கிரீம் பாரில் அவரைச் சந்தித்துப் பேசி இருக்கிறான். ஆனால் என்ன பேசினான், ஏன் அவன் ஆராய்ச்சிச்சாலையிலிருந்து வந்திருக்கிறான் என்பவை களுக்குக் காரணம் விளங்கவில்லை! தனஞ்சயன், தில்லைநாய கத்தின் நடவடிக்கைகளை மறைவாக இருந்துகொண்டு கவனித்து வந்திருக்கிறான் என்று தெரியவருகிறது. அவன்தான் மறுநாள் விஜயவல்லியைச் சந்தித்து அவளிடம் தில்லைநாயகத்தின் மரணச் செய்தியை வெளிப்படுத்தியிருக்கிறான் என்றும் தோன்றுகிறது.

தனஞ்சயன் குற்றவாளியாக இருந்தால் தில்லைநாயகத்தின் சொத்தை அடையவேண்டும் என்பது மட்டுமே காரணமாக இருந் திருக்கவேண்டும். அவர் உயிலை மாற்றிவைப்பதற்குள் அவரைக் கொலை செய்துவிடவேண்டும் என்று எண்ணியிருக்கிறான். தனஞ்சயனையே குற்றவாளி என்று வைத்துக்கொண்டால் தில்லைநாயகம் உயிலை மாற்றி எழுதத் தீர்மானித்துவிட்டார் என்பது அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? அந்த விஷயத் தைத் தெரிந்துகொண்டே தில்லைநாயகத்தைக் கொலை செய்யத் திட்டமிட்டான் என்று வைத்துக்கொண்டாலும் அன்று மாலை அவர் பாண்டிபஜார் ஓட்டலுக்குச் சிற்றுண்டி புசிக்கச் செல்லப் போகிறார் என்பது அவனுக்கு எவ்வாறு தெரிந்திருக்க முடியும்? மேலும் தில்லைநாயகமும் ஆதிகேசவனும் ஓட்டலினுள் சிற்றுண்டி புசித்துக்கொண்டிருந்த சமயத்தில் தனஞ்சயன் ஓட்டலுக்கு வெளியே இருந்திருக்கிறான் என்றல்லவா தெரியவந்திருக்கிறது? இந்த நிலையில் தனஞ்சயனை எவ்வாறு சந்தேகிப்பது?

துப்பறியும் துளசிங்கத்தின் மனது இப்பொழுது முன்னை விட அதிகமாகக் குழம்பியது. முக்கிய குற்றவாளியாகக் கருதிய மூன்றுபேரின் மீதுள்ள சந்தேகமும் ஆதாரமற்றதாக இருப்பதை நினைக்கும்போது அவருக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது! வக்கீல் பஞ்சநாதனின் நினைவு மெல்ல ஒருபுறம் எழுந்தது. சில வழக்குகளில் வக்கீல்களே தங்களிடம் ஒப்படைக்கப்படும் பொருள்களை அபகரிப்பதற்காகக் கொலைசெய்யத் துணிந்திருக் கிறார்கள் என்பதைத் துளசிங்கம் அறிந்திருந்தபடியால்தான் பஞ்சநாதனின் பேரில் ஓரளவு சந்தேகம் ஏற்பட்டது. இந்த வழக்கில் பஞ்சநாதத்தைச் சந்தேகிப்பதற்குச் சரியான காரணம் இருந்தது! தில்லைநாயகம் தன் சொத்தில் பாதியை அவருடைய பெயருக்கு எழுதிவைத்திருக்கிறார். தில்லைநாயகத்தின் மரணத் தினால் மற்ற எல்லோரையும்விட வக்கீலுக்குத்தான் பொரு ளாதார வகையில் பலன் அதிகம்! இதை அவரே ஒப்புக்கொள் கிறார். ஆனால் அதற்காக அவர் தில்லைநாயகத்தைக் கொலை

செய்திருப்பார் என்றோ, அல்லது அவருடைய மரணத்தில் சம்பந்தப்பட்டிருப்பார் என்றோ நினைப்பது எவ்வளவு தவருனது? தில்லைநாயகம் விஷம் கலக்கப்பட்ட உணவைப் புசித்து மரணமடைந்திருக்கிருர் என்று எண்ணப்படுவதினுல் அவரை இந்தக் கொலை வழக்கில் சம்பந்தப்படுத்துவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அவரைக் குற்றவாளி என்று நிச்சயிக்க முடியாவிட்டாலும் நிரபராதி என்று கூறிவிட முடியாது. ஏனென்ருல், மற்றவர்களைவிட அவர்தான் இந்த வழக்கில் அதிகமாகச் சம்பந்தப்பட்டிருக்கிருர்.

அவர்தான் முதன் முதலாக விஜயவல்லியின் கடிதத்தைக் கண்டெடுத்து இருக்கிருர், தில்லைநாயகத்தைப்பற்றியும், விஜய வல்லியின் குணுதிசயங்களைப்பற்றியும் தனஞ்சயனைப்பற்றியும் அவர்தான் வெளியிட்டிருக்கிருர். அத்துடன், தில்லைநாயகம் வசித்துவந்த அடையாறு பங்களாவில் குற்றவாளியின் சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொண்டிருக்கிருர் அவர்! அவர் கூறிய விஷயங்கள் அனைத்தும் நியாயமானதாகவும் நம்பக்கூடியதாகவும் இருக்கிறது. இந்தக் கொலையில் வக்கீலைச் சந்தேகிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

வழக்கமான கேசுகளைப் போல் 'இருந்தால் இத்தனை குழப்பங்கள் ஏற்பட்டிருக்காது என்றே அவருக்குத் தோன்றியது. ஒருவன் முதுகிலோ உடம்பிலோ கத்தியினுல் குத்தப்பட்டு இறந்து கிடப்பான். அல்லது துப்பாக்கி வெடி அவனுடைய மண்டையையோ மார்பையோ துளைத்துக்கொண்டு சென்று இருக்கும். அவன் யார்? அவனுக்கு விரோதிகள் யாராவது இருக்கிருர்களா? அவர்கள் ஏன் அவனை விரோதித்துக் கொண்டனர்?—என்பவைகள் போன்ற கொள்கைகளை ஆராய்ந்து கொண்டே சென்ருல் குற்றவாளி யாரென்பது விளங்கி விடும். ஆனுல் இந்த வழக்கில் ஆராய்ச்சிசாலை பழுதாக்கப்பட்டிருக்கிறது; ஒருவர் ரத்தத்தில் ஏற்பட்ட விஷக்கலப்பினுல் மரணமடைந்திருக்கிருர்; மற்ருெருவர் வெகுவாகப் பாதிக்கப்பட்டு உடல் நிலை சுகமின்றி இருக்கிருர்—தில்லைநாயகத்தைக் கொலை செய்யுமளவிற்கு விரோதிகள் ஒருவரும் இல்லை. அத்துடன் சந்தேகப்படக்கூடிய நபர்கள் அனைவரும் நிரபராதிகளைப்போல் காணப்படுகிருர்கள். இந்த நிலையில் யாரைச் சந்தேகிப்பது? எவரைக் குற்றவாளியாக்குவது?

எல்லாவற்றையும்விட தில்லைநாயகத்தின் மரணம் ஏன் தற்செயலாக ஏற்பட்டதாக இருக்கக்கூடாது என்று எண்ணும் போதுதான் துளசிங்கத்தின் மூளை வெகுவாகக் குழம்பியது. அவ்வாறு நினைப்பதற்கும் காரணம் இருந்தது. தில்லைநாயகம்,

ஆதிகேசவன் இருவரும் பாண்டிபஜார் ஓட்டலில் சிற்றுண்டி புசித்து இருக்கிறார்கள்! அதற்குப் பிறகுதான் இருவருடைய உடல்நிலையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குற்றவாளி இருவரையும் கொலைசெய்யவேண்டும் என்று தீர்மானித்து, அவர்களின் சிற்றுண்டியில் விஷத்தைக்கலக்க ஏற்பாடு செய்திருந்தால் ஒருவர் மட்டும் எவ்வாறு தப்பிப் பிழைத்திருக்கமுடியும்? அவ்விருவரும் புசித்த சிற்றுண்டியில் வேண்டுமென்று விஷம் கலக்கப்பட்டதா? அல்லது தற்செயலாக விஷக்கலப்பு ஏற்பட்டதா? அந்த ஓட்டலில் ஏற்கனவே விசாரித்தறிந்த விஷயங்களிலிருந்து அவர்களின் சிற்றுண்டியில் எந்தவிதமான தவறும் இருக்காது என்று அறிந்திருந்தபடியால் வேண்டுமென்றுதான் சிற்றுண்டியில் விஷத்தைக் கலந்திருக்கவேண்டும் என்று தோன்றியது துளசிங்கத்திற்கு! ஆனால் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கும் போது அதிலும் அவருக்குச் சில சந்தேகங்கள் எழுந்தன. அந்த ஓட்டலில் சம்பந்தப்பட்டவர்களின் உதவி இல்லாமல் சிற்றுண்டியில் விஷம் கலப்பது கடினம் என்று தோன்றியது. அப்படியானால் அந்த ஓட்டல் முதலாளி தில்லைநாயகத்தின் மரணத்தில் சம்பந்தப்பட்டிருக்கமுடியுமா? அவ்விருவர்களையும் கொலைசெய்ய ஏன் அவர் எண்ணவேண்டும்? தில்லைநாயகம் எதைப் புசிக்கப்போகிறார் என்பது எவ்வாறு அவருக்குத் தெரிந்திருக்கமுடியும்? ஒருவேளை அவர் வழக்கமாகப் புசிக்கும் சிற்றுண்டியைத் தவிர்த்துவிட்டு வேறு ஏதாவது புசித்திருந்தால் குற்றவாளியின் திட்டம் எவ்வாறு வெற்றிகரமாக முடிந்திருக்கும்? இவ்விதக் கேள்விகள் எழுந்தபோது அவர்கள் அந்த ஓட்டலில் புசித்த சிற்றுண்டிக்கும் அவ்விருவரின் உடல் நிலை பாதிக்கப்பட்டதற்கும் சம்பந்தம் இருக்குமா என்பதே சந்தேகத்தில் வந்துவிட்டது. பாண்டிபஜார் ஓட்டலுக்குச் செல்வதற்கு முன்பே அவ்விருவரின் ரத்தத்திலும் ஏன் விஷக்கலப்பு ஏற்பட்டிருக்கக்கூடாது என்ற எண்ணம்கூட அப்பொழுது துப்பறியும் துளசிங்கத்திற்கு ஏற்பட்டது. அப்பொழுது அவருக்கு முன்னால் குறிப்பிட்ட மூவரின் நினைவு மீண்டும் எழுந்தது.

தில்லைநாயகம் மரணமடைந்த தினத்தன்று விஜயவல்லி சென்னையில் இல்லை. அவளுக்குத் தன் கணவன் எந்த ஓட்டலுக்குச் செல்கிறான், என்ன புசிக்கிறான் என்பவைகள் ஒன்றும் தெரியாது. ஆகவே அவள் எவ்வாறு தில்லைநாயகத்தின் உடலில் விஷக்கலப்பு ஏற்பட்டதற்குக் காரணமாய் இருக்கமுடியும்?

மாரிசாமி சென்னையில் இருந்தான் என்று நினைக்க இடமிருக்கிறது. அவனே அவருடைய ஆராய்ச்சி சாலையினுள் ரகசியமாகப் பிரவேசித்திருக்கலாம். மேலும் அவனைத்தான் விஜயவல்லி

தன் காரியத்தை வெற்றிகரமாக முடிக்க ஒரு கருவியாகப் பயன் படுத்தி வருகிருள் என்றும் தோன்றுகிறது. ஆனுல் அவன் தில்லைநாயகத்தின் உடல் நிலை பாதிக்கப்பட்டதற்கு எவ்வாறு காரணமாக இருக்கமுடியும்? தனஞ்சயன் தில்லைநாயகத்தைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தான். தில்லைநாயகத்தைச் சந்தித்துப் பேசியும் இருக்கிருன் அவன். ஆனுல் அவன், தில்லைநாயகத்தின் உயிரைப் போக்கக்கூடிய விஷத்தை எவ்வாறு உபயோகித்து இருக்கமுடியும்?

எவ்வாறு யோசித்தும், எவ்வளவுதான் மூளையைக் குழப்பிக் கொண்டபோதிலும் யார் குற்றவாளி என்று அவரால் நிச்சயிக்க முடியவில்லை. ஆகவே, அந்த இரண்டு ஆராய்ச்சியாளர்களின் மீது பொருமை கொண்ட யாரோதான், அவர்களின் பரிசோதனைகளைப் பாழாக்கிவிட்டு இருவரையும் ஒழித்துக்கட்டத் தீர்மானித்திருக்கவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார் அவர்.

அந்த ஆராய்ச்சியாளர்கள் சிற்றுண்டி புசித்த ஓட்டலுக்குச் சென்று மீண்டும் விசாரித்தால் வேறு ஏதாவது உண்மை கிடைக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டபடியால் பாண்டி பஜாருக்குச் சென்ருர் அவர். அந்த ஓட்டலின் முதலாளி முதல் முறையைவிட மரியாதையுடனும் பணிவுடனும் துளசிங்கத்தை வரவேற்று உபசரித்தார். துளசிங்கம் கேட்ட கேள்விகளுக்குத் தயக்கமின்றி பதில் சொன்னுர். முதல் முறையைப் போலவே ஒவ்வொரு இடமாக அழைத்துச் சென்று ஒவ்வொரு சிப்பந்தியையும் வரவழைத்துத் துளசிங்கத்திற்கு அறிமுகப்படுத்திஅவருடைய சந்தேகத்தைப் போக்குவதற்கான முயற்சிகளைச் செய்தார். தில்லைநாயகத்தின் மர்மக் கொலை வழக்கில் தன்னுடைய ஓட்டலின் பெயர் சம்பந்தப்படுத்தப்பட்டு விடப் போகிறதே என்றுதான் மிகுந்த கவலை அடைந்தார் அவர்.

துளசிங்கத்திற்கு இப்பொழுது சந்தேகம் நீங்கிவிட்டது. ஆராய்ச்சியாளர்கள் இருவரும் அந்த ஓட்டலுக்கு வருவதற்கு முன்புதான் அவர்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சந்தேகமற விளங்கிவிட்டது.

உஸ்மான் ரோடு ஆராய்ச்சிச் சாலையில் தில்லைநாயகத்தின் அறையிலிருந்து கண்டெடுத்த சிறிய சுத்தியைப்பற்றி இதுவரை அக்கறை எடுத்துக்கொள்ளாமல் இருந்துவிட்டார் துளசிங்கம். ஆனுல் இப்பொழுது அது ஏன் ஒரு முக்கிய ஆதாரமாக இருக்கக் கூடாது என்று தோன்றியது அவருக்கு!

அதைப்பற்றியும் விசாரித்து தன்னுடைய சந்தேகத்தை அறவே போக்கிக்கொண்டு விடவேண்டும் என்ற எண்ணத்துடன் மீண்டும் அடையாறுக்குப் புறப்பட்டார் துளசிங்கம்.

துப்பறிபவர் அடையாறில் இருந்த தில்லைநாயகத்தின் பங்களாவை அடைந்து முன்புறமிருந்த காலிங் பெல்லை அழுத்தினுர். சிறிது நேரமாகியும் பதில் வரவில்லை. கதவும் திறக்கப்படவில்லை. மறுமுறை விசையை அழுத்தினுர். அப்பொழுதும் எந்தவிதமான மாறுதலும் ஏற்படவில்லை. துளசிங்கத்திற்குச் சந்தேகம் வந்துவிட்டது! காந்திமதி, தில்லைநாயகத்தின் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பாளா? ஒன்றுமறியாதவள்போல் நடித்துவிட்டு, ஊரைவிட்டு வெளியேறிவிட்டாளா? 'நிரபராதிகளைப் போல் தோற்றமளிப்பவர்கள் குற்றவாளிகளாகவும் குற்றவாளிகள் போல் தோன்றுபவர்கள் நிரபராதிகளாகவும் இருப்பது இம்மாதிரியான வழக்குகளில் சகஜமல்லவா? காந்திமதி கபடமாக நடித்து என்னை ஏமாற்றிவிட்டாளா? இவ்விதக் கேள்விகள் எழுந்து அவருடைய சந்தேகத்தைப் பலப்படுத்தின. ஆனுல் மூன்ரும் முறை விசையை அழுத்த முயன்றபோது கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்துவிட்டாள் காந்திமதி.

அவளுடைய உடைகளில் கரி படிந்திருந்தது. தலைமயிர் கலைந்து கிடந்தது. உடல் சோர்வுற்று இருந்தது. அவள் வீட்டு வேலையில் மும்முரமாக இருந்திருக்கிருள் என்பதை அந்தக் காட்சி வெளிப்படுத்தியது. காந்திமதி புருவங்களை உயர்த்திச் சற்று ஆச்சரியத்துடன் துப்பறிபவரைப் பார்த்தாள்.

"ஓ! நீங்களா? நான் யாரோவென்று நினைத்துவிட்டேன்! உங்களை நான் எதிர்பார்க்கவே இல்லை. உள்ளே வாருங்கள்" என்று வரவேற்ருள் அவள்.

"தில்லைநாயகத்தின் மரணம்தான் என்னைக் குழப்பிக்கொண்டிருக்கிறது. எவ்வளவு யோசித்தும் என்னுல் ஒரு முடிவிற்கும் வரமுடியவில்லை. உங்களை மீண்டும் சந்தித்துப் பேசினுல் வேறு ஏதாவது துப்புக் கிடைக்கலாம் என்ற எண்ணத்துடன்தான் இங்கு வந்தேன்!" என்று கூறியவண்ணம் உள்ளே பிரவேசித்து ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்துகொண்டார் துளசிங்கம்.

"என் எஜமானரின் மரணம் எல்லோரையும்விட என்னைத்தான் அதிகமாகப் பாதித்து இருக்கிறது. இங்கேயே இருந்துகொண்டு மீதி இருக்கும் நாட்களைக் கழித்துவிடலாம் என்று எண்ணி இருந்தேன். ஆனுல் அது இப்பொழுது நிறைவேருமல் போய்விட்டது. அவரைப்பற்றி எனக்குத் தெரிந்தவைகளை

ஒளிவு மறைவின்றி கூறிவிட்டேன். உங்களுக்கு என் வாக்கு மூலத்தில் ஏதாவது சந்தேகம் இருந்தால் அவைகளைப் போக்கவும் நான் தயாராக இருக்கிறேன்” என்று கூறியவண்ணம் உடம்பிலிருந்த தூசிகளை உதறிவிட்டுக்கொண்டு தலையைக் கோதியவண்ணம் அவருக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தாள் காந்திமதி.

“நீங்கள் தவருக எண்ணவேண்டாம். உங்கள் வாக்கு மூலத்தில் எனக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை. தில்லை நாயகத்தின் குணதிசயங்களைப் பற்றியும் அவருடைய வாழ்க்கையைப் பற்றியும் பேசினுல் ஏதாவது புதிய உண்மைகள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அதனுல்தான் இங்கு வந்தேன். நீங்கள் வீட்டு வேலைகளில் முனைந்திருப்பது போல் தோன்றுகிறது. உங்கள் வேலையை முடித்துக்கொண்டு வாருங்கள். பிறகு சாவகாசமாய்ப் பேசலாம்” என்று எதிரிலிருந்த டீபாயின் மீது புரண்டு கிடந்த பேப்பரைக் கையில் எடுத்துக் கொண்டார் அவர்.

“எனக்கு அவசரமான வேலை ஒன்றும் கிடையாது! நிதானமாகப் பேசிக்கொண்டிருக்கலாம். எஜமானர் மரணமடைந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன் என் மனமும் உடைந்துவிட்டது. உடனே நான் இங்கிருந்து கிளம்பிவிடவேண்டும் என்று நினைத்தேன். ஆனுல், எஜமானரின் வழக்கு ஒரு முடிவிற்கு வரும் வரையில் நான் இங்கேயே இருக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டபடியால் நான் இங்கு இருக்கிறேன். சில தினங்களுக்கு முன்பு வழக்கம்போல் கடையிலிருந்து ஒரு மூட்டை கரி வந்துவிட்டது. பெரிய பெரிய கட்டிகளாக இருந்தன. அவைகளை உடைத்துக் கைகள் சோர்ந்துவிட்டன. அதனுல்தான் உடனே என்னுல் கதவைத் திறக்க முடியவில்லை” என்ருள் அவள்.

“நல்ல கரியாக வாங்கினுல் இந்தக் கஷ்டம் இருக்காதே!” என்று கேட்டார் அவர்.

“உண்மைதான்! குடும்பத்தில் பொறுப்புள்ள யாராவது கடைக்குச் சென்று கவனித்துப் பார்த்துப் பொருள்களை வாங்கி வந்தால் இத்தனை கஷ்டம் இருக்காது. எஜமானருக்கு புத்தகங்களைப் படிப்பதற்கும், ஆராய்ச்சி சம்பந்தமாக ஆலோசிப்பதற்கும் தான் பொழுது சரியாக இருந்தது. எனக்கோ வீட்டை விட்டு வெளியேறுவதற்கு நேரமில்லை. பிறகுக் கடையிலிருந்து கரி மூட்டைகள் அனுப்பப்படுகின்றன. கடைக்காரர்களுக்குப்

பொருளைப்பற்றி அக்கறையில்லை. எஜமானரோ இந்த விஷயங்களில் தலையிடுவதில்லை. நான் இங்கு வந்து இதுவரை ஒருமுறை கூட நல்ல கரியாக வந்தது கிடையாது. கரிமூட்டை வந்து விட்டால் அன்றெல்லாம் அவைகளை உடைத்துச் சரிப்படுத்தி ஒழுங்காக வைப்பதற்கே நேரம் சரியாகிவிடும். அப்படியே கும் மட்டியில் வைத்து எரிக்கமுடியாது, அதிகமாக உடைத்தால் தூளாகி ஒன்றிற்கும் பயன்படாமல் போய்விடும். பிறகு எஜமானரின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். அதனால்தான் அத்தனை ஜாக்கிரதையுடன் கரிக்கட்டையை ஒழுங்குபடுத்தி வைக்கவேண்டி இருக்கிறது.''

"சிறிய சுத்தியாக வாங்கி வைத்துக்கொண்டால் கரிக் கட்டிகளை வீணாக்காமல் உடைத்துப் போடுவதற்குச் சௌகர்ய மாக இருக்கும். உங்களுக்கும் இத்தனை கஷ்டம் இருக்காது. வேலையும் சீக்கிரத்தில் முடிந்துவிடும்!''

"ஆரம்பத்தில் எஜமானரிடம் அவ்வாறுதான் கூறினேன், ஆனால் அவர் என் யோசனையை ஏற்கவில்லை. கடைசியில் பெருமுயற்சி செய்து ஒரு சிறிய சுத்தியை வாங்கிக் கொடுக்கும் படி செய்தேன்.''

"இப்பொழுது நீங்கள் அதைத்தானே உபயோகித்து வரு கிறீர்கள்?''

"இல்லை! அந்தச் சுத்தி காணாமல் போய்விட்டது!''

"எப்பொழுது காணாமல் போயிற்று?''

"சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு கரி மூட்டை வந்தது. அப்பொழுதுதான் அதைக் கடைசி முறையாக உப யோகித்தேன். அன்று, அதாவது எஜமானர் மரணமடைந்த தினத்தன்று ஒரு கரி மூட்டை வந்தது. அன்றுதான் அந்த சுத்தியைத் தேடினேன். நான் வைத்த இடத்தில் அது இல்லை. வீடு முழுவதும் தேடினேன்; அகப்படவில்லை!''

"தில்லைநாயகம் வேறு ஏதாவது ஒரு முக்கிய வேலையாக அதை எடுத்துச் சென்று இருக்கலாம் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படவில்லையா?''

"எங்கு தேடியும் அது கிடைக்காததினால் கடைசியில் எனக்கு அந்தச் சந்தேகம்தான் ஏற்பட்டது. அவர் வீடு திரும்பிய பிறகு அதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று எண்ணி இருந் தேன், ஆனால் அதற்குள்தான் அவர் மரணமடைந்துவிட்டாரே!''

" தில்லைநாயகம் மாம்பலத்தில் இருக்கும் ஆராய்ச்சி சாலைக்கு அந்தச் சுத்தியை எடுத்துச் சென்று இருக்கலாம் அல்லவா? "

" அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அவர் அந்தச் சுத்தியை அன்று காலையில் உடன் எடுத்துச் சென்றாரா என்று எனக்குத் தெரியாது. ஆராய்ச்சிசாலையில் தேடிப்பார்த்தால் அந்த சந்தேகம் நீங்கிவிடும். "

" அந்தச் சுத்தியை உங்களால் அடையாளம் கண்டு பிடிக்க முடியுமா? "

"எனக்கு நன்றாகத் தெரியும். அதன் கைப்பிடியில்கூட ஒரு சிறிய பிளவு இருக்கும் "என்றாள் காந்திமதி.

துளசிங்கம் தில்லைநாயகத்தின் அறையிலிருந்து கண்டெடுத்த சுத்தியை அவளிடம் காண்பித்தார்,

" ஆமாம். இதுவேதான்! இது எங்கே இருந்தது? எங்கிருந்து கிடைத்தது? " என்று மிகுந்த ஆவலுடன் கேட்டாள். துளசிங்கம் அதைக் கோட்டுப் பையில் திணித்துக்கொண்டார்.

" தில்லைநாயகத்தின் ஆராய்ச்சி அறையிலிருந்து கண்டெடுத்தேன். தில்லைநாயகம் ஏதோ ஒரு முக்கிய காரணத்துடன் இதை அங்கு எடுத்துச் சென்றிருக்கிறார். குற்றவாளி இதைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறான். இதன் மூலம் தான் ஆதிகேசவனின் அறையில் இருந்த ஆராய்ச்சிக் கருவிகளையும் பழுதாக்கி இருக்கிறான் என்று எண்ணுகிறேன். நான் நினைத்ததுபோல் இந்தச்சந்திப்பு மிகவும் பலனுள்ளதாக இருக்கிறது. இந்தச்சுத்தி குற்றவாளியைக் கண்டு பிடிப்பதற்கு உபயோகமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். பிறகு நான் உங்களைச் சந்திக்கிறேன் " என்று கூறிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டார் துப்பறியும் துளசிங்கம்.

மறு நாள் காலை முதல் வண்டி வருவதற்கு முன்பே எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்து விட்டார் துளசிங்கம். ஏற்கனவே தான் விசாரித்தறிந்த அங்க அடையாளங்களை நன்றாக நினைவுபடுத்திக்கொண்டு வண்டியிலிருந்து இறங்கும் ஒவ்வொரு ஆசாமியையும் கவனித்துக் கொண்டிருந்தார். நீல நிற சர்ட்டு அணிந்த வண்ணம் அந்த வண்டியிலிருந்து இறங்கும் ஒரு வாலிபனைப் பார்த்தவுடன் அவன் தான் தனஞ்சயனாக இருக்க வேண்டும் என்று தோன்றியது. தன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள வேறு யாரையோ கூப்பிடுவதுபோல் பார்த்தவண்ணம் "மிஸ்டர் தனஞ்சயன்" என்று அழைத்துவிட்டு அவனைக் கடைக் கண்ணால் கவனித்தார். அந்த வாலிபன் சுற்றுமுற்றும் தலையைத் திருப்பிப் பார்த்தான், துப்பறிபவரின் சந்தேகம் நீங்கிவிட்டது.

"வணக்கம் மிஸ்டர் தனஞ்சயன்! கொஞ்சம் இப்படி வருகிறீர்களா? உங்களுடன் நான் சில வார்த்தைகள் பேச வேண்டும்" என்றார் துளசிங்கம். அறிமுகம் இல்லாத ஆசாமி ஒருவர் தன்னைப் புரிந்துகொண்டு வலியத் தன்னுடன் பேச வந்திருப்பதை அறிந்து ஆச்சரியமடைந்துபோனான் அவன்.

"நீங்கள் வக்கீல் பஞ்சநாதனிடமிருந்து வந்திருக்கிறீர்களா?" என்று சற்று வியப்புடன் கேட்டான் அவன்.

"இல்லை, நான் ஒரு துப்பறிபவன். ஒரு முக்கிய விஷயமாக உங்களைப் பார்க்கவேண்டும் என்று இங்கு வந்திருக்கிறேன்" என்று கூறினார் அவர். அவன் திடுக்கிட்டுப்போனான்! ஆனால் அதை வெளிக்காட்டவில்லை. துப்பறிபவர் அவனை பிளாட்பாரத்தில் இருந்த பெஞ்சியின்மீது அமரச்செய்து தானும் பக்கத்தில் அமர்ந்துகொண்டு விசாரணையை ஆரம்பித்தார்.

"சென்றவாரம் செவ்வாய்க்கிழமையன்று உங்கள் மாமா தில்லைநாயகம் துர்மரணமடைந்த செய்தி உங்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். அது விஷயமாக நான் உங்களை விசாரிக்க விரும்புகிறேன்."

"என் மாமாவைப்பற்றியா? ஆமாம்; அன்றுதான் நான் அவரை முதல் முறையாகவும் கடைசி முறையாகவும் சந்தித்தது நினைவிருக்கிறது."

"அன்று நீங்கள் அவரை ஏன் சந்தித்தீர்கள்? அவருடன் என்ன பேசினீர்கள்?"

"நான் சிறுவனுக இருந்தபோதே என் மாமா தன் பெற்ருேர்களேயும், உற்ருர் உறவினர்களேயும், உதறித்தள்ளிவிட்டுச் சென்றுவிட்டபடியால் எனக்கும் அவருக்கும் தொடர்பு இல்லாமலே போய் விட்டது. புத்திதெரிந்து உலகம் இன்னதென்று புரிந்து கொள்வதற்கான சக்தி ஏற்பட்ட பிறகு தான் என் மாமாவைப் பற்றியும் எங்கள் குடும்பத்தைப் பற்றியும் உணர்ந்து கொண்டேன். நான் என்னுடைய பெற்ருேர்களுடன் செங்கல்பட்டில் வசித்து வந்தேன். அங்கு தான் படித்தேன். என் தந்தை அங்கு ஒரு வக்கீலிடம் வேலே பார்த்து வந்தார். வக்கீல் குமாஸ்தா வேலேயின் மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்துவது கஷ்டமாக இருந்தது. எனக்கு உத்தியோகம் கிடைத்தால் பிறகு கவலேயில்லாமல் வாழ்க்கையை நடத்தலாம் என்று என் பெற்ருேர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனுல் எவ்வளவு முயன்றும் எனக்கு வேலே கிடைக்கவில்லே. அத்துடன் என் தந்தை திடீரென்று மாரடைப்பினுல் இறந்து போய் விட்டார். ஏற்கனவே ரத்தக் கொதிப்பு வியாதியினுல் தவித்துக் கொண்டிருந்த என் தாயார் அதனுல் அதிர்ச்சி அடைந்து போனுள். இனிமேல் குடும்பத்தை எப்படி நடத்துவது என்ற கவலே அவளுடைய நோயை அதிகப்படுத்தி படுக்க வைத்து விட்டது, என் மாமா நல்ல நிலேமையில் இருந்தபடியால் அவருடைய உதவியை நாடும்படி என் தாயார் என்னே வற்புறுத்தினுள். அத்துடன் அவருக்கு ஒன்றிரண்டு கடிதங்களும் எழுதினுள். அவரிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லே. என் மாமா அலட்சிய மனேபாவமும் பணத்திமிரும் கொண்டவராய் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றிய படியாலும் நானும் அவருடைய உதவியை நாட மறுத்தேன். எங்காவது உத்தியோகம் செய்து சம்பாதித்து என் தாயாரின் மனத்தை மகிழ்விக்க வேண்டும் என்று பெருமுயற்சி செய்து அலேந்து கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில்தான் ஒரு நாள் என் மாமாவின் மனேவி விஜயவல்லி எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். என் மாமாவின் துர்க்குணங்களே எடுத்துரைத்தாள். அவர் செய்த கொடுமைகளே விளக்கினுள். அவைகளேக் கேட்ட பிறகு என் மாமாவின் மீது எனக்கு அளவு மீறிய கோபம் வந்தது. ஆனுல் விஜயவல்லி வேறு ஒருவனேப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதாய்க் கூறியபோது நான் பதறிப் போனேன். ஒரு பெண்ணிற்கு இவ்வளவு துணிவு இருக்கும் என்று நான் கனவில்கூடக் கருதவில்லே."

"விஜயவல்லி யாரை மணந்து கொள்ள எண்ணியிருந்தாள் என்று கூற முடியுமா?"

"அது எனக்குத் தெரியாது! அவள் எவ்வளவுதான் படித்தவளாயும் முற்போக்குக் கொள்கைகள் மிகுந்தவளாயும் இருந்தபோதிலும் கணவனை உதறித் தள்ளிவிட்டு மறுமணம் செய்து கொள்வது மிகவும் தவறானது என்றுதான் எனக்குத் தோன்றியது. எங்கள் குடும்பத்தின் நல்ல பெயர் கெட்டுவிடப் போகிறதே என்று என் தாயாரும் இதைத்தான் வற்புறுத்தினாள். எங்களிடம் சிபார்சு பெறுவதற்காக வந்த அவள், நாங்கள் புத்தி சொல்வதைக் கண்டு எங்களிடம் கோபித்துக்கொண்டு சென்று விட்டாள். என் தாயார் மீண்டும் தன்னை வந்து ஒரு முறை பார்க்கும்படியும் தனக்கு ஏதாவது உதவி செய்யும்படியும் வேண்டி ஒரு கடிதம் எழுதினாள். அதற்கும் பதில் ஒன்றும் வரவில்லை. என் குடும்பத்தில் ஏற்பட்ட கலவரமும் என் மாமாவின் உதாசீனமும் என் தாயாரின் நோயை அதிகப்படுத்தி விட்டன. கடைசியில், என் தாயாரின் அவல நிலையை உத்தேசித்து என் மாமாவைச் சந்திக்கத் தீர்மானித்தேன். எப்படியாவது மாமாவைச் சந்தித்து நிலைமையை விளக்கி அவரைக் கையோடு ஊருக்கு அழைத்துக்கொண்டு போய் விடவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் சென்னைக்கு வந்தேன்."

"தில்லைநாயகத்தின் வீட்டு விலாசம் உங்களுக்குத் தெரியும். நீங்கள் அங்கு சென்று அவரைச் சந்தித்திருக்கலாமே?"

"அவ்வித எண்ணத்துடன் தான் நான் புறப்பட்டேன். ஆனால் விஜயவல்லியின் மூலம் என் மாமாவின் குணாதிசயங்களை அறிந்திருந்தபடியால், அவர் என்னைப் பார்க்க அனுமதிக்காவிட்டால் என்ன செய்வது என்ற கவலை ஏற்பட்டபடியால்தான், நான் மாம்பலம் ஆராய்ச்சிசாலையின் முன்னால் நின்று அவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என் மாமாவை நான் அதற்கு முன்பு பார்த்திரா விட்டாலும் என் தாயார் அவருடைய போட்டோவைக் காண்பித்திருக்கிறாள். அத்துடன் அவர் எப்படி இருப்பார் என்பதை விஜயவல்லியின் மூலம் அறிந்திருந்தேன். அதனால்தான் அன்று மாலை ஆறரை மணி சுமாருக்கு ஆராய்ச்சிசாலையைவிட்டு வெளியே வந்தவுடன் அவரை நான் புரிந்துகொண்டு விட்டேன். அவருடன் மற்றொருவரும் வந்து கொண்டிருந்தார். என் மாமா ஆதிகேசவன் என்பவருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்து வருவதாய் நான் கேள்விப்பட்டிருந்தபடியால் அது அவராகத்தான் இருக்கவேண்டும் என்று நான் புரிந்துகொண்டேன். என் மாமாவைப் பார்த்துவிட்ட போதிலும்

அவரைத் தனிமையில் சந்திக்க முடியவில்லையே என்ற கவலை என்னை வாட்டியது. அன்று அவரை எப்படியாவது சந்தித்துப் பேசவேண்டும் என்ற தீர்மானத்துடன் அவருக்குத் தெரியாத படி அவரை நான் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது என் மாமாவின் தொண்டை கட்டிக்கொண்டிருந் தது. இரண்டு மூன்று முறை இருமினார். குளிரினால் அவர் உடல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்கு விளங்கி விட்டது. நான் அவர்களுக்குச் சமீபத்தில் இருந்தபடியால் அவர்கள் பேசிக்கொண்டது ஓரளவு என் காதில் விழுந்துகொண்டு தான் இருந்தது. இருமல் மாத்திரைகளைச் சாப்பிடும்படி யோசனை கூறினார் அருகில் இருந்தவர். ஆதிகேசவன் தற்காப் பிற்காகத் தன்னிடம் வைத்திருந்த இருமல் மாத்திரைகள் நிரம்பிய புட்டியை அவரிடம் நீட்டினார். அதில் மூன்று மாத் திரைகள்தான் இருந்தன. அதிலிருந்து இரண்டு மாத்திரைகளை என் மாமா வாயில் போட்டுக்கொண்டார். மீதியிருந்த ஒரு மாத்திரையை ஆதிகேசவன் விழுங்கிவிட்டார்.

"நான் அவர்கள் இருவரையும் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தேன். இருவரும் அநேகமாக ஆராய்ச்சி சம்பந்த மான விஷயங்களையே பேசிக்கொண்டிருந்தார்கள். என் மாமா வைத் தனிமையில் சந்திப்பது கடினம் என்று தோன்றியபடியால் தான், ஐஸ்கிரீம் பாரினுள் துணிந்து சென்று அவருடன் பேசி னேன். அவரை வாசல் பக்கம் அழைத்து வந்து நான் யார் என்பதையும் எதற்காக வந்தேன் என்பதையும் வெளியிட்டேன். என் தாயாரின் அவல நிலையை வெளிப்படுத்தி என்னுடன் புறப் பட்டு வந்து ஒருமுறை பார்த்துவிட்டுப் போகும்படி வேண்டி னேன். அதற்கு அவர், 'முடியாது, கண்டிப்பாக முடியாது' என்று கூறிவிட்டார். இதனால் நான் மனமுடைந்து போனேன். எனவே அவர் மீது எனக்கு அளவு மீறிய ஆத்திரம் ஏற் பட்டது."

"நீங்கள் பிறகு என்ன செய்தீர்கள்?"

"இந்தச் செய்தியைக் கேட்டால் என் தாயார் மேலும் மனமுடைந்து போய்விடுவாள் என்று எனக்குத் தோன்றியபடி யால், மீண்டும் அவரைச் சந்தித்து வற்புறுத்தி உடன் அழைத்துச் செல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் நான் அவரைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தேன். அவர்கள் இருவரும் ஒரு மருந்து கடையினுள் பிரவேசித்ததையும் பார்த்தேன். பிறகு அவர்கள் இருவரும் ஓட்டலுக்குள் சென்றார்கள். நான் வெளியிலே காத்திருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு இருவரும் வெளியே

வந்தனர். மாமா ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்துகொண்டு புறப்பட்டார். அவர் அடையாறில் இருக்கும் தன் வீட்டிற்குத் தான் செல்கிறார் என்று உணர்ந்துகொண்டு, நானும் ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்துகொண்டு அவரைப் பின்தொடர்ந்து சென்றேன்.

"அவருடைய வண்டி அடையாறின் பக்கம் செல்வதற்குப் பதிலாக ராயப்பேட்டையை நோக்கிச் சென்றது! நான் அவரைப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தேன். அவருடைய வண்டி ராயப்பேட்டை ஆஸ்பத்திரியினுள் பிரவேசித்ததும் தள்ளாடிய வண்ணம் வண்டியை விட்டு வெளியே வந்த அவரை ஒரு நர்ஸ் ஆஸ்பத்திரியினுள் அழைத்துச் சென்றதைக் குறித்து நான் திகைப்படைந்து போனேன். நான் வண்டியை விட்டிறங்கி ஆஸ்பத்திரியினுள் பிரவேசித்து அவருடைய வருகையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். வெகு நேரம் காத்திருந்தும் அவர் வெளியே வராததால் அவரை ஆஸ்பத்திரியினுள் அழைத்துச் சென்ற நர்ஸிடம் அவரைப்பற்றி விசாரித்தேன். சில நிமிடங் களுக்குமுன்புஇறந்துவிட்டதாகக் கூறிய பதில் என்னைப் பதைக்க வைத்துவிட்டது! அவரைப் பார்க்கத் துடித்தேன். ஆனால் நர்ஸ் என்னை அதற்கு அனுமதிக்கவில்லை. மாமா அவ்வாறு திடீரென மரணமடைவார் என்று நான் நினைக்கவில்லை."

"தில்லைநாயகத்தின் மரணச் செய்தியைக் கேட்ட பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"என் மூளை குழம்பிவிட்டது. என்ன செய்வது என்றே எனக்குப் புரியவில்லை! ஒன்றும் தோன்றாமல் சற்று நேரம் அங்கேயே நின்றிருந்தேன். என் மாமாவின் மரணத்தைப்பற்றிய எண்ணம் ஏற்பட்டவுடன் எனக்கு என் தாயாரின் நினைவு வந்துவிட்டது. அவளுடைய உடல் நிலை எப்படி யிருக்கிறதோ? நான் அவளிடம் என்ன சொல்வது? தில்லைநாயகத்தின் மரணச் செய்தியை வெளிப்படுத்துவதா வேண்டாமா? — இதுபோன்ற கேள்விகள் என்னுடைய குழப்பத்தை அதிகப்படுத்தின. தன் சகோதரனை அழைத்து வரவில்லையே என்ற கவலை ஏற்படுவ துடன் அவருடைய மரணச் செய்தியைக் கேட்டு என் தாயார் அதிர்ச்சி அடைந்து போவாள் என்று தோன்றியபடியால் கூடியவரையில் அந்தச் செய்தியை மறைத்து வைப்பது நல்லது என்றே தீர்மானித்தேன். ஆனால் எவ்வளவு நாட்களுக்குத்தான் அவ்வாறு மறைத்து வைக்க முடியும்? எப்படியாவது விஷயம் அவளுடைய காதில் விழுந்து, அவளுடைய உயிருக்கு அபாயம் நேர்ந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை என்னை

வாட்டாமல் இல்லை. இவ்வாறு எந்தவிதமான முடிவீற்கும் வர முடியாமல் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் எனக்கு விஜய வல்லியின் நினைவு வந்தது. அவளிடம் யோசனை கேட்பது என்ற எண்ணத்துடன் அன்று இரவு வண்டியிலேயே காஞ்சீபுரத்திற்குப் புறப்பட்டு விட்டேன். மறுநாள் காலை நான் அவளை பரிமளா பவனத்தில் சந்தித்தேன். என்னைக் கண்டு அவள் ஆச்சரிய மடைந்து போனாள், நான், அவளிடம் தில்லைநாயகத்தின் மரணச் செய்தியை வெளியிட்டேன். முதலில் அவள் அதை நம்பவில்லை. நடந்த விஷயங்களை விவரமாய்க் கூறிய பிறகுதான் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. என்னதான் அவள் தில்லைநாயகத்தை வெறுத்த போதிலும் அவருடைய மரணச் செய்தி அவளுக்கு துயரத்தை உண்டாக்கிவிட்டது. பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள். ஆயினும் அவளையும் மீறிக்கொண்டு கண்ணீர்ப் பொட்டுகள் கன்னத்தில் உருண்டன."

"அவள் தான் யாரைப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போகிறாள் என்பதைத் தெரிவித்தாளா?"

"இல்லை! அதைப்பற்றிக் கேட்பதற்கு எனக்குத் துணிவு ஏற்படவில்லை. அதற்கு அவள் பதில் சொல்வாளா என்பது எனக்குச் சந்தேகமாக இருந்தது."

"அவள் எப்பொழுதாவது மாரிசாமி என்பவனைப்பற்றிப் பேசியிருக்கிறாளா?"

"இல்லை! அந்தப் பெயரை நான் இதுவரை கேட்டதில்லை."

"விஜயவல்லி இப்பொழுது எங்கிருக்கிறாள் என்று உங்களால் கூறமுடியுமா?"

"புரசவாக்கத்தில் இருக்கும் ஆனந்தா லாட்ஜில் மூன்றும் நெம்பர் அறையில் தங்கி இருக்கிறாள்."

"அப்படியா? இது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"நான் விஜயவல்லியைப் பார்த்து என் நிலையை வெளியிட்டு யோசனை கேட்டேன். அவள் தகுந்த வழி ஏதாவது சொல்லு வாள் என்று எதிர்பார்த்தேன். உடம்பு நன்றாகத் தேறும் வரையில் மாமாவின் மரணத்தைப்பற்றி என் தாயாரிடம் தெரி விக்க வேண்டாம் என்று எச்சரித்திருந்தாள் அவள். ஆனால் நான் செங்கல்பட்டிற்குச் சென்றவுடன் மாமாவுடன் வரவில்லை என்ற விஷயம் தெரிந்தவுடன் அந்த ஏக்கத்தினால் அவள் இறந்துவிட்டாள்."

"இப்பொழுது நீங்கள் ஏன் சென்னைக்கு வந்தீர்கள்? விஜய வல்லியைச் சந்திக்கப் போகிறீர்களா?"

"இல்லை! வக்கீல் பஞ்சநாதன்தான் என்னை உடனே புறப் பட்டு வரும்படி எழுதியிருந்தார். என் மாமாவின் சொத்து சம்பந்தமாகச் சில விஷயங்களை என்னுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார்!"

"அவர் மூலம்தான் எனக்கு நீங்கள் வரப்போவது தெரிய வந்தது. தில்லைநாயகத்தை யாரோ தந்திரமாகக் கொலை செய் திருக்க வேண்டும் என்று போலீசார் நினைக்கிறார்கள். அதனால் தான் நான் உங்களை இவ்வாறு விசாரணை செய்யவேண்டி யிருந்தது. நீங்கள் வக்கீல் வீட்டில்தானே இருக்கப் போகிறீர்கள். சென்னையைவிட்டுச் செல்வதற்கு முன்பு தயவுசெய்து எனக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று தன்னுடைய விலாசத்தைக் கொடுத்துத் தனஞ்சயனை அனுப்பினார் துளசிங்கம்.

தனஞ்சயனை விசாரித்ததின்மூலம் அந்த வழக்கில் அதிக அபிவிருத்தி ஏற்படாவிட்டாலும் விஜயவல்லி விலாசம் தெரிய வந்தது குறித்து பெருமகிழ்ச்சி அடைந்தார் துளசிங்கம். தன் டைரியில் அவளுடைய விலாசத்தைக் குறித்துக்கொண்டு எழும்பூர் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டார் அவர். அவருடைய கால்கள் நடந்துகொண்டிருந்தபோதிலும், விழிகள் நடமாடு வோரைக் கவனித்துக் கொண்டிருந்தபோதிலும் தில்லைநாய கத்தின் திடீர் மரணத்தைப்பற்றியே அவருடைய சிந்தனை சுழன்று கொண்டிருந்தது.

தனஞ்சயன் கூறிய விஷயங்களை ஒருமுறை நினைவு படுத்திக் கொண்டார். அவன் தில்லைநாயகத்தை ஊருக்கு அழைத்துப் போகவேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருந்தால் அவனைச் சந்தேகிப்பதில் பலன் இல்லை என்றே தோன்றியது. தில்லைநாயகம் தன்னுடைய வேண்டுகோளை இவ்வாறு நிராகரித்து விடுவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை, அப்படி எதிர்பார்த்திருந் தாலும் அவன் அவரைக் கொலைசெய்யத் தீர்மானித்திருந்தான் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அவ்வாறு இருந்தா லும் அவன் தன்னுடன் விஷம் கொண்டு வந்திருப்பானா? அவனுடைய தாயார் தன் சகோதரனைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கிறாள் என்று அவன் கூறியது உண்மைதானா? அல்லது தில்லைநாயகத்தின் உயிலைப்பற்றி உணர்ந்துகொண்டு அதை அவர் மாற்றிவைப்பதற்கு முன்பு அவரை எப்படியாவது ஒழித்து விடவேண்டும் என்ற எண்ணத்துடன் சென்னைக்கு வந்திருப்பானா? ஒருவேளை இது, தில்லைநாயகத்தின் செல்வத்தை அடைவதற்காகத்தனஞ்சயனும் வக்கீலும் சேர்ந்துசெய்த சூழ்ச்சி யாக இருக்குமோ? ஒழுக்கம் மிகுந்தவர்போல் காணப்படும் வக்கீல் பஞ்சநாதன் அத்தகையவராய் இருப்பாரா? இந்தக் காலத்தில் யாரை நம்புவது? விஜயவல்லியை விசாரித்தால் தனஞ்சயனின் வாக்குமூலம் எவ்வளவு தூரம் உண்மை என்பது விளங்கிவிடும் என்ற எண்ணம் ஏற்பட்டபடியால் நேராகப் புரச வாக்கத்திற்குப் புறப்பட்டார் துளசிங்கம்.

ஆனந்த லாட்ஜிலிருந்த மூன்றும் நெம்பர் அறையின் முன் னால்போய் நின்று லேசாகக் கதவைத்தட்டினார். மறுகணம் கதவு திறக்கப்பட்டது. அவ்வறையிலிருந்து ஓர் அழகு மங்கை வெளிப் பட்டாள். நடுத்தர வயதுடைய அந்த நாகரிக நங் கையைப் பார்த்தவுடன் அவள்தான் விஜயவல்லியாக இருக்கவேண்டும் என்பது துளசிங்கத்திற்குப் புரிந்து விட்டது.

"நீங்கள்தானே விஜயவல்லி" என்று கேட்டார் அவர்.

"ஆமாம்! நீங்கள் யார்?" என்று சற்று வியப்புடன் வினவினுள் அவள்.

"நான் ஒரு துப்பறிபவன். ஒரு முக்கிய விஷயமாக உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்."

"அப்படியா?" என்று கேட்டுவிட்டு அவரை அழைத்துக் கொண்டு ஹாலிற்குச் சென்றுள். அங்கு போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலி ஒன்றில் அவரை அமரச் செய்துவிட்டு தானும் சற்றுத் தூரத்தில் அமர்ந்துகொண்டாள்.

"என்னை எதற்காகப் பார்க்க வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்பதுபோல் அவரைப் பார்த்தாள் அவள்.

"உங்கள் கணவர் தில்லைநாயகத்தைப்பற்றிச் சில விஷயங்களை விசாரிப்பதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன். அவர், ரத்தத்தில் விஷக்கலப்பு ஏற்பட்டு துர்மரணமடைந்திருக்கும் செய்தி உங்களுக்குத் தெரிந்திருக்கும். அது விஷயமாக எனக்கு ஏற்பட்டிருக்கும் சில சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளத்தான் இங்கு வந்திருக்கிறேன். அவருடைய ஆராய்ச்சிசாலையினுள் எவனே புகுந்திருக்கிருன்! அவர் செய்துகொண்டிருந்த ஆராய்ச்சியைத் தாமதப்படுத்த அவன் முனைந்திருக்கிருன் என்றும் தோன்றுகிறது. இதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று ஆரம்பித்தார் துளசிங்கம்.

"நான் அவரை ஒரு மனிதராகவே மதிக்கவில்லை. அவர் என்ன செய்கிருர், எங்கு போகிருர் என்பவைகளைப்பற்றி நான் கவலைப்பட்டதில்லை. ஆகவே, அவர் செய்த ஆராய்ச்சியைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது."

"மாரிசாமி என்பவரை உங்களுக்குத் தெரியுமா?"

"நன்ருகத் தெரியும். அவருக்கு என்ன?"

"இப்பொழுது அவர் எங்கு இருக்கிருர்?"

"அவர் இந்த ஊரிலேயே இல்லை. அவர் இரண்டு வார காலங்களுக்கு இந்தப் பக்கம் வரமாட்டார் என்று எண்ணுகிறேன். அவரைப்பற்றி நீங்கள் ஏன் விசாரிக்கிறீர்கள்? அவருக்கும் தில்லைநாயகத்தின் மரணத்திற்கும் என்ன சம்பந்தம்? தில்லைநாயகத்தை அவர் பார்த்ததுகூட இல்லையே!"

"அப்படியிருந்தால் சென்ற செவ்வாய்க்கிழமையன்று — அதாவது தில்லைநாயகம் மரணமடைந்த தினத்தன்று -

அவர் ஏன் மாலே சுமார் மூன்று மணிக்கு தில்லைநாயகத்திற்கு டெலிபோன் செய்தார் ?"

"மாரிசாமி அவருக்கு டெலிபோன் செய்தாரா? இதை என்னால் நம்பமுடியாது !"

"அந்த டெலிபோனைக் கவனித்த ஆதிகேசவன்தான் அந்த விஷயத்தை என்னிடம் சொன்னார். அதனால்தான் அவ்வளவு நிச்சயமாய்க் கேட்கிறேன். அது இருக்கட்டும் ; சென்ற திங்கள் கிழமையன்று நீங்கள் தில்லைநாயகத்தை எச்சரித்து ஒரு கடிதம் எழுதினீர்கள் அல்லவா ?"

"ஆமாம் ; அதில் தவறு என்ன இருக்கிறது ?"

"தில்லைநாயகம் எவ்வளவுதான் கொடியவராய் இருந்த போதிலும் அவருடைய உணவில் விஷத்தைக் கலக்கச் செய்து அவரைக் கொலை செய்வது பெரிய குற்றம் அல்லவா ?"

"என்னைக் குற்றவாளி என்று நினைக்கிறீர்கள்? இல்லை ; நான் நிரபராதி. அவரைப் பயமுறுத்தி, அவருடைய பிடிவாதத்தைப் போக்கி, அவரை என் வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகவே அப்படி எழுதியிருந்தேனே தவிர, அவரைக் கொலை செய்யவேண்டும் என்ற நோக்கம் சிறிதும் கிடையாது. என் கடிதம் கிடைத்த தினத்தன்று அவர் அவ்வாறு மரணமடைவார் என்று நான் கனவில்கூடக் கருதவில்லை !"

"அது சரி ! தில்லைநாயகத்தின் மரணச்செய்தி உங்களுக்கு எவ்வாறு தெரியவந்தது ?"

"தனஞ்சயன் என்பவன் சொன்னான். ஒருகணம் என் மனம் துடித்துப் போய்விட்டது. தன் தாயாரின் உடல்நிலைமையைப் பற்றியும் அவரை அழைத்துப்போக வந்த அவன், அவருடைய மரணச்செய்தியைக் கேட்டு மனத்துடிப்பு அடைந்ததுபற்றியும் கூறினான். நான் அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பினேன்."

"நீங்கள் திடீரென்று பரிமள பவனத்திலிருந்து புறப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. மாரிசாமியைக் காணத்தானே சென்றீர்கள் ?"

"சுதந்திர நாட்டில் ஒருவன் இஷ்டப்படி இஷ்டமான இடத்திற்குச் செல்வதற்கு உரிமையில்லையா ? அனாவசியமாய்க் கேள்விகளைக் கேட்டு என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள் !"

"உங்களை நான் தொந்தரவு செய்யவில்லை. தில்லைநாயகத்தின் திடீர் மரணத்திற்கு நீங்கள்தான் காரணம் என்பதை நிரூபிக்கவே

முயற்சிக்கிறேன். மாரிசாமியை நீங்கள் பதிவுத் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறீர்கள்! அவனும் நீங்களும் சேர்ந்துதான் தில்லைநாயகத்தைக் கொலை செய்திருக்கிறீர்கள். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?"

"நீங்கள் நினைப்பதில் பாதி உண்மை. ஆனால் அவரைக் கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. சென்ற செவ்வாய்க்கிழமையன்று அவரிடமிருந்து தந்தியை எதிர்பார்த்தேன். மாலைவரை வரவில்லை. உடனே மாரிசாமியை அனுப்பி அவருடைய ஆபீஸ் அறையின் பல்பை மாற்றிவைக்கும் படி ஏற்பாடு செய்தேன். அது வெடித்துப் பயங்கர சப்தம் உண்டாக்கி அவரைக் கிடுகிடுக்கச் செய்துவிடும். உடனே என் கடிதத்தின் நினைவு வரும். மேலும் பிடிவாதமாய் இருந்தால் உயிருக்கு அபாயம் ஏற்பட்டுவிடலாம் என்று எனக்கு விடுதலை கொடுத்துவிடுவார். இவ்வாறு நான் எண்ணியிருந்தேன். ஆனால் அது வேறு விதமாக முடிந்து விட்டது!"

"நீங்கள் விரும்பியிருந்தால் ஒரு விதமான தடையுமின்றி நீங்கள் மாரிசாமியை மணந்து கொண்டிருக்கலாமே? ஏன் தில்லை நாயகத்தைக் கடிதம் எழுதும்படி வற்புறுத்திக் கொண்டிருந் தீர்கள்?"

"என் கணவர் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண் டால் தனக்கு அபகீர்த்தி ஏற்பட்டுவிடப்போகிறதே என்று தான் மாரிசாமி அவரிடமிருந்து கடிதம் ஒன்று எழுதி வாங்கும் படி கூறினர். அதனால் தான் நான் அவரை வற்புறுத்தி வந்தேன்."

"நீங்கள் தில்லைநாயகத்தைப் பயமுறுத்தவேண்டும் என்பதற்காகப் பல்பை மாற்றச்சொன்னீர்கள். ஆனால் உங்கள் சூழ்ச்சியில் சிக்கிப் படுகாயமடைந்தது வக்கீல்! தில்லைநாயகம் மின்சார விளக்கினடியில் நின்றிருந்தால் கண்டிப்பாக அவருடைய உயிர் போயிருக்கும். ஆனால் வேறு விதத்தில் அவர் மரண மடைந்து விட்டார். அது சரி, மாரிசாமி எங்கு இருக்கிருர்?"

"நான் அவரைச் சென்ற புதன்கிழமையன்றுதான் கடைசி முறையாகச் சந்தித்தேன்! பிறகு என்னைச் சந்திப்பதாகக் கூறி விட்டு அவர் கிளம்பி விட்டார். ஆனால் அவர் எங்கு போனர், எப்பொழுது திரும்பி வருவார் என்பது எனக்குத் தெரியாது" என்று கூறிவிட்டாள் விஜயவல்லி. அந்த விசாரணை அத்துடன் முடிந்தது. அங்கிருந்து புறப்பட்டார் துளசிங்கம். தான் செய்த விசாரணைகளும், நடந்த விஷயங்களும் ஒரு முறை அவருடைய

சிந்தனையில் சுழன்றன, ஆரம்பத்தில் அவர் வாசகன் என்று பெயர் வைத்த வாலிபனான தனஞ்சயனைச் சந்தித்தார். அவன் நிரபராதி என்பது விளங்கி விட்டது. அடுத்தபடியாக விஜய வல்லியின்மீது சந்தேகம் எழுந்தது. அவளை விசாரித்த பிறகு அவளும் நிரபராதி அன்று நினைக்க இடமிருந்தது, கடைசியாக மாரிசாமியின் மீதுதான் அவர் நம்பிக்கை வைத்திருந்தார். அவனைத் தான் விஜயவல்லி மறுமணம் செய்துகொள்ள நிச்சயித்து இருக்கிறாள். அவன் தான் தில்லைநாயகத்தின் ஆபீஸ் அறையின் பல்பை மாற்றி வைத்திருக்கிறான் என்பது தெரிந்து விட்டது. அவனே உஸ்மான் ரோடில் இருந்த ஆராய்ச்சி அறையினுள் பிரவேசித்து இருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடம் இருந்தது! ஆனால் தில்லைநாயகத்தின் உடல் நிலை எவ்வாறு பாதிக்கப்பட்டது? அவருடைய ரத்தத்தில் விஷக்கலப்பு எப்படி ஏற்பட்டது என்பதுதான் அவருக்குப் புரியாத புதிராக இருந்தது! தில்லைநாயகம் ஆராய்ச்சிசாலையை விட்டுக் கிளம்பியபோது உடல் நிலை பாதிக்கப்படவில்லை. ஐஸ்கிரீம் பாரினுள் சென்ற போது நல்லபடியாகத்தான் இருந்திருக்கிறார். அங்கு விஷக் கலப்பு ஏற்பட்டிருக்க முடியாது, ஓட்டலினுள் சென்றபோது அவருடைய நிலைமை சற்று மாறியிருந்தது. அன்று அவர் புசித்த சிற்றுண்டியில் எந்த விதமான பழுதும் கிடையாது. ஓட்டலை விட்டு வெளியே வந்தவுடன் நிலை தடுமாறிப் போயிருக்கிறார் அவர். தில்லைநாயகம் ஐஸ்கிரீம் பாருக்கு வருவதற்கு முன்பே அவருடைய ரத்தத்தில் ஏன் விஷம் கலந்திருக்கக் கூடாது?

தனஞ்சயனும் நிரபராதி; மாரிசாமியும் அவரைக் கொலை செய்யத் தீர்மானிக்கவில்லை. அப்படியானால் யார் அவருடைய உணவில் விஷத்தைக் கலந்திருக்க முடியும்? இதுவரை நம் கவனத்தில் படாமல் தப்பி வரும் ஆசாமி எவனாவது குற்றவாளியாக இருப்பானோ? எப்படி நினைத்த போதிலும் குற்றவாளி யார் என்று அவரால் முடிவிற்கு வரமுடியவில்லை!

ஆதிகேசவனையும் தில்லைநாயகத்தையும் ஒழித்துக் கட்டத் தான் குற்றவாளி தந்திரம் செய்திருக்கிறான். ஆனால் ஒருவர் பிழைத்து விட்டார்; மற்றொருவர் அதற்குப் பலியானார்! இருவரும் ஆராய்ச்சியாளர்கள்: சுலபமான முறையில் பஞ்சு தயாரிக்கும் வழியைக் கண்டுபிடிக்கப் பெருமுயற்சி செய்துவருகிறவர்கள். அந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றால் அவர்களுக்குப் பெயரும் புகழும் கிடைக்கும். அத்துடன் அவர்களும் குறுகிய காலத்தில் செல்வந்தர்களாகி விடுவார்கள். அவர்களின் ஆராய்ச்சியைத் தடை செய்வதற்காக யாரோதான் அவர்களைத் தந்திர

மாகக் கொலை செய்யத் தீர்மானித்திருக்கிறான் என்பது விளங்கி விட்டது.

பலவாறு சிந்தித்த பிறகு குற்றவாளியின் குணாதிசயங்களைப் பற்றிய உண்மைகள் சில தெரியவந்தன, ஒன்று குற்றவாளி தில்லைநாயகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவனாக இருக்கவேண்டும். இரண்டு, அவருடைய பழக்கவழக்கங்களைப் பற்றி உணர்ந்தவனாக இருக்கவேண்டும், மூன்று, சுயநலம், பொறாமை முதலிய துர்க்குணங்கள் மிகுந்தவனாக இருக்க வேண்டும்; இந்த மூன்று குணங்களும் கொண்ட ஆசாமி யாரென்று எவ்வளவு அலசிப்பார்த்தும் துளசிங்கத்தினால் ஒருவிதமுடிவிற்கும் வரமுடியவில்லை! எவ்வளவு சிந்தித்தும் பிரயோசனப்படவில்லை. கடைசியில் தில்லைநாயகத்தின் பொருளாதார நிலை என்ன? அவருடைய கணக்கு எவ்வாறு இருக்கிறது என்று அறிந்தால் ஏதாவது புதிய உண்மைகள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை எழுந்தது. ஆகவே காந்திமதிக்குப் போன் செய்து தில்லை நாயகம் எங்கு கணக்கு வைத்திருந்தார் என்று அறிந்து கொண்டு அந்த பாங்கிற்குச் சென்றார் துளசிங்கம்.

அந்த பாங்கின் மானேஜரை அவருக்கு நன்றாகத் தெரியும். தில்லைநாயகத்தின் வழக்கு விஷயமாக அவர் வேலை செய்கிறார் என்று உணர்ந்திருந்தபடியால் லெட்ஜரைக் கொண்டு வரச் செய்து தில்லைநாயகத்தின் கணக்கைப் புரட்டிக் காண்பித்தார் மானேஜர். கணக்கு ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது. தன் வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான தொகையைத் தான் வாங்கி வந்தார். கணக்கை நன்கு கவனித்தபோது நிறைய சர்க்கார் பாண்டுகளையும் பல பிரபல கம்பெனிகளின் ஷேர்களையும் வாங்கி இருக்கிறார் என்றும் தெரியவந்தன. அத்துடன் தனக்குப் பிறகு பாங்கில் இருக்கும் பணத்தை வாங்க ஆதிகேசவனுக்கு உரிமைஅளித்திருந்தார் என்பதும் வெளியாகியது. எல்லாவற்றையும்விட தில்லைநாயகம் மரணமடைந்த மூன்றாவது நாள் ஆதிகேசவன் தில்லைநாயகத்தின் கணக்கிலிருந்து முப்பதினாயிரம் ரூபாய் வாங்கியிருந்தது துளசிங்கத்தின் ஆச்சரியத்தை அதிகப்படுத்தி விட்டது. அவ்வளவு பெரிய தொகையை அவர் எதற்காக வாங்கினார்? அவருக்குத் திடீரென்று என்ன செலவு ஏற்பட்டது? அந்தப் பணத்தை அவர் என்ன செய்தார்? ஏன் அதைப்பற்றித் தன்னிடம் தெரிவிக்கவில்லை? இத்தனை கேள்விகளும் ஒரே சமயத்தில் எழுந்து அவரைக் குழம்படித்து விட்டன. பாங்கு மானேஜரிடம் ஆதிகேசவனைப்பற்றி விசாரித்தார் துளசிக்கம். அவர் தில்லைநாயகத்துடன் அடிக்கடி பாங்கிற்கு வந்திருக்கிறார்

என்றும், தில்லைநாயகம் மரணமடைந்த மூன்றுவது நாள் அவரே நேரிடையாக பாங்கிற்கு வந்து முப்பதினுயிரம் ரூபாய் வாங்கினுர்என்றும், முக்கியமான தஸ்தாவேஜுகள் சிலவற்றைப் பாங்கு இரும்புப்பெட்டி அறையில் வைத்துவிட்டுச் சென்றிருக்கிருர் என்றும் தெரியப்படுத்தினுர்,

துளசிங்கம் அவைகளையும் கொண்டுவரச் செய்து பரிசோதனை செய்தார். ஆராய்ச்சி சம்பந்தமான குறிப்புகள் அதில் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் தில்லைநாயகத்திஞல் தயாரிக்கப்பட்டவைகள் தான் என்றும் அவருக்கு விளங்கி விட்டது. ஆதிகேசவன் வக்கீலிடமிருந்து குறிப்புகளைக் கொண்டு வந்து பத்திரப்படுத்தி யிருக்கிருர். எதிரிகளிடம் சிக்கி விடப்போகிறதே என்ற பயத்திஞல் அவர் அவ்வாறு செய்திருக்கலாம். ஆனுல் அவர் ஏன் திடீரென்று அவ்வளவு பெரிய தொகையை வாங்கினுர் என்பதுதான் புரியவில்லை! ஆதிகேசவன் தில்லைநாயகத்துடன் நெருங்கிப் பழகி வந்திருக்கிருர். அவருடைய பழக்க வழக்கங்களையும் நன்கு உணர்ந்திருக்கிருர் ! அத்துடன் அந்த ஆராய்ச்சியில் வெற்றி பெற்ருல் அதன் மூலம் கிடைக்கக் கூடிய பொருள் பாதி அவருக்குச் சொந்தமாகி விடப்போகிறதே என்ற பொருமை ஏற்படுவதற்கும் காரணம் இருக்கிறது. ஒரு வேளை ஆதிகேசவன் ஏன் குற்றவாளியாக இருக்கக்கூடாது? அவ்வாறு இருந்தால் அவருடைய உடலும் ஏன் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்? ஒரு வேளை தன் மீது சந்தேகம் விழாமல் இருப்பதற்காக அவர் நடத்திய போலி நாடகமாக இருக்குமோ? ஆதிகேசவனைச் சந்தித்து அவரை விசாரித்து இந்தக் கேள்விக்கு பதில் அறிய வேண்டும் என்று தீர்மானித்து பாங்கியிலிருந்தவாறே ஆதிகேசவனுக்கு டெலிபோன் செய்தார். அப்பொழுது ஆதிகேசவன் வீட்டில் இருந்தார். துளசிங்கம், டெலிபோன் மூலம் குறிப்பாகச் சில கேள்விகளைக் கேட்டார். ஆதிகேசவன் அவைகளுக்குச் சரியாகப் பதில் சொல்லவில்லை. தான் அவசர வேலையாக ஆராய்ச்சி சாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாயும், ஆறுமணிக்கு அங்கு வந்தால் எல்லா விஷயங்களையும் விவரமாய்க் கூறுவதாகவும் சொன்னுர் ஆதிகேசவன். அப்பொழுது அவருடைய பேச்சில் தடுமாற்றமும் தயக்கமும் காணப்பட்டன. துளசிங்கத்திற்கு அவர்மீது ஏற்பட்டிருந்த சந்தேகம் இப்பொழுது அதிகமாகியது. ஆகவே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று இன்ஸ்பெக்டர் சங்கரனுடன் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை வெளியிட்டார், அப்பொழுது அவருக்கும் ஆதிகேசவனின்மீது சந்தேகம் விழுந்தது! அவரை எப்படியாவது சாமர்த்தியமாக மடக்கி விசாரித்து உண்மையைக் கறந்து விடும்படியும், தான் அரை மணி நேரம்

கழித்து அங்கு வருவதாகவும் சொன்னார் இன்ஸ்பெக்டர். தில்லைநாயகத்தின் வழக்கு சம்பந்தமாகவும் அவரைக் கொலை செய்த விஷயத்தைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்துவிட்டு ஐந்தே முக்கால் மணிக்கு மாம்பலத்திற்குப் புறப்பட்டார் துளசிங்கம். இப்பொழுது, மேகமண்டலத்தை விலக்கிக் கொண்டு சூரிய ஒளி தலைகாட்டுவதுபோல் அவருடைய மனத்தைச் சூழ்ந்து கொண்டிருந்த சந்தேக இருள் நீங்கி நம்பிக்கையின் ஒளிக்கிரணங்கள் தோன்ற ஆரம்பித்தன.

துளசிங்கம் சரியாக ஆறு மணிக்கு உஸ்மான் ரோடில் இருந்த ஆராய்ச்சிசாலைக்கு வந்து சேர்ந்தார். அந்த பங்களாவின் வாசலில் நின்று கொண்டிருந்த காவல்காரன், ஆராய்ச்சி சம்பந்தமான கருவிகள் சிலவற்றை வாங்குவதற்காக ஐந்தரை மணிக்கு ஆதிசேகவன் வெளியே சென்றார் என்றும், யாராவது தன்னைத் தேடிக்கொண்டு வந்தால் மாடி ஹாலில் அமர்ந்திருக்கச் செய்யும்படி சொல்லிவிட்டுச் சென்றதாகவும் கூறினார்.

ஆதிகேசவன் அப்பொழுது அங்கு இல்லாததே நல்லது என்று துளசிங்கத்திற்குத் தோன்றியது. ஆதிகேசவன் திரும்புவதற்குள் அவருடைய அறையைப் பரிசோதனை செய்துமுடித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் மாடிக்குச் சென்றார். ஆதிகேசவனின் அறையில் அவருக்குத் தேவையான ஆதாரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஒருவித ஏமாற்றமடைந்த வண்ணம் ஹாலிலிருந்த சோபாவில் வந்து அமர்ந்தார் அவர். அவருக்கு முன்னாலிருந்த டீபாயில் நாலைந்து கடிதங்களும் வெவ்வேறு விலாசமிட்ட உறைகளும் வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கடிதங்களை எடுத்துப் பார்த்தார் அவர். மறுநாள் எழும்பூர் பிருந்தாவனம் ஓட்டலில் வரவிருக்கும் டாக்டர்களுக்கு அவைகள் எழுதப்பட்டிருந்தன. ரசாயனங்களைப்பற்றியும் ஆராய்ச்சி சம்பந்தமான விஷயங்களும்தான் அதில் அடங்கி இருந்தன. அவைகளை மீண்டும் மேசையின்மீது வைக்க முயன்றபோது ஆதிகேசவன் துளசிங்கத்திற்கு எழுதிவைத்திருந்த குறிப்புக் கடிதம் ஒன்று அவருடைய கண்ணில் பட்டது.

"நண்பரே !

நான் உங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நீங்கள் வருவதற்கு முன்பு இக்கடிதங்களை அனுப்பி விடலாமென்று நினைத்தேன். ஆனால் திடீரென்று, உடனே புறப்பட்டு வரும்படி மௌண்டு ரோட்டில் இருக்கும் ஆராய்ச்சிக் கருவிகளை விற்கும் கம்பெனியிலிருந்து டெலிபோன் வந்தது. அதனால்

புறப்பட்டுவிட்டேன். நான் விரைவில் வந்து விடுவேன். கொஞ்சம் தாமதமானுல் தயவுசெய்து எனக்காகக் காத்திருக்கவும். இந்தக் கடிதங்கள் இன்றே அவசர மாகப் போகவேண்டும். நான் வருவதற்குத் தாமத மானுல் தயவுசெய்து தபாலில் சேர்த்துவிடச் செய்யவும். சிரமத்திற்குத் தயவுசெய்து மன்னிக்கவும்—

ஆதிகேசவன்."

அப்பொழுது ஆறு மணிக்கு மேலாகி இருந்தபடியால், அந்தக் கடிதங்களை உறையில் திணித்து உறைகளின் முனையில் இருந்த பசையை நாக்கினுல் ஈரமாக்கி ஒட்டிக் காவல்காரனிடம் கொடுத்துத் தபாலாபீஸுக்கு அனுப்பிவிட்டுச் சோபாவில் சாய்ந் தார் துளசிங்கம்.

ஐந்துநிமிட நேரத்திற்குப் பிறகு திடீரென்று அவருடைய தொண்டை அடைபடுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது, வயிற்றைப் புரட்டியது; இருதயத்தின் படபடப்பு அதிகரித்தது. மயக்கத்தினுல் கண்கள் செருகின! மறுகணம் அவருக்குப் பயம் வந்துவிட்டது. தன் உயிருக்கு அபாயம் நேர்ந்து விட்டது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. மயக்கத்தையும் மனத்துடிப்பையும் தடுமாற்றத்தையும் பொருட்படுத்தாமல் மளமளவென்று கீழே வாசல் பக்கம் வந்தார். நல்ல வேளையாக அந்தப் பக்கம் ஒரு டாக்ஸி வந்தது. கையைத்தட்டி அதை நிற்க வைத்து அதில் ஏறி அமர்ந்துகொண்டு ராயப் பேட்டை ஆஸ்பத்திரிக்கு ஓட்டிச் செல்லும்படி உத்தரவிட்டார். அவ்வளவுதான், மறுகணம் என்ன நடந்தது என்று தெரியாது! விழிகள் உருள, பார்வை பஞ்சடைய மயக்கமாகிச் சாய்ந்து விட்டார் துப்பறியும் துளசிங்கம்!

இன்ஸ்பெக்டர் சங்கரன் ஆதிகேசவனின் ஆராய்ச்சி சாலையில் என்ன நடக்கிறது என்று கவனிப்பதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் மேசையின் மீதிருந்த டெலிபோன் மணி ஒலித்தது! டெலிபோனைக் கையில் எடுத்தார் இன்ஸ் பெக்டர்.

"ஹலோ, போலீஸ் ஸ்டேஷனா?" என்றது ஒரு பெண்ணி னுடைய குரல்.

"ஆமாம்! நீங்கள் யார்? உங்களுக்கு என்னவேண்டும்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"நான் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலிருந்து போன் செய் கிறேன். துப்பறியும் துளசிங்கம் இங்கு அனுமதிக்கப்பட்டிருக் கிறார். தயவுசெய்து உடனே புறப்பட்டு வரமுடியுமா?" என்று கூறினாள் அந்தப் பெண்.

"துளசிங்கம் ஆஸ்பத்திரியில் இருக்கிறாரா? அவருக்கு என்ன உடம்பு? சற்று நேரத்திற்கு முன்பு நன்றாக இருந்தாரே?"

"அது எனக்குத் தெரியாது. கால் மணி நேரத்திற்கு முன்பு ஒரு டாக்ஸியில் இங்கு வந்து சேர்ந்தார். அவர் மூர்ச்சையாகி இருந்தபடியால் ஆஸ்பத்திரியில் அனுமதித்து அவருக்குச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறோம்."

"அப்படியா? உடனே புறப்பட்டு வருகிறேன்" என்று கூறி டெலிபோனை வைத்துவிட்டு ராயப்பேட்டை ஆஸ்பத் திரிக்குக் கிளம்பினார் இன்ஸ்பெக்டர். சங்கரன் ஆஸ்பத்திரியை அடைந்தபோது துப்பறியும் துளசிங்கம் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். சில தினங்களுக்கு முன்பு தில்லைநாயகத்தைப் பரிசோதனை செய்த அதே டாக்டர்தான் இப்பொழுது துளசிங்கத்தையும் கவனித்துக் கொண்டிருந்தார். டாக்டர், துளசிங்கத்திற்கு ஊசிபோட்டு சில மருந்துகளைக் கொடுக்கும்படி சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டரை அழைத்துக்கொண்டு அவ் வறையைவிட்டு வெளியே வந்தார்.

"துளசிங்கத்தின் உடல் நிலை ஏன் திடீரென்று பாதிக்கப்பட் டிருக்கிறது? அவர் ஒரு மணிக்கு முன்பு என்னுடன் பேசிக் கொண்டிருந்தாரே, அப்பொழுது அவர் நன்றாகத் தானே இருந்தார், அவர் உடம்பிற்கு என்ன?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

அவருடைய ரத்தத்தில் திடீரென்று விஷக்கலப்பு ஏற்பட்டு இருதயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது எப்படி ஏற்பட்டது என்று சொல்லமுடியவில்லை. அவர் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்ததினால், நான் விசேஷ மாற்று மருந்தை உபயோகித்திருப்பதினால் உயிருக்கு அபாயம் ஒன்று மில்லை. இன்னும் சற்று நேரத்தில் அவருக்கு உணர்வு வந்து விடும்" என்று கூறினார் டாக்டர்.

இன்ஸ்பெக்டர் திகிலடைந்து போனார். ஆதிகேசவனைப் பார்க்கச் சென்ற வரையில் அவர் நன்றாகத்தான் இருந்திருக் கிறார். பிறகு அவருடைய இருதயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதிகேசவனை அவர் சந்தித்தாரா? ஆராய்ச்சிசாலையில் என்ன நடந்தது? எவ்வாறு அவருடைய உடல் பாதிக்கப்பட்டது என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு உணர்வுபெற்றார் துளசிங்கம். நடந்த விஷயங்களும்தான் இருக்கும் இடமும் அவருக்கு விளங்கிய போதிலும் உடனே அவரால் பேசமுடியவில்லை. !

இன்ஸ்பெக்டர் அவரை விசாரித்தார். துளசிங்கம் ஆதிகேச வனின் ஆராய்ச்சிசாலைக்குச் சென்றதும் அவர் அவசர வேலை யாக வெளியே சென்றிருந்ததையும், அவர் எழுதிவைத்திருந்த குறிப்புக் கடிதப்படி கவர்களை ஒட்டி வேலைக்காரனின் மூலம் கொடுத்து அனுப்பியதையும் உடனே உடல் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டு வந்ததையும் விளக்கினார்! அந்தக் கவர்களின் பசையில் ஒருவித விஷம் தடவப்பட்டிருக்க வேண்டும் என்றும், நாக்கினால் அந்தப் பசைகளைத் தடவியவுடன் விஷம் உமிழ்நீருடன் கலந்து உடலினுள் சென்றுவிட்டது என்று துளசிங்கம் முடிவுசெய்து கொண்டார். அந்தக் கவரின் உறை களில் யார் விஷம் தடவி இருக்கமுடியும் என்ற கேள்வீ எழுந்தது. இன்ஸ்பெக்டருக்கும் துப்பறிபவருக்கும் ஆதிகேச வனின்மீது சந்தேகம் ஏற்படாமல் இல்லை. அவர் அவசர வேலையாக வெளியே செல்லாமல் இருந்திருந்தால் அந்த உறை களை அவர்தான் ஒட்டியிருப்பார். அப்பொழுது அவரே அல்லவா இவ்வித நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருப்பார்?—இந்தக் கேள்வி அவர்களுக்குச் சற்று குழப்பத்தை உண்டாக்கியது. ஆயினும் ஆதிகேசவனின் மீதிருந்த சந்தேகம் நீங்கிவிடவில்லை! குற்றவாளி தான் அந்தக் கவர்களில் விஷம் தடவி இருக்கவேண்டும். அவன் விஷயம் வெளிப்பட்டு விடலாம் என்ற பயத்தினால் அந்தக் கவர்களைக் கண்டிப்பாகப்பிருந்தாவனம் ஓட்டலிலிருந்து அப்புறப் படுத்த முயற்சிப்பான். அந்தக் கவர்களை பிருந்தாவனம்

ஓட்டலில் யார் வாங்கப்போகிறுர் ? அவர் அதை என்ன செய்யப் போகிறுர் என்பவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தால் குற்ற வாளியைக் கண்டுபிடித்துவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது அவருக்கு !

டாக்டரின் பெருமுயற்சியினுலும், விசேஷ மருந்துகளை உபயோகப் படுத்தியதினுலும் அன்று இரவிற்குள் துப்பறியும் துளசிங்கத்தின் உடல் நிலை சரியாகி எழுந்து நடமாடுவதற் கான தெம்பு ஏற்பட்டுவிட்டது. மறுநாள் காலை டாக்டரின் வேண்டுகோளையும் நிராகரித்துவிட்டு ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்துகொண்டு காலை ஒன்பது மணி சுமாருக்கு பிருந்தாவனம் ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்தார் துளசிங்கம்.

ஓட்டல் மானேஜரைச் சந்தித்துத் தான் யாரென்பதை வெளி யிட்டார். மானேஜருக்கு அவரிடம் விசேஷ மதிப்பு ஏற்பட்டது. துளசிங்கம் கேட்ட கேள்விகளுக்குத் தடுமாற்றமின்றி 'பளிச்' சென்று பதில் சொல்லிக்கொண்டே வந்தார். முதல்நாள் ஆதிகேசவனின் குறிப்புக் கடிதத்தின்படி வேலைக்காரனிடம் கொடுத்து அனுப்பிய கவர்களில் எழுதப்பட்டிருந்த பெயரை அவர் நன்ருக நினைவு வைத்துக்கொண்டிருந்தார். அவைகளில் டாக்டர் நீலகண்டன் என்று எழுதப்பட்டிருந்தபடியால் அந்தப் பெயர் கொண்ட ஆசாமி யாராவது அந்த ஓட்டலில் வசித்து வருகிறுர்களா என்று விசாரித்தார்.

"நேற்று நீலகண்டன் என்பவர் இன்று தான் இங்கு வரப் போவதாயும், தனக்கு ஒரு அறையை எற்பாடு செய்து வைக்கும் படியும் கடிதம் எழுதி பணம் அனுப்பியிருந்தார். மாடியில் ஓர் அறையை அவருக்காக ஒழித்து வைத்திருக்கிறுேம். ஆனுல் அவர் இன்னும் வரவில்லை. அவருக்குச் சில கடிதங்கள் வந்திருக் கின்றன. அவைகளை இந்த போர்டில்தான் வைத்திருக்கிறேன்" என்று கூறி வலது பக்கத்துச் சுவரில் இருந்த கண்ணுடி அலமாரி யில் வைக்கப்பட்டிருந்த கடிதங்களை எடுத்து துளசிங்கத்தினிடம் கொடுத்தார். அவைகள் அனைத்தும் தான் நேற்று ஓட்டி அனுப்பியவைகள்தான் என்று விளங்கி விட்டன. ஆகவே தன்னைப்பற்றி ஒருவரிடமும் வெளியிட வேண்டாம் என்று சொல்லிவிட்டுத் தினசரிப் பத்திரிகையினுல் தன்னை மறைத்த வண்ணம் நீலகண்டனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தார் துளசிங்கம்.

அவருக்கு முன்னுலிருந்த மணி நிதானமாகப் பத்து முறை ஒலித்தது. அந்த மணியோசை அடங்குவதற்கும் பிருந்தாவனத்

தினுள் ஒரு டாக்ஸி வேகமாகப் பிரவேசிப்பதற்கும் சரியாக இருந்தது.

துளசிங்கம் விழிகளை மட்டும் உருட்டி வருவது யாரென்று கவனித்தார். நாகரிகமான உடைகளை அணிந்து பெரிய மூக்குக் கண்ணுடியால் முகத்தை மறைத்துக் கொண்டிருந்த ஆதிகேசவன் அந்த டாக்ஸியிலிருந்து இறங்கினுர் !

ஏற்கனவே அவர்மீது ஏற்பட்டிருந்த சந்தேகம் இப்பொழுது அதிகமாகிவிட்டது. தினசரியைப் படிப்பதுபோல் தோற்ற மளித்த போதிலும் அவருடைய கவனம் அனைத்தும் ஆதிகேச வனின் மீதுதான் பதிந்திருந்தது. ஆதிகேசவன் கம்பீரமாக நடந்து மானேஜரின் முன்னுல் போய் நின்றுர்.

"என் பெயர் நீலகண்டன்! நான் எழுதிய கடிதம் உங்க ளுக்குக் கிடைத்திருக்கும் என்று எண்ணுகிறேன்" என்று கேட் டார் அவர்.

"நீங்கள்தானு மிஸ்டர் நீலகண்டன்? மாடியில் இருக்கும் ஒன்பதாவது நெம்பர் அறையை உங்களுக்கு ஏற்பாடு செய்திருக் கிறேன். காலையிலேயே உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந் தேன்" என்றுர் மானேஜர்.

"வண்டி வருவதற்குத் தாமதமாகி விட்டது. அத்துடன் வேறு ஒருவரையும் பார்க்கப் போயிருந்தேன். அதனுல்தான் இவ்வளவு நேரமாகி விட்டது. அது சரி, மாடி அறையின் சாவியைக் கொடுங்கள்" என்று கேட்டார் அவர். மானேஜர் ஒரு முறை அவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மாடி அறையின் சாவியை எடுத்துக் கொடுத்தார். ஆதிகேசவன் மாடிக்குச் செல்லப் படிக்கட்டுகளில் காலை வைத்தார். மறுகணம் எதையோ நினைத்துக்கொண்டவர் போல், "எனக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கின்றதா?" என்று கேட்டார்.

"உங்கள் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. நான்கு கடிதங்களில் வெவ்வேறு டாக்டர்களின் பெயர்கள் போடப்பட் டிருந்த போதிலும் உங்கள் வசம் ஒப்படைக்கும்படி குறிப்பிடப் பட்டிருக்கின்றன" என்று கூறி அவைகளை அவரிடம் கொடுத் தார் ஓட்டல் மானேஜர். ஆதிகேசவன் அவைகளைப் பார்க்க வில்லை; அலட்சியமாகக் கோட்டுப் பையினுள் திணித்துக்கொண்டு கம்பீரமாக மாடிப் படிக்கட்டுகளில் நடந்து சென்றுர்.

ஆதிகேசவன்தான் குற்றவாளி என்பது துப்பறியும் துளசிங்கத்திற்கு இப்பொழுது நிதர்சனமாகத் தெரிந்துவிட்டது.

தில்லைநாயகத்தைக்கொன்றவர் அவர்தான்; கவர்களில் விஷத்தைத் தடவி, தன்னைக் கொல்லத் திட்டமிட்டதும் அவர்தான் !! இதில் சந்தேகம் இல்லை ! அவர் அந்தக் கவர்களை மறைக்க முயலுவதற்கு முன்பு அவைகளை அபகரித்து விடவேண்டும் என்று விரைந்து அவரைப் பின்தொடர்ந்து சென்றார் துளசிங்கம்.

மாடியில் இருந்த ஒன்பதாம் நெம்பர் அறையின் கதவைத் தட்டினார் துளசிங்கம். ஆதிகேசவன் கதவைத் திறந்தார். அடுத்த கணம் துளசிங்கத்தைக் கண்டு திகைப்படைந்து போனார் !

"நீங்களா ?......இங்கு எப்படி வந்தீர்கள் ?......நான் இங்கு இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும் ?" என்று குழப்பம் நிறைந்த குரலில் கேட்டார்.

"நான் டாக்டர் நீலகண்டனைப் பார்க்க வந்தேன் ! நீங்கள் உங்கள் பெயரை இப்படி மாற்றி வைத்துக் கொள்வீர்கள் என்று நான் நினைக்கவில்லை ! அதுசரி ! நேற்று என்னைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன்தானே இந்தக் கவர்களின் மேல் பகுதியில் விஷத்தைத் தடவி வைத்து, அவைகளை ஒட்டி அனுப்பி வைக்கும்படி எழுதி வைத்திருந்தீர்கள்?" என்று கேட்ட வண்ணம் அவர் மானேஜரிடம் வாங்கி வந்து அவ்வறையிலிருந்த மேசையின்மீது போட்டிருந்த கவர்களை எடுத்துப் பத்திரப் படுத்திக்கொண்டார் துளசிங்கம்.

"நான் உங்களைக் கொலை செய்யப் பார்த்தேனா ? நீங்கள் சொல்வதும் ஒன்றும் புரியவில்லையே ?" என்று விழிப்பது போல் பாவனை செய்தார் ஆதிகேசவன்.

"எல்லாம் எனக்குத் தெரியும் ! உண்மையை மறைக்க வேண்டாம். 'நீலகண்டனின் வசம் ஒப்படைக்கும்படி கடிதங்கள் எழுதி, ஏன் அவைகளுக்குத் தனியாகக் கவர்களை வைத்திருக்க வேண்டும் என்று நான் அப்பொழுதே சந்தேகப்பட்டேன் ! ஆனால் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றே உங்களுடைய கடிதப்படி செய்தேன். கடைசியில் அது என் உயிருக்கே அபாயத்தை விளைவிக்கப் பார்த்தது ! அது சரி ! தில்லைநாயகத்தின் மீதிருந்த பொறாமையினாலும், அவருடைய ஆராய்ச்சியின் பயனை அடைய வேண்டும் என்பதற்காகவும் நீங்கள்தானே அவரைத் தந்திரமாகக் கொலை செய்தீர்கள்."

ஆதிகேசவன் பதிலொன்றும் சொல்லாமல் துளசிங்கத்தை ஆத்திரமாகப் பார்த்தார். பிறகு கரங்களை முகவாய்க் கட்டையில் பொறுத்திய வண்ணம் வைத்த விழி வாங்காமல் துளசிங்கத்தைப்

பார்த்தவண்ணம் மௌனமாக அமர்ந்துவிட்டார். துளசிங்கத்திற்கு ஆதிகேசவனின் மீது அளவு மீறிய ஆத்திரம் வந்தபோதிலும் அதை வெளிக்காட்டாமல் அவர் செய்த குற்றங்களை வெளிப்படுத்த ஆரம்பித்தார்.

"நீங்கள் தில்லைநாயகத்துடன் நெருங்கிப் பழகி வந்திருக்கிறீர்கள். அவர் தன் ஆராய்ச்சியில் மகத்தான வெற்றிபெற்று வருவது உங்களுக்குப் பொறாமையை உண்டாக்கி இருக்கிறது. ஆராய்ச்சி வெற்றி பெற்றுவிட்டால் அதனால் வரக்கூடிய வருமானத்தில் பாதிதானே கிடைக்கிறது என்று எண்ணி, அவரை ஒழித்துக் கட்டிவிட்டு அவர் கண்டுபிடித்து வைத்திருக்கும் ரகசியங்களைப் பயன்படுத்தி பெருஞ் செல்வந்தராகத் திட்டமிட்டிருக்கிறீர்கள். தில்லைநாயகத்தை ஒழிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறீர்கள். சென்ற செவ்வாய்க்கிழமையன்று விஜயவல்லியிடமிருந்து வந்த எச்சரிக்கைக் கடிதத்தை அவர் காண்பித்து இருக்கிறார். அன்றே உங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்தீர்கள். உண்மை வெளியானாலும் விஜயவல்லியின் மீது சந்தேகம் ஏற்பட்டுவிடும் என்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்கள். அன்று தில்லைநாயகத்தினிடம் இருமல் மாத்திரைகள் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். உங்களிடமிருந்த மூன்று மாத்திரைகளிலும் விஷத்தை கலந்திருக்கிறீர்கள். அன்று மாலை உங்களுடன் வந்து கொண்டிருந்த அவர் இருமியபோது விஷம் கலந்த இரண்டு மாத்திரைகளை அவருக்குக் கொடுத்து விட்டீர்கள். உங்கள் மீது சந்தேகம் ஏற்படாமல் இருப்பதற்காக மீதி ஒன்றை விழுங்கிவிட்டீர்கள். அதனால்தான் அவர் இறந்து விட்டார். நீங்கள் பிழைத்து விட்டீர்கள். இந்த வழக்கில் குழப்பத்தை உண்டாக்குவதற்காக நீங்கள்தான் உங்கள் அறையில் இருந்த ஆராய்ச்சிக் கருவிகளை உடைத்து நொறுக்கி இருக்கிறீர்கள். அந்த பங்களாவின் பின்புறம் இருந்த கண்ணாடி ஜன்னலையும் நீங்கள்தான் உடைத்துச் சிதறச் செய்தீர்கள்; விஜயவல்லி தன் கணவரைப் பயமுறுத்தி அவரிடமிருந்து கடிதம் ஒன்று வாங்குவதற்காகச் சில ஏற்பாடுகளைச் செய்திருந்தபடியால்தான் இந்த வழக்கில் இத்தனை குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நான் இங்கு வருவதற்குச் சற்று நேரத்திற்கு முன்பு விஜயவல்லி என்னைக் காண வந்திருந்தாள். மாரிசாமி பணத்திற்காகத்தான் அவளைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறான் என்றும், தில்லைநாயகத்தின் சொத்து அனைத்தும் வக்கீல் பஞ்சநாதனுக்கும் தனஞ்சயனுக்கும் போய்விடப் போகிறது என்பதை அறிந்து கொண்டு அவன் தன்னைக் கைவிட்டு விட்டான் என்றும் கூறிக்

கண்ணீர் விட்டாள். தன் கணவனுக்குச் செய்த துரோகத்திற்காக இப்பொழுது அவள் பெரிதும் வருந்துகிறாள். பெண்கள் எவ்வளவுதான் படித்திருந்த போதிலும் என்ன தான் முற்போக்கு வாதிகளாக இருந்தபோதிலும் அவர்களுக்குக் கணவன்தான் தெய்வம் என்பதை அவளே இப்பொழுது ஒப்புக்கொள்கிறாள்! மாரிசாமி தில்லைநாயகத்தின் செல்வத்தை அடைய, விஜயவல்லியை ஒரு கருவியாகப் பயன்படுத்த நினைத்தான். ஆனால் அவன் முயற்சி தோல்வி அடைந்துவிட்டது.

"ஏனென்றால், அவனை நீங்கள் முந்திக்கொண்டு விட்டீர்கள். தில்லைநாயகத்தின் பணத்தைப் பதுக்கி வைத்தீர்கள். எனக்கு உங்கள்மீது சந்தேகம் தோன்றிவிட்டது என்பதை உணர்ந்து கொண்டு, என்னை ஒழித்து விட்டால் பிறகு கவலையற்று வாழலாம் என்று ஒரு நூதனமான முறையைக் கையாண்டு என்னைக் கொலை செய்யப் பார்த்தீர்கள். நான் அதிர்ஷ்ட வசத்தினால் பிழைத்துவிட்டேன். தில்லைநாயகத்தைக் கொலை செய்தது முதல் குற்றம்! என்னை ஒழித்துக்கட்ட தீர்மானித்தது இரண்டாவது குற்றம்!! இந்த இரண்டு குற்றங்களையும் நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று ஏளனம் கலந்த குரலில் கேட்டார் துளசிங்கம்.

"நீங்கள் உண்மையைக் கண்டுபிடித்து விட்டீர்கள்! என்னைக் குற்றவாளியாக்க உங்களிடம் ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது நான் எவ்வாறு உண்மையை மறைக்க முடியும்? தில்லைநாயகத்தின் மரணத்திற்கு நான்தான் காரணம்! ஆனால் அந்தப் பழியை விஜயவல்லியின்மீது சுமத்த முயன்றேன். உங்கள் பெருமுயற்சி என்னைத் தோல்வி அடையச் செய்துவிட்டது. 'நிரபராதிகள் தண்டிக்கப் பட்டதில்லை; குற்றவாளிகள் தண்டனையிலிருந்தும் தப்பியதும் இல்லை' என்பதை நீங்கள் நிரூபித்து விட்டீர்கள். உங்கள் வெற்றிக்கு என்னுடைய பாராட்டு. எனக்கு தொண்டை சரியாக இல்லை. இந்த இரண்டு மாத்திரைகளை மட்டும் விழுங்குவதற்கு அனுமதிப்பீர்களா?" என்று கோட்டுப் பையிலிருந்து ஒரு சிறிய கண்ணாடிப் புட்டியை எடுத்தார் ஆதிகேசவன்.

"அவசரப்படாதீர்கள்! அவ்வாறு அனுமதி கொடுக்க எனக்கு அதிகாரம் இல்லை. இன்ஸ்பெக்டர் சங்கரனை வரவழைக்கிறேன். அவரைக் கேட்டுகொண்டு எதையும் செய்யுங்கள்" என்று அந்தக் கண்ணாடிப் புட்டியை அவரிடமிருந்து சட்டென்று வாங்கிப் பத்திரப்படுத்திக்கொண்டு அவ்வறையின் மூலையில் இருந்த ரிஸீவரைக் கையிலெடுத்து ஒரு நெம்பரைத் திருப்பினார் துளசிங்கம்.

"ஹலோ! போலீஸ் ஸ்டேஷனா? இன்ஸ்பெக்டர் சங்கரனைக் கொஞ்சம் கூப்பிடுகிறீர்களா?" என்று கேட்டுவிட்டு வெற்றிப் புன்னகை தவழப் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய இடது கை, கோட்டுப் பையிலிருந்து எடுத்த பேனாவினால் அரும்பு மீசையை ஒரு முறை தடவி விட்டது. அந்தச் செய்கை துப்பறியும் துளசிங்கத்தின் வெற்றியைப் பறை சாற்றுவதுபோல் இருந்தது.

முற்றும்

அ க லை
தி.க. ...

PRINTED AT SRI RAJAH POWER PRESS, MADRAS-14.

# லிப்கோ தமிழ்ச் சிறு நூல்கள்

## ஒவ்வொன்றின் விலை 4 அணு தான்!

சுவை மிக்க தமிழ்ப் பெரு நூல்களைச் சுருக்கி கையடக்கயளவில் சிறு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளது.

1. வள்ளுவர் வாய்மொழி (திருக்குறள் மூலம்).
2. பொய்யாமொழிக்குப் பொழிப்புரை (திருக்குறள் தெளிவு).
3. வள்ளுவர் வகுத்த வழி (குறள் விளக்கம்).
4. வள்ளுவர் காட்டிய ஏர்.
5. வள்ளுவர் கண்ட காதலர்.
6. வள்ளுவர் காட்டிய இல்லறம்.
7. நாலடியார் (மூலம்).
8. நாலடியார் (தெளிவுரை).
9. பிற்கால நீதி நூல்கள்.
10. கடையெழு வள்ளல்கள்.
11. இலக்கியச் சோலையிலே.
12. பாரதியும், பைந்தமிழும்.
13. வருக! வாழ்க! (அழைப்பும், வாழ்த்தும்).
14. சிலப்பதிகாரச் சுருக்கம் (கண்ணகியின் கதை).
15. சிலப்பதிகாரப் பெண்டிர்.
16. மணிமேகலைக் கதைச் சுருக்கம்.
17. சீவக சிந்தாமணி கதைச் சுருக்கம்.
18. நள வெண்பா மூலம்.
19. நள வெண்பா சுருக்கம்.
20. அரிச்சந்திர புராணம் (கதைச் சுருக்கம்).
21. குசேலோபாக்கியானச் சுருக்கம்.
22. பன்னிரு ஆழ்வார்கள் (வாழ்க்கை வரலாறு).
23. சூடிக்கொடுத்த சுடர்க் கொடி.
24. திருவிளையாடற் புராணம் (கதைச் சுருக்கம்).
25. பெரிய புராணம் (சுருக்கம்).
26. திருஞானசம்பந்தர் (வரலாறு).
27. திருநாவுக்கரசர் (வாழ்க்கை வரலாறு).
28. சுந்தரர் (வன்றொண்டர் வரலாறு).
29. மாணிக்கவாசகர் (திருவாதவூரர் வரலாறு).
30. கம்பரது பால காண்டம் (கதைச் சுருக்கம்).
31. கம்பரது அயோத்தியா காண்டம் (கதைச் சுருக்கம்).
32. கம்பரது ஆரணிய காண்டம் (கதைச் சுருக்கம்).
33. கம்பரது கிஷ்கிந்தா காண்டம் (கதைச் சுருக்கம்).
34. கம்பரது சுந்தர காண்டம் (கதைச் சுருக்கம்).
35. கம்பரது யுத்த காண்டம் முற்பகுதி (கதைச் சுருக்கம்).
36. கம்பரது யுத்த காண்டம் பிற்பகுதி (கதைச் சுருக்கம்).
37. வில்லிபுத்தூராரின் ஆதி பருவச் சுருக்கம்.
38. வில்லிபுத்தூராரின் சபா, ஆரணிய பருவச் சுருக்கம்.
39. வில்லிபுத்தூராரின் விராட, உத்தியோக பருவச் சுருக்கம்.
40. வில்லிபுத்தூராரின் வீட்டும பருவச் சுருக்கம்.
41. வில்லிபுத்தூராரின் பாரதப் போர்ச் சுருக்கம்.
42. சில தனிப்பாடற் காட்சிகள்.
43. கந்த புராணம் (முதற்பகுதி).
44. கந்த புராணம் (பிற்பகுதி).
45. குமரேச சதகம் (மூலமும், குறிப்புரையும்).
46. வளையாபதி.
47. குண்டலகேசி.
48. நந்தனார்.

குறிப்பு: இதே வரிசையில் இன்னும் பல நூல்கள் தயாராகியுள்ளன.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மவுண்ட் ரோடு, சென்னை-2 & ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் ஏனைய புத்தகக் கடைகள்.

★ லிப்கோ நடமாடும் புத்தக ''வான்'' களிலும் கிடைக்கும்.

COVER PAGE PRINTED AT NEO ART PRESS, MADRAS-2.